www.padippakam.com

# தொழிலாளர் பாதை

● மாதமிரு இதழ் — இதழ் 404 ● 1991 ஏப்ரல் 12 வெள்ளிக்கிழமை

**ஏப்ரல் 21**

**தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொள்ளுங்கள்**

- உலக வங்கி வேலைத்திட்டத்துக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடு!
- யூ. என். பி.யை வெளியேற்றி தொழிலாளர்— விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

இடம் : ஹற்றன் டிக்கோயா நகரசபை

நேரம் : காலை 10மணி.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

## உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மக்கள் முன்னணியை நிராகரி!

# ஜனநாயக நப்பாசைகளுக்கு இடமளியாதீர்!

யூ. என். பி. அரசாங்கம் நடாத்தவுள்ள மாநகரசபை, பிரதேச சபைத் தேர்தல்கள் எந்தவிதத்திலும் மக்கட் பாசிசக் கொலைப் பிரேமதாச ஆட்சியின் ஜனநாயகமயமாக்கத்தை குறிக்காது எனவும், ஆதலால் எந்தவிதமான ஜனநாயக நப்பாசைகளுக்கும் இஞ்சித்தும் இடமளிக்கக் கூடாது எனவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டிக் கொள்கின்றது.

யூ. என். பி.யின் தேர்தல் நம்பிக்கைப் பொறுப்பாளரான தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை 'அங்கீகரிக்கப்பட்ட கட்சி'யாகப் பிரிவு செய்யத்தொடர்ந்து மறுத்து வருவதன் மூலம் இந்த அரசாங்கத்தின் ஜனநாயகத் தேர்தல் இலட்சணம் நன்கு தெளிவாகின்றது. இந்நிலைமையில் கீழ் 'சுயேட்சைக் குழு' என்ற 'லேபலின்' கீழ் தேர்தலில் நிற்பதைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிராகரிக்கின்றது.

23 வருடங்களுக்கு மேலாகத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தனது கட்சியின் பெயரில் தேர்தலில் நிற்கும் வாய்ப்பை அடைக்க மறுப்பதன் மூலம் சுயாதீனமான தொழிலாள வர்க்க அரசியல் வழிமுறை தொடர்பாக முதலாளி வர்க்கம் கொண்டுள்ள வெறுப்பையும் பீதியையும் வெளிக்காட்டிக் கொண்டுள்ளது. இதற்கு ஏற்ற விதத்தில் சமசமாஜ — நவசமசமாஜ — இ. தொ. கா. தலைவர்கள் தொழிற்படத் தொடங்கியுள்ளனர். தத்தம் கட்சிகளது தேர்தல் சின்னங்களைக் கூடக் காட்டிக்கொடுத்து விட்டு இத்தலைவர்கள் முதலாளித்துவ யூ. என். பி—ஸ்ரீ. ல. சு. க. முன்னணிகளில் நுழைந்து கொண்டுள்ளனர். முதலாளித்துவ அரசியல் கட்சிகளிலிருந்து வேறுபட்ட அரசியல் அடையாளத்தைச் சூழத் தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் அணிதிரளவுள்ள அடிப்படை உரிமையைக் கூடப் பறிக்கும் விதத்தில் இந்தப் பிராதேசிய சபைகளுக்கான தேர்தலில் ஆளும் வர்க்கமும் அவர்களின் கைக்கூலிகளான துரோக தொழிலாளர் அதிகாரத்துவங்களும் ஒன்றிணைந்து தொழிற்பட்டு வருகின்றன.

இப்பிராதேசிய சபைத் தேர்தல்கள் மூலம் 1988—89 ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் யூ. என். பி. பெற்றுக்கொள்ள முடியாது போன 'மக்களாணையை' நிரூபித்துக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொள்ள முயல்கின்றது.

அதன் மூலம் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இடம்பெற்றுவரும் இனவாத யுத்தத்தினையும், கிராமப்புற ஏழைகளுக்கும் இளைஞர்களுக்கும் எதிராக இடம்பெறும் கொலைகாரப் பயங்கர இயக்கத்தினையும் அவ்வாறே தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் சகல உரிமைகளைப் பறித்து எடுப்பதும் கூட இந்த 'மக்களாணையின்' படியே இடம்பெறுவதாகக் காட்டிக்கொள்ளலாம் என ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர்.

உலக வங்கிக் கட்டளையின் பேரில் தொழிலாள வர்க்கத்தின் தொழில்; சேவை நிலைமைகளை அழித்தொழிக்க அரசாங்கம் ஆரம்பித்துள்ள ஒருதொகை தாக்குதல்களுக்கு எதிராகத் தோட்டத்துறையிலும், நகர்ப்புற அரசாங்க தனியார் துறைகளிலும் தொழிலாளர்கள் ஒரு தொகை வேலைநிறுத்தங்கள் மூலம் வர்க்கப் போராட்டத்தில் இறங்கியுள்ள நிலையிலேயே இம்மோசடி இடம் பெறுகின்றது.

### தோட்ட வேலைநிறுத்தம்

பெப்ரவரி 27ம் திகதி தோட்டத் துறையில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். இந்த வேலைநிறுத்தத்தில் சேர்ந்து கொள்ள வேண்டாம் என இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் விடுத்த கட்டளையையும் தூக்கி வீசிவிட்டு, பல்லாயிரக்கணக்கான இ. தொ. கா. அங்கத்தவர்களும் ஏனைய சங்கங்களுடன் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். தொண்டமான் யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்ற கருத்து பரந்த அளவில் பெருகிவருவதோடு, எதிர்ப்பு எல்லையை தாண்டிச் செல்லும் நிலையிலான வேலைநிறுத்தத்துக்கு தோட்டத்தொழிலாளர்களிடையே ஆதரவு வளர்ச்சி கண்டு வருகின்றது.

அத்தோடு கொழும்புச் சுற்றுப்புறங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அநேக தனியார் கம்பனி ஊழியர்கள் கடந்த வாரம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழில் தொழிற்சங்க உரிமைகளைக் காக்கும் பொருட்டும், வேலைத்தலங்கள் மூடப்படுவதற்கு எதிராகவும் இப்போராட்டங்கள் பரவி வருகின்றன.

இரண்டு அரசியல் கோரிக்கைகளைக் கொண்ட சி. எம். யூ.வின் ஒரு நாள் வேலைநிறுத்தமானது ஒன்றரை தசாப்தத்தின் பின்னர் இடம் பெற்றுள்ளது.

அரசாங்கக் நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்களை உலக வங்கிக் கட்டளையின்படி வெளிநாட்டு, உள்ளூர் முதலாளிகளுக்கு கையளிப்பதற்கு எதிராக தொலைத்தொடர்பு நிலையம் உட்பட இன்னும் பல வேலைத்தலங்களைச்சேர்ந்த தொழிலாளிகளின் பிரச்சாரம் வளர்ச்சி கண்டு வருகின்றது.

இலவசக் கல்வியையும், சௌக்கிய சேவையையும் தகர்த்துக் கட்ட அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுடன் நாடு பூராவும் வளர்ந்துள்ள மக்கள் எதிர்பானது தொழிலாள வர்க்கப் போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளமை ஆளும் வர்க்கத்துக்கு பெரும் கிலியைஉண்டுபண்ணியுள்ளது

யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு எதிராக தமிழ் தேசிய விடுதலைப் போராளிகள் தொடர்ந்து நடாத்தி வரும் தாக்குதல்களுடன் இவை இணையுமிடத்து சகப்படுத்த முடியாத கடும் நிலைமை ஏற்படும். படையாட்களை விமானங்கள் மூலம் குவித்து வடக்கு — கிழக்கில் திணிக்கும் இராணுவ முகாம்களில் இருந்து சடலங்களையும் காயமடைந்தோரையும் விமானங்கள் மூலம் தினமும் ஏற்றி இறக்க வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. சிலாவத்துறை, கொக்கடியான், வேப்பங்குளம் முதலான இராணுவ முகாம்களுக்கு கடந்த இரண்டு வாரங்களாகக் கொடுக்கப்பட்ட தாக்குதலில் மட்டும் இறந்த படையாட்களின் எண்ணிக்கை 68 என உத்தியோக எல்லை அறிக்கைகள் கூறுகின்றன. இது இன்று காரைநகர் கடற்படை முகாம் மீதான தாக்குதலில் இறந்த படையாட்களின் எண்ணிக்கைக்கு முன்னர் கிடைத்த தரவுகளாகும்.

### சோடனை

இந்நிலையில் வட — கிழக்கு மாகாணங்களில் பிராதேசிய சபைகளுக்கான தேர்தல் சோடனையில் ஈடுபட யூ. என். பி.

(2-ம் பக்கம் பார்க்க)

## மேதின ஊர்வலமும் கூட்டமும்



★ ஏகாதிபத்தியத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத ஐக்கியத்தினை உறுதி செய்!

★ தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை நிறுத்து!— கிராமப்புற படுகொலைகளை நிறுத்து! உலகவங்கி— யூ. என். பி. திட்டங்களை தோற்கடி!

★ யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! தொழிலாளர் — விவசாயி அரசாங்கத்துக்கு போராடு!

★ உலக சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

ஊர்வலம்: மாலை 1/30 நியூஹாம் சதுக்கம் (கொச்சிக்கடை சேர்ச் அருகில்)

கூட்டம்: இரத்தினம் மைதானம் (கொட்டாஞ்சேனை) மாலை 5.00 மணி.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இளம் சோஷலிஸ்டுகள்

படிப்பகம்

# உள்ளூராட்சி சபை தேர்தல்களில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துக்குஇடம் இல்லை. தமிழ் தேசிய இனத் தொழிலாளர்களதும், ஏழைகளதும் தேவை, இனவாத முதலாளித்துவ அரசினைத் துடைத்துக் கட்டுவதே. யூ. என். பி.யுடனும் இனவாத அரசபடைகளுடனும் அணிசேர்ந்து கைக்கூலி கொலையாளிகளாக தொழிற்படும் புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. பி. டெலோ, ஈரோஸ் போன்ற இயக்கங்களுக்குவடக்கு—கிழக்கில் முதலாளித்துவ அரசின் தேர்தல் வேலைகளில் ஈடுபட முடியாமல் போயுள்ளது. குட்டி முதலாளித்துவத் தேசியவாத விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பேரம் பேசும் சமரசங்கள் மீண்டும் மீண்டும் தகர்ந்து கொட்டுவதானது முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு கிடையாது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

தென் மாகாணங்களில தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் வர்க்கப் போராட்டத்தினை சகல விதத்திலும் தவிர்க்க தொழிற்படுவதன் மூலம் யூ. என். பி. அரசாங்கத்தின் ஆளுமையை பேணிக்காக்கச் செயற்படும்சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ—இ. தொ. கா தலைவர்களதும் மற்றும் மத்தியவாதிகளதும் துரோகம் இந்நிலையிலேயே பன்மடங்காக அதிகரித்துள்ளது.

கிராமப்புற ஏழைகளுக்கும் இளைஞர்களுக்கும் எதிராக அரசபடையணிகளையும் குண்டர்கும்பல்களையும் ஏவிவிட்டு, படுகொலை, பயங்கர இயக்கம் நடாத்தி வரும் நிலையிலும் — அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்து வரும் நிலையிலும் தேர்தலில் போட்டியிட இத்தலைவர்கள் தயாராகியுள்ளார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் பொதுமக்களுக்கு எதிராக கொலைகார அரச பலத்தினைப் பயன்படுத்துவது நின்றபாடாய் இல்லை. ஆனால் இந்தத் துரோகத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கும் ஏழைகளுக்கும் கூறுவது என்ன? உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் பின்னணியில் பிற்போக்கு முதலாளித்துவ ஆட்சியின் இரத்தப் பலிவெறுப்புக்களை நிறுத்த முடியும்! இது தொழிலாளர்களையும் ஏழைகளையும் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கி, பலி கொடுக்கும் பொருட்டு ஆளும் வர்க்கத்துடன் அணிதிரள்வதன்றி வேறென்ன?

முதலாளித்துவ உலக நெருக்கடியின் மத்தியில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் "பலாத்காரமாக வேலைவாங்கு" என்ற சுலோகத்தின் கீழ் அணிதிரண்டுள்ள நிலையில் இத்துரோகத் தலைவர்கள் பரப்பிவரும் மக்கள் முன்னணி ஜனநாயக நப்பாசைகள் நூறுமடங்கு ஆபத்தானவையாகும். ஈராக்கில் தொழிலாள—ஒடுக்கப்படும்மக்களுக்கு எதிராக குண்டுமாரி பொழிந்த ஏகாதிபத்தியப் படைகளுக்கு விமான நிலைய வசதிகள் வழங்கவும் கூட உடன்பட்டதன் மூலம் பிரேமதாச ஆட்சியாளர்கள் இந்த இராணுவ ஆக்கிரமிப்பு வேலைத் திட்டத்தினை தாம் முழுமனே அங்கீகரிப்பதைக் காட்டினர். யூ. என். பி. அரசாங்கம் இந்த விதத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலாத்காரமாக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களால் இந்தக் கடைகெட்ட இராணுவ வழிமுறையை மூடிமறைத்துவிட முடியாது.

தொழிலாள வர்க்கம் இன்று இந்த ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்கம் தொடுக்கும் சகல தாக்குதல்களையும் தோற்கடிக்கும் பொருட்டு பொது வேலை நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த விதத்தில் வேலைத்திட்டத்தினை கலந்துரையாடி தீர்மானம் எடுக்கும் பொருட்டு சகல தொழிலாளர் அமைப்புக்களதும் தொழிற்சங்கங்களதும் பேராளர் மகாநாடு உடனடியாகக் கூட்டப்பட வேண்டும்

## பொது வேலைநிறுத்தம்

இன்று அவசியப்படுவது யூ. என். பி.க்கு எதிர்ப்புக்காட்டுவதோ அல்லது நெருக்கு வாரம் தொடுக்கும் போராட்டமோ அல்ல. அவை உதவாக்கரையான வேலைகள். யூ என். பி யை வெளியேற்றி முதலாளித்துவ மக்கள் முன்னணிகளுக்கு இடமளிக்காமல் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரும் இலக்குடன் தொழிலாள வர்க்கம் பொது வேலைநிறுத்தத்துக்கு தயாராக வேண்டும்.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினையும் கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் தொழிலாள வர்க்கத்தினைச் சூழ அணிதிரட்டிக் கொள்வது இங்கு முக்கியமானது. முதலாளித்துவ ஆட்சியின் கீழ் நசுக்கப்பட்டுள்ள இந்த மக்கட் பகுதியினரின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்கின்றதும் அவர்களின் பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடிய சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றதுமான அரசினை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தினைச் சூழ அவர்களின் பூரண ஆதரவினை தொழிலாள வர்க்கத்தினால் வென்றுகொள்ள முடியும்.

இது தொழிலாள வர்க்கத்தின் அரச ஆட்சிக்கான போராட்டமாகும். இதற்கு அவசியமான சோவியத் சபைகளைக் கட்டி எழுப்புவதற்கான முதல் நடவடிக்கையாக பக்டரி கமிட்டிகளையும், பாதுகாப்புக் கமிட்டிகளையும் தொழிலாள வர்க்கத்தின் தொடங்கிவைப்பின் மூலம் உடனடியாகக் கட்டி எழுப்ப வேண்டும். ஒடுக்கப்படும் தமிழ் மக்களையும், கிராமப்புற ஏழைகளையும் இந்த ஆட்சி அமைப்புக்களைச் சூழ அணிதிரட்ட வேண்டும். தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்யவும் கிராமப்புறப் படுகொலைகளை நிறுத்தவும் தொழிலாள வர்க்கம் சுயாதீனமாக தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

இலங்கைத் தொழிலாள வர்க்கம் முகம் கொடுத்துள்ள பொறுப்புக்கள், உலகத் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் பொறுப்பின் ஒரு பாகமாகும், இதன அர்த்தம், அனைத்துலகவாதப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நின்று கொள்ளும் இந்நாட்டுத் தொழிலாள வர்க்கத்துக்கு உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவினை வென்றிகொள்ளும் பூரண வாய்ப்பு உண்டு என்பதேயாகும்.

இதன் பேரில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே போராடுகின்றது தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் சகல பகுதியினரும் பு. க. க. வில் சேர்ந்து மேற்சொன்ன வேலைத் திட்டத்தினை வர்க்க இயக்கத்தினுள் எடுத்துச் செல்லப் போராடத் தீர்மானம் செய்ய வேண்டும்.

மாநகரசபை பிரதேச சபைத் தேர்தல்களில் வர்க்க இயக்கத்தின் முன்னேறிய பகுதியினரை மேற்சொன்ன தீர்மானத்துக்கு இட்டுச் செல்ல உதவும் விதத்தில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கட் போராளிகள் செயற்பட வேண்டும். யூ. என். பி. சி.ல.சு.க. முதலாளித்துவக் கட்சிகளுடன் சேர்ந்து சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ—இ. தொ. கா தலைவர்கள் அமைத்துள்ள மக்கள் முன்னணியே அதற்குப் பெருந்தடையாக உள்ளது என்பதை இங்கு சகலரும் புரிந்து கொள்வது அவசியம். தமது கட்சிகளின் சின்னத்தையே முழுப்படியே முதலாளித்துவக் கட்சிகளுக்கு காட்டிக்கொடுக்கும் அளவுக்கு இந்த மக்கள் முன்னணி அரசியல் சென்றுள்ளது.

ஆதலால் இக்கட்சிகளின் எந்தவொரு வேட்பாளருக்கும் எந்தவொரு இடத்திலும் வாக்களிக்க இயலாது போயுள்ளது. இந்த முன்னணியை முழுமனே நிராகரிக்கும்படி நாம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டிக்கொள்கின்றோம். சமசமாஜ — கம்யூனிச—நவசமசமாஜ—இ.தொ.கா. வேட்பாளர்கள் தத்தம் கட்சிகளின் சொந்த சின்னத்தின் கீழ் போட்டியிடும் இடங்களில் மட்டும் அவர்களுக்கு வாக்களிக்க முடியும். எனினும் அதனை அவர்களின் மக்கள் முன்னணி அரசியலிலிருந்து தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் மீட்பதற்கான போராட்டத்தின் ஓர் உபாயமாக மட்டுமே கையாள வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அந்தந்தக் கட்சிகளின் பட்டியலில் நுழைந்துள்ள யூ. என். பி—சிறீலங்கா வேட்பாளர்களைத் தோற்கடிக்க சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ—இ.தொ.கா போராட வேண்டும் என நிர்ப்பந்திக்க வேண்டும்.

படுமோசமான மோசடி விதிமுறைகளில் சடுபட்டிருப்போர் நவசமசமாஜ தலைவர்களே. அவர்கள் மக்கள் முன்னணி அரசியலை உச்சாடனம் செய்யும் அதே சமயம், தமது கட்சியின் வேட்பாளர் பட்டியலை தேர்தலில் முன்வைத்துள்ளனர். தேர்தலில் "யூ. என். பி. எதிர்ப்புக் கட்சிகளின் சகவாழ்வு" எனப்படுவது நீடிக்க வேண்டும் எனக் கூறிக் கொண்டு இவர்கள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியைக் காக்கத் தோள் கொடுத்துள்ளனர்.

யூ. என். பி—சி. ல. சு. க. முதலாளித்துவக் கட்சிகள் தோற்கடிக்கப்படுவது தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு அவசியம். முதலாளித்துவக் கட்சிகளுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டுள்ள துரோகத் தலைவர்களின் மக்கள் முன்னணி அரசியலினாலேயே அது தவிர்க்கப்பட்டு வந்துள்ளது. ஆதலால் இந்தத் தேர்தல் சந்தர்ப்பத்தினையும், ஏனைய சகல தருணங்களையும் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன அரசியல் வழிமுறைக்கான வழியை ஏற்படுத்த வேண்டும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியாகக் கட்டி எழுப்புவதன் மூலமே அந்த வழிமுறை புரட்சிகர வேலைத்திட்டத்தின் கீழ் உச்சக் கட்டத்தினை அடைய முடியும்.

---

# பு. க. க. அபிவிருத்தி நிதி ரூபா 100,000

# 'தொழிலாளர் பாதை', 'கம்கறு மாவத்த' சந்தாதாரர் 500

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ரூபா 100,000/- அபிவிருத்தி நிதியை ஆரம்பித்துள்ளது. மார்ச் 01ம் திகதி ஆரம்பமாகிய இந்நிதிதிரட்டல் மே 1ம் திகதி 1 இலட்சம் இலக்கினை எட்டவேண்டும் அத்தோடு 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளுக்கு 500 சந்தாதாரரை திரட்டும் இயக்கமும் ஆரம்பமாகியுள்ளது.

இந்த இலக்கினை வென்றெடுக்க ஊக்கத்துடன் உழைக்குமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும், பத்திரிகை வாசகர்களையும் வேண்டுகின்றது.

உலக ரீதியிலும், இலங்கையிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தொழிலாள வர்க்க அனைத்துலகவாத [illegible] அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மட்டுமே போராடுகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலைமையில் ஈராக்குக்கு எதிராக இடம்பெற்ற யுத்தத்தில் ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகள் உக்கிரம் கண்டமை தெரியவந்தது. ஏகாதிபத்தியவாதிகள் காலனிகளை கொள்ளையடிக்கும் உலகினை மீண்டும் கூறுபோடும் யுத்தக் காலப்பகுதிக்குள் மனித இனத்தினை மீண்டும் இழுத்துச் செல்கின்றனர். இந்த ஏகாதிபத்திய நெருக்கடி பிரமாண்டமான புரட்சிகரப் போராட்டங்களை தூண்டிவிடுவதோடு முதலாளித்துவத்தினை பூகோளத்தில் இருந்து துடைத்துக் கட்டுவதற்கான நிலைமைகளையும் சிருஷ்டித்துள்ளது.

இலங்கையில் பிரேமதாச அரசாங்கம், ஏகாதிபத்தியவாதிகளின் இந்தக் கொலைகார நலன்களுக்குச் சேவகம் செய்யத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் தொழிலாளர், கிராமப்புற ஏழைகள், தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நசுக்கும் பொருட்டு கொடிய இராணுவ ஆட்சியினை உண்டுபண்ண முயற்சித்துக் கொண்டுள்ளது.

யூ. என். பி — உலக வங்கித் தாக்குதல்களுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தின் புதிய போராட்டங்கள் வெடித்துள்ளன. கிராமப்புற ஏழைகள் பிரேமதாச அரசாங்கத்தின் கொடிய பயங்கர ஆட்சியையிட்டு பெரும் வெறுப்படைந்துள்ளனர். வட — கிழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினர் பிரேமதாச அரசாங்கத்தின் யுத்தத்துக்கு முகம் கொடுத்துள்ளனர். இந்த நிலைமையிலேயே யூ. என். பி.யும் முதலாளித்துவ ஸ்ரீ. ல. சு. க.வுக்கும் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ. கா. தலைவர்களும் மற்றும் மத்தியவாத அமைப்புகளின் தலைவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

பு. க. க. தொழிலாள வர்க்கத் தலைமையின் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டச் செய்யும் போராட்டம் மிகவும் தீர்க்கமானது. துரோகத் தலைமைகளை அகற்றி ட்ரொட்ஸ்கிசத் தலைமையை தொழிலாள வர்க்கத்துள் ஸ்தாபிதம் செய்யவேண்டும். எமது இலக்கு இப்போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளது. காலதாமதமின்றி தங்கள் உதவி நிதியை எமக்கு அனுப்பவும். 'தொழிலாளர் பாதை', 'கம்கறு மாவத்த' சந்தாதாரர்களாகுங்கள்

உதவி நிதியையும் சந்தாப் பணத்தையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:

ஆனந்த வக்கும்புற,
90, [illegible] மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு — 10.

www.padippakam.com



# மண்டேல், நவசமசமாஜக் கட்சியுடன் புதிய எதிர்ப்புரட்சிக் கூட்டு

நவசமசமாஜ வலதுசாரி மத்தியவாதக் கட்சியின் 13வது ஆண்டு மகாநாடு கடந்த டிசம்பர் 28ல் கொழும்பில் நடைபெற்றது. இதில் பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதியின் செய்தி எழுதி வாசிக்கப்பட்டது. 1991 முற்பகுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய செயலகத்தின் மகாநாட்டுக்கு நவசமசமாஜக் கட்சி அழைக்கப்படும் எனவும் அதில் அதற்கு தமது அமைப்பின் அங்கத்துவம் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும் எனவும் அச்செய்தி கூறிப்பிட்டது.

இச்செய்தி பேராசிரியர் ஏர்னஸ்ட் மண்டேலின் பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் எதிர்ப்புரட்சி நாற்றமெடுப்பை மட்டுமன்றி இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகப் படும் சந்தர்ப்பவாதச் சக்திகளை ஏவிவிடும் புதிய சந்தர்ப்பவாதத் திட்டத்தையும் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையைப் பொறுத்த மட்டில் இவர்களின் இந்தச் சந்தர்ப்பவாத சதி புதியதல்ல 1960பதுகளில் சமசமாஜக் கட்சி முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டரசாங்கத்தில் சேர்ந்து அமைச்சர் பதவிகளை ஏற்று கொள்ளும்வரை கிட்டத்தட்ட ஒன்றரை தசாப்தங்கள் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்தன தலைவர்களின் வலதுசாரி சந்தர்ப்பவாத பயணத்தை இவர்கள் மூடி மறைத்தனர், பேணிக்காத்தனர். சமசமாஜக் கட்சித் தலைவர்களின் இக்காட்டிக் கொடுப்பு மண்டேலின் ஐக்கிய செயலகத்தின் அரசியலை தர்க்க ரீதியான விளைவாகும். உண்மையில் இக்காட்டிக் கொடுப்பு ஏகாதிபத்திய நலன்களின் பேரில் இடம் பெற்றது. ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து ஒட்ட மெடுத்த, ட்ரொட்ஸ்கிச வேடம் தாங்கிய பப்லோவாதிகளை ஏகாதிபத்தியம் சேவைக்கு அமைத்ததால் ஏற்பட்டது.

## பப்லோவாதம்

1940களின் கடைப்பகுதியிலும் 1950பதுகளின் முற்பகுதியிலும் மைக்கேல் பப்லோவும், ஏர்னஸ்ட் மண்டேல் கும்பலும் ஏகாதிபத்திய தீர்வுக்கு அடிபணிந்தனர். உலக யுத்தத்தின் பின்னர் உலக முதலாளித்துவத்தினை பாதுகாக்கும் பொருட்டு சோவியத் யூனியன் ஜோசப் ஸ்டாலினினதும், சமூக ஜனநாயகவாதிகளதும் முன்வைக்கும் இத்தீர்வு காணப்பட்டது. இந்த பப்லோ—மண்டேல் தலைமை, நான்காம்

அகிலத்தின் விரிவுப் பணியாக விளங்கிய தொழிலாள வர்க்கத்தின் புரட்சித் தலைமை நெருக்கடியைத் தீர்க்கும் பணியைக் கைவிட்டது. புதிய புரட்சிகர தலைமையை அமைக்கும்



ஏர்னஸ்ட் மண்டேல்

பணியைக் கைவிட்டு விட்டு ட்ரொட்ஸ்கிசக் கட்சிகளை ஸ்டாலினிசக் கட்சிகளுள் கரைத்துவிடும் நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டனர். இதற்கு எதிரான போராட்டத்தில் 1953ல் அனைத்துலகக் குழு அமைக்கப்பட்டது. 'பப்லோவாதம்' என்ற பேரால் பிரசித்தி பெற்ற இந்த நாசகார திரிபுவாதத்தில் இருந்து நான்காம் அகிலத்தையும் ட்ரொட்ஸ்கிசத்தையும் காக்கவே அது அமைக்கப்பட்டது. (இது சம்பந்தமான ஆழமான வரலாற்றுஆய்வுக்கு தோழர். டேவிட் நோர்த் எழுதிய 'த ஹெறிடேஜ் வி டிபெண்ட்' என்ற நூலை வாசிக்கவும்)

இந்தியத் துணைக் கண்டத்தில் நான்காம் அகிலத்தின் கிளையாக விளங்கிய இந்திய போல்ஷிவிக் — லெனினிஸ் கட்சியின் தலைவர்களாக கொல்வின் ஆர் டி சில்வா, லெஸ்லி குணவர்தன, டொரிக் டீ சூசா ஆகியோர் விளங்கினர். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் உலக முதலாளித்துவ தீர்வின் ஒரு பாகமாக பிராந்தியத்தில் 'தேசிய' முதலாளிகளுடன் சதி செய்தனர். இதன் பேரில் இவ மதப் பிரிவுகளின் அடிப்படையில் அரசுகளை நிறுவினர். இந்தியத் துணைக் கண்டத்தில் புரட்சிகரமான போராட்டத்தை முன்னெடுப்பதைக் கைவிட்ட இவர்கள் கட்சியின் பெயரையும் போல்ஷிவிக் சமசமாஜக் கட்சி என மாற்றினர். இதைத் தொடர்ந்து 1950ல் தேசியவாத லங்கா சமசமாஜக் கட்சியினுள் இதனைக் கரைத்து விட்டனர். கலாநிதி என். எம். பெரேராவுடன் சேர்ந்த இவர்கள், சமசமாஜக் கட்சியை நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையாக்கினர். இதன் மூலம் பப்லோவாதத்தின் கலப்புவாத அரசியலில் முன்னணி 'கமிஷன்' ஏஜண்டுகளாகினர்.

அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி, அனைத்துலகக் குழுவை அமைப்பதில் முன்னணியில் நின்றது. ஆனால் 1963ல் இதன் தலைவர்கள் அனைத்துலக செயலகம் என்ற பேரில் இருந்து வந்த பப்லோவாத கும்பலுடன் மீண்டும் இணைந்து கொண்டனர். இதன் பெறுபேறுகளே ஐக்கிய செயலகம் உருவானது இச்சந்தர்ப்பவாத கூட்டின் பெறுபேறு கள்ள சமசமாஜக கட்சித் தலைவர்கள் 1964ல் முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டரசாங்கத்தில் சேர்ந்தனர். அமைச்சர் பதவிகளை பெற்ற இவர்கள் தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தினை சிதறடிக்கச் செயற்பட்டனர். 1970பதுகளின் முற்பகுதியில் ஏகாதிபத்திய நெருக்கடியின் புதிய அலை வீச்சு ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பாவிலும் அரைக் காலனித்துவ நாடுகளிலும் புரட்சிகரப் போராட்டங்கள் [illegible] இவற்றை காட்டிக் [illegible] ஏகாதிபத்திய [illegible] ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயகவாதிகளும் செயற்பட்டனர். பப்லோவாத சந்தர்ப்பவாதிகள் பல்லாயிரக்

கணக்கான ட்ரொட்ஸ்கிச காரியாளர்களை ஸ்தம்பிதம் அடையச் செய்து ட்ரொட்ஸ்கிசக் கட்சிகளை நாசமாக்கிய தாலேயே இது சாத்தியமாகியது

1964ல் சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக் கொடுப்பின் பின்னர் ஏர்னஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலகம் எட்மன்ட் சமரக்கொடி — பாலாதம்பு தலைமையிலான புரட்சிகர சமசமாஜக்கட்சியை நிறுவியது. தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தின் பேரில் நின்றுவந்ததோடு

தின் கைக்கூலியாக செயற்பட்டு வருகின்றது. கிழக்கு ஜெர்மனியில் ஸ்டாலினிச பொலிஸ் ஆட்சி ஒஸ்கார், கோர்டிரட் ஹிப்பே உள்ளடங்கலான ட்ரொட்ஸ்கிஸ்டுகளை தண்டித்த வேளையில் மண்டேல் வாய்மூடி மௌனியாக இருந்தார். ஹொனேக்கரின் அரசாங்கம் 1989ல் தொழிலாளர் எழுச்சியினால் வீழ்ச்சி கண்ட வேளையில் ஸ்டாலினிஸ்டுகளுக்கும், குட்டி முதலாளித்துவ அமைப்புக்களுக்கும் உதவும் பொருட்டு உடனடியாக பேர்ளினுக்கு பறந்து சென்றார். இவரின் முக்கிய இலக்கு என்ன தெரியுமா? நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் கிளையான புன்ட்

புள்ள தருணத்திலேயே பப்லோவாதிகளதும், நவசமசமாஜவாதிகளதும் போலி ட்ரொட்ஸ்கிச வேடம் உக்கிரம் கண்டுள்ளது. இக்கூட்டின் மூலம் தொழிலாளர், ஏழைகளுக்கு எதிரான இயக்கத்தை புதிய மட்டத்தில் ஆரம்பிக்க இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஏகாதிபத்திய அமைப்பை பராமரிக்கும் பொருட்டு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட தீர்வுகள் இன்று முழுமனே உடைந்து கொட்டியுள்ளன. இதனை பெரும் பெரும் உலக முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகள் உக்கிரம் கண்டு, நெருக்கடி



வட்டமேசை பேச்சுவார்த்தைகளில் முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு கை கொடுக்கும் நவசமசமாஜ தலைவர் வாசுதேவ நாணயக்கார, பின்னால் ஸ்டாலினிஸ்டுகள் கே. பி. சில்வாவும், டியூ குணசேகரவும்.

ட்ரொட்ஸ்கிசம் பக்கம் ஈர்க்கப்பட்ட ஒரு புரட்சிகரத் தொழிலாளர் இளைஞர் தலைமுறையை அப்படியே நாசமாக்கிவிட இவர்கள் செயற்பட்டனர்.

ஏர்னஸ்ட் மண்டேல் இரண்டரை தசாப்தங்களாக நடாத்திய பப்லோவாத சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக் கொடுப்பினால் பிறந்ததும், இடைக்கிடையே சந்தர்ப்பவாத ரீதியில் ட்ரொட்ஸ்கிச முகமூடி அணிந்து கொள்ள முயற்சிக்கின்றதும், 1964ன் பின்னர் சமசமாஜ, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தொழிலாளர்கள் இராமப்புற ஏழைகள், தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற சகல இரத்தம் சிந்தும் அரசியல் குற்றங்களிலும் பங்குகொண்டதுமான நவசமசமாஜக் கட்சி தலைவர்களை தனது எதிர்ப்புரட்சிக் கும்பலில் சேர்த்துக் கொள்ள தீர்மானம் செய்துள்ளார். உண்மையில் இச்சம்பந்தம் இந்த அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கு மிகவும் பொருத்தமானது

[illegible] வருடங்களாக பப்லோவாத காட்டிக் கொடுப்பினை மேற்பார்வை செய்து வந்தவன் [illegible], ஐக்கிய செயலகமும் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்ய முனைந்த சோவியத் யூனியனின் [illegible]

ஆளப்பட்டர் சோசலிஸ்ட் இயக்கம் கிழக்கு ஜேர்மனியில் செய்த தலையீட்டை ''வெளியார் தலையீடாக' பேர்குட்டி ஸ்டாலினிஸ்டுகளுக்கு ஒத்தூதுவதாக விளங்கியது. இதன் மூலம் ட்ரொட்ஸ்கிசத்துக்கான போராட்டத்தினை விர்க்கும் ஆத்திரமூட்டும் நிலைமையை சிருஷ்டிக்கப் பாடுபட்டார் அதன் பின்னர் புதிய ஸ்டாலினிசக் கட்சியின் தலைவா செய்சியுடன் ஒரே மேடையில் ஏறினார். அதில் கிழக்கு ஜெர்மனியில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்ய வேண்டிய தன் இன்றியமையாமை பற்றி சொற்பொழிவாற்றினார். சுருங்கச் சொன்னால் மண்டேலின் ஐக்கிய செயலகத்தின் இன்றைய முக்கிய பணி சோவியத் யூனியனையும், கிழக்கு ஐரோப்பாவினையும்' ஏகாதிபத்திய பகற்கொள்ளைகாரர்களுக்கு விற்றுத்தள்ளும் பொருட்டு ஸ்டாலினிச அதிகாரத்துவம் நடாத்திவரும் எதிர்ப்புரட்சி இயக்கத்தின் கையாளாகச் செயல்படுவதே.

இக்காட்டிக்கொடுப்பின் ஒரு பாகமாகவே பப்லோவாதிகள் ஒரு காலத்தில் [illegible] வர்கள் எனக் [illegible] வந்த இந்திய [illegible] பிராந்திய முதல[illegible] திரும்பியுள்ளது. [illegible] கும்பல் ஏகாதிபத்திய [illegible] தனத்தின் அப்பட்ட[illegible] அரசு முதலாளிகளாக [illegible]

வளர்ச்சி கண்டுள்ளன. இந்த யுத்தத்தின் பின்னைய தீர்வின் ஒரு பாகமாக இந்தியத்துணைக் கண்டப் பிராந்தியத்தினை இன மத அடிப்படையில் வெட்டிக் கொத்தி மக்களின் சிறைகளாக அமைக்கப்பட்ட முதலாளித்துவ ஆட்சிகளுக்கு எதிராக கோடிக்கணக்கான தொழிலாளர்களதும் ஏழைகளதும் போராட்டங்கள் வெடித்துக் கொண்டுள்ளன. இச்சகல நாடுகளிலும் துரோகத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் தொழிலாள வர்க்கத்தினை கட்டுப்படுத்தி ஏகாதிபத்தியவாதிகளின் புதிய அபிலாசைகளை இட்டு நிரப்ப முதலாளித்துவ ஆட்சியாளர்கள் செயற்பட்டனர். இன்று இந்த முன்னுபோக்கு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது. டிசம்பரில் பங்களாதேஷ் மக்களின் கிளர்ச்சியில் எர்ஷாத் அரசாங்கம் கவிழ்ந்தது. இராணுவ ஆட்சி கவிழ்ந்தமை ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் கூலி முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் இரத்தத்தினை உறையச் செய்திருக்கும். இதில் சந்தேகம் இல்லை.

## பிற்போக்கு இயந்திரம்

1964ல் பப்லோவாத சமசமாஜ கட்சி [illegible] மாபெரும் காட்டிக் கொடுப்பின் [illegible] இலங்கைத் தொழிலாள

(4 ம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்றுறை — வேலணை

# விமான குண்டுவீச்சுக்களால் பலத்த உயிர், பொருள் சேதம்

ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர் வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் மேற்கொண்ட குண்டு வீச்சுக்களில் பலர் கொல்லப்பட்டுள்ளதோடு ஆஸ்பத்திரி, பாடசாலை முதலான அரசாங்கக் கட்டிடங்கள் உட்பட அநேக கட்டிடங்கள் தொடர்ந்தும் தகர்க்கப்பட்டு வருகின்றன.

டிசம்பர் 15ம் திகதி இரண்டு இத்தாலிய சினட்டி குண்டு வீச்சு விமானங்கள் வேலணை வங்களாவடியில் நடாத்திய குண்டு வீச்சினால் வேலணை அரசாங்க வைத்தியசாலை டாக்டரின் அலுவலகம் சேதமடைந்ததோடு கதவுகளும் சன்னல்களும் தகர்த்து வீசப்பட்டன. இந்த உயிராபத்து காரணமாக வழி வரிகள் ஆஸ்பத்திரிக்கு வரவும் அஞ்சுகின்றனர். 'நான் எப்போதும் இறக்கத் தயாராக இருப்பதாலேயே இங்கு கடமையாற்றிக் கொண்டுள்ளேன் என அங்கு பணிபுரியும் டாக்டர் எமது நிருபரிடம் கூறினர். டாக்டரின் இந்த மனவுறுதி இல்லையேல் இந்த வேலணைப் பகுதியில் இடம்பெறும் குண்டு வீச்சுக்களால் காயமடைந்து இறப்போரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும். இந்த ஆஸ்பத்திரிக்கு இலக்கு வைத்து விமானங்கள் வீசிய குண்டுவீச்சின் போது 'நான் எனது அறையில் இருந்திருந்தால் நானும் இறந்திருப்பேன்' என அவர் குறிப்பிட்டார்.

வேலணைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சுக்களால் சரஸ்வதி சனசமூக நிலையம், அபிவிருத்திச் சபை, கிராமசேவையாளர் (சுற்றுப்) பிரதேச அபிவிருத்திச் சபை அலுவலகம், நீதிமன்றம், பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகியன தகர்க்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதான சந்தியில் 15/12/90ல் இரண்டு விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சில் மூன்று வீடுகள் தகர்க்கப்பட்டதோடு 79 வயது முதிர்ந்த தங்கம்மா கதிராசி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மறுநாள் (16/12/90 பகல் 10/30க்கு இரண்டு விமானங்களும், ஒரு ஹெலிகொப்டரும் மேற்கொண்ட காட்டுமிராண்டித் தாக்குதலில் தேவராசா தனலட்சுமி (39 வயது) என்ற தாயும் அவரின் மகள் பிருந்தாவும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

மக்கட் குடியிருப்புக்களை நாசமாக்க என்று இடம்பெற்று வரும் இந்த குண்டு வீச்சுக்களின் போது எஸ். விக்னேஸ்வரன் வி. நடராசா, எம். வடிவேலு, வி. சின்னராசா என் நாகரத்தினம் எஸ். சுந்தரம் பிள்ளை என்போரின் வீடுகள் தகர்த்து எறியப்பட்டன. இத்தாக்குதல்களால் வேலணை வைத்தியசாலையில் ஊழியராகக் கடமை புரிந்து வந்த எம். காண்டீபன் கொல்லப்பட்டதோடு இ. துரைராசா ஆர். குருசோத்தமன் ஆர் ஸ்ரீதரன் ஆகியோர் காயமடைந்து, யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

வட்டுக்கோட்டையில் டிசம்பர் 15ல் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் அடைக்கலமாதா [illegible] சுவாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீடும், பலசரக்குக் கடையும் நாசமாக்கப்பட்டன. குண்டுவீச்சு இடம்பெற்ற வேளையில் அங்கே உள்ள வீதியால் சென்று கொண்டிருந்த 14 வயது பெண் குழந்தையின் தொடையில் காயம் ஏற்பட்டுள்ளது. இக்கோவிலில் முன்னர் இடம்பெற்ற தாக்குதலில் கல்யாண மண்டபமும் சேதமடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இராணுவ சூனியப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்ட ஊர்காவற்றுறை நகரம், சுற்றுப்புற கிராமங்களில் இருந்து மக்கள் ஆகஸ்ட் (1990) கடைப் பகுதியில் இருந்து வெளியேறியுள்ளனர். வெளியேறாமல் தொடர்ந்து வசித்து வந்த பெரிய தம்பியும் (82 வயது) மனைவியும் கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். வேலணை கரம்பனைச் சேர்ந்த இவர்களின் சடலங்கள் கக்கூஸ் குழியில் போட்டு மூடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இக்கொலைகள் இடம்பெற்ற அதே தினத்தில் (டிசம்பர் 17) கரம்பன் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை (80 வயது) மனைவி திரேசம்மா (75 வயது) திரேசம்மாவின் சகோதரி எலிசபத்தம்மா (80 வயது) மூவரும் கொல்லப்பட்டு அவர்களின் சடலங்கள் கிணற்றில் போடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இனவாதப் படைகள் யாழ்ப்பாணம் கோட்டையைக் கைப்பற்றுவென நடந்த ஆக்கிரமிப்பின் ஊர்காவற்றுறையில் வந்திறங்கியதில இருந்து இப்படுகொலைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. ஆகஸ்டில் இப்பிராந்தியத்தில் 200க்கும் அதிகமான பொதுமக்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆகஸ்டில் கொலை செய்யப்பட்டவர்களில் ஒரு பகுதியினரின் விபரம் வருமாறு :

| | பெயர் | வயது | ஊர் | கொலை திகதி |
|---|---|---|---|---|
| 1. | ஏ பத்தியா தெரேசா | 88 | ஊர்காவற்றுறை | 24-8-90 |
| 2 | சூசை அந்தனி பர்னாந்து | 44 | ,, | 22-8-90 |
| 3. | செபஸ்தியன் ஜோன் | 44 | ,, | ,, |
| 4. | சூசை அக்னேசம்மா | 33 | ,, | ,, |
| 5. | கிறிஸ்தோ மரியாள் | [illegible]8 | ,, | ,, |
| 6. | எஸ். ஏ. பர்னாந்து | 33 | ,, | ,, |
| 7. | வள்ளி நாகமுத்து | 70 | ,, | ,, |
| 8. | நாகமுத்து கிருஷ்ணமூர்த்தி | 40 | ,, | ,, |
| 9. | முத்துக்குமார் தேசம்மா | 56 | ,, | ,, |
| 10. | எம். செபமாலை | 59 | ,, | ,, |
| 11. | மனுவேல் அகஸ்தினாள் | 65 | ,, | ,, |
| 12. | ஜே. சவிரிமுத்து | 50 | ,, | ,, |
| 13. | திரவியம் செல்லமா | 55 | ,, | ,, |
| 14. | ஆசைப்பிள்ளை பீற்றர் | 30 | ,, | ,, |
| 15. | ஏ. அலக்சாண்டர் | 32 | ,, | ,, |
| 16. | கே. அல்பிரட் | 28 | ,, | ,, |
| 17. | எஸ். பங்கராஜ் ● | 28 | ,, | ,, |
| 18. | பங்கராஜ் செல்வம் ● | 66 | ,, | ,, |
| 19. | ஜோசப் ராஜா ● | 55 | ,, | ,, |
| 20. | பங்கராஜ் ஜெயா ● | 23 | ,, | ,, |
| 21. | பங்கராஜ் இன்பஜோதி ● | 16 | ,, | ,, |
| 22. | எம். இராஜேந்திரம் | 56 | ,, | ,, |
| 23. | வி. ஆறுமுகம் | 50 | ,, | ,, |
| 24. | எல். அன்டன் | 27 | ,, | ,, |
| 25. | இ. கிளோவம் | 30 | ,, | ,, |
| 26. | இ. ஜஸ்டின் | 24 | ,, | ,, |
| 27. | பீ. ஜெகநாதன் | 22 | ,, | ,, |
| 28. | எம். பீட்டர் | 22 | ,, | ,, |
| 29. | ஏ. மேரிக்டெல்லா | 46 | ,, | ,, |
| 30. | எஸ் ஆரோக்கியசாமி | 45 | ,, | ,, |

● ஒரே குடும்பம்

## இராமப்புறப் படுகொலைகளை நிறுத்து!

### பிரச்சார இயக்கத்துக்கு பேராதரவு

பிரேமதாச அரசாங்கம் அரச படைகளையும் கொலைகாரக் கும்பல்களையும் ஏவி விட்டு இராமப்புறங்களில் — சிறப்பாக இளைஞர்களுக்கு எதிராக நடாத்தி வரும் பயங்கர கொலைகளுக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடுத்துள்ள பிரச்சாரத்துக்கு தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் பேராதரவு திரண்டு வருகின்றது.

இராமப்புற கொலைகளை நிறுத்து! அரசியல் கைதிகளைத் நிபந்தனையின்றி விடுதலை செய்! என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் பொது வேலைதிட்டத்தினை தயார் செய்யவும் இராமப்புற வறிய மக்களதும், தொழிலாளர்களதும் பாதுகாப்பின் பொருட்டு ஆயுதம் தாங்கிய தொழிலாளர் பாதுகாப்பு படையை கட்டி எழுப்பவும் தொழிலாள வர்க்க இயக்கத்தினை அணிதிரட்ட வேண்டும். சமசமாஜ — கம்யூனிஸ — நவசமசமாஜ — இ. தொ. கா தலைவர்களையும் தொழிற்சங்க தலைவர்களையும் இந்நடவடிக்கையில் ஈடுபடக் கோரும் கையெழுத்து திரட்டும் இயக்கமொன்றினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆரம்பித்துள்ளது.

கட்டியாந்தோட்டை ரெனி கலைப் பிரதேசத்தில் இடம் பெற்ற கையெழுத்துத் திரட்டும் இயக்கத்தில் சமசமாஜக் கட்சி அங்கத்தினர்கள் உட்பட 113 பேர் கையொப்பமிட்டுள்ளனர். அம்பலாங்கொடையில் 17 பேரும் ஹாலையில் 38 பேரும் மத்திய வங்கியில் 34 பேரும் கையொப்பமிட்டுள்ளனர். இரத்மலானை பாட்டா தொழிற்சாலை சில அதிகாரிகள் நிறுவனம் ஆகிய இடங்களில் முறையே 30, 33 பேர் கையொப்பமிட்டுள்ளனர். இப்பிரச்சார இயக்கம் பதுளை, கண்டி மற்றும் தோட்டப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இம் முக்கிய கோரிக்கைகளின் அடிப்படையில் பொதுக் கூட்டமொன்று நகர மண்டபத்தில் நடாத்தப்பட்டுள்ளது. அம்பலாங்கொடையில் ஜனவரி 4ம் திகதி நடைபெற இருந்த கூட்டம் பொலிசாரினால் குழப்பியடிக்கப்பட்டுள்ளது. அம்பலாங்கொடை நகர மண்டபத்தில் கூட்டம் நடாத்த இடமளிக்க வேண்டாமென பொலிசார் நகரசபை அதிகாரிகளுக்கு சட்டவிரோதமான முறையில் உத்தரவிட்டுள்ளனர். கண்டியில் ஜோர்ஜ் ஈ. டி. சில்வா மண்டபத்தில் கூட்டம் நடாத்த அனுமதியளிப்பதை பொலிசார் 1 மாத காலம் இழுத்தடித்தனர்.

பு. க. க.வின் பிரச்சார இயக்கத்தினை தடை செய்யும் யூஎன்பி. யின் பிற்போக்குச் சதிகளுடன் இணைந்த விதத்தில் (சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ -) இ. தொ. கா. தலைவர்கள் செயற்பட்டு வருகின்றனர் தொழிற்சங்கங்களும் இந்த கோரிக்கைகளுக்கு ஆதரவாக தீர்மானங்கள் நிறைவேற்று வதை எதிர்த்து வருகின்றது. இப்படுகொலைகளுக்கு ஆதரவாக நின்று வந்த இத்தலைவர்கள் இன்று சுதந்திரக் கட்சித் தலைமையுடன் சேர்ந்து கொலைகளையும், ஒடுக்குமுறைக்கும், உள்ளாகியுள்ள மக்களை அந்த முதலாளித்துவக் கட்சியின் அணியில் தள்ளிவிட முயற்சித்து வருகின்றனர்.

இவர்களின் செயல் அரச படைகளுக்கும், கொலைகாரக் கும்பல்களுக்கும் உயிர் பலி கொள்ளவுள்ள உரிமையை அங்கீகரிக்கின்றன. அத்தோடு இராமப்புற மக்களிடையே காணப்படும் வெறுப்பினை முதலாளி வர்க்கத்தினுள் அடக்கி வைக்கும் முயற்சிக்கு சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்கள் ஆதரவளித்துக் கொண்டுள்ளனர்.

## மண்டேல் நவசமசமாஜக் கட்சியுடன் ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் முதலாளி வர்க்கத்தின் அறிவு நிறைந்த மாபெரும் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. ஐ.ம.மு. அரசாங்கத்தின் தாக்குதல்களுக்குப் பின்னர் இன்று பிரேமதாச அரசாங்கம் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளைப்படி நடைமுறைப்படுத்தும் கொடிய ஒடுக்குமுறைகள் தொழிலாள வர்க்கத்தின் பிரமாண்டமான போராட்டங்களுக்கான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு வட—கிழ் மாகாண தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை முறியடிக்க முடியாமல் போனதால் முதலாளி வர்க்கத்தின் நெருக்கடி மேலும் உக்கிரம் கண்டுள்ளது. இலங்கையின் முதலாளி வர்க்கம், இராமப்புறங்களில் கிளர்ச்சி நிலைமை வளர்ச்சி கண்டதும் சுமார் 1 இலட்சம் இளைஞர்களைக் கொலை செய்ததோடு தொடர்ந்து பயங்கர ஆட்சியில் ஈடுபட்டுள்ளது. சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. அமைப்புக்களின் துரோகத் தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தினை சாதகமாக்கிக் கொண்டு கொடிய தாக்குதல்களை பிரேமதாச அரசாங்கம் தொடுப்பதற்கான முண்டினை வழங்குகின்றனர். ஆனால் தொழிலாளர்களதும், ஒடுக்கப்படும் மக்களதும் எதிர்ப்பு வளர்ச்சிகாணும் நிலைமையில் தாம் அரசியல் ரீதியில் ஈடாட்டம் காண்பதை ஆளும் வர்க்கம் அறிகிறது. தொழிலாள வர்க்கத்தினை சாதகமாக்கிக் கொள்ளவும் மக்கள் இயக்கம் வெடிக்கும் நிலையில் பங்களாதேஷ் போன்று அதனை முதலாளித்துவ பொறியில் சிறைவைக்கவும் தொழிலாள வர்க்கத்தினுள் புதிய எதிர்ப்புரட்சி இயந்திரம் செயற்படும் அவசியம் முதலாளி வர்க்கத்துக்கு ஏற்படுகின்றது. இந்நிலைமை புரட்சிகர நெருக்கடியிலும் ஏற்படுகிறது. ஐக்கிய செயலகத்தின் துரோகிகள் நவசமசமாஜக் கட்சியின் மத்தியவாதிகளை இரத்தத்தின் தழுவி, ட்ரொட்ஸ்கிச கோலம்போட்டு தயார் செய்ய முன்வந்துள்ளதற்குக் காரணம் இப்பெரும் மாற்றத்துக்கு ஈடுகொடுக்கவே.

— தொடரும்

கொழும்பு — 10, 1 — ஆவது மாவிக்காவத்தை ஒழுங்கை, இலக்கம் 30, இடத்தில் வசிக்கும் [illegible] ஆல் [illegible] தாகணைவத்தை வீதி, 51-ஆம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com




# மண்டேல், நவசமசமாஜக் கட்சியுடன் புதிய எதிர்ப்புரட்சிக் கூட்டு

*கடந்த இதழின் தொடர்ச்சி*

வட—கிழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை நசுக்கவும் தென் மாகாணங்களில் தொழிலாளர்கள், ஏழைகளை நசுக்கும் பொருட்டு இலங்கை இராணுவத்தினை அங்கிருந்து விடுவிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அங்கீகாரத்துடன் இந்திய ராஜீப் காந்தி அரசாங்கத்துக்கும் இலங்கை ஜயவர்தன அரசாங்கத்துக்கும் இடையே 1987 ஜூலையில் இந்திய — இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானது. இந்த உடன்படிக்கைக்கு இதன் அடிப்படையில் இந்தியா இராணுவத்தினை தருவிக்கவும் நவசமசமாஜ தலைவர்கள் முண்டு கொடுத்தனர். இவர்கள் 1987 ஜூலையில் கைச்சாத்தான பிற்போக்கு இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு முன்னோடியாக இடம்பெற்ற ஜயவர்தனவின் வட்டமேசை மகாநாடுகளில் கலந்து கொண்டனர். அதன் மூலம் நவசமசமாஜ தலைவர்கள் சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் சேர்ந்து இவ்வுடன்படிக்கைக்கு வழியமைத்தனர். 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கை சம்பந்தமாக நவசமசமாஜ கட்சி பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னவின் கையெழுத்துடன் வெளியான அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டது:

"... எவ்வாறெனினும் மேற்கத்தைய ஏகாதிபத்தியவாதிகளின் உதவியோடு வலதுசாரி அரசாங்கத்தினை இங்கு உருவாக்கக் கனவு கண்டுகொண்டிருந்த சிங்கள அரைப் பாசிச இனவாதிகளுக்கு இதுவோர் அடியாகும். உண்மையில் இது பிரேமதாச கும்பலுக்கு ஒரு தோல்வியாகும். இலங்கையினுள் மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் இராணுவ அரசியல் செல்வாக்குகளை தடுக்கின்ற, இலங்கை வரையும் இதனால் பரந்துபட்டுள்ள இந்து-சோவியத் பாதுகாப்பு உடன்படிக்கையினை இவர்களால் சகித்துக் கொள்ள முடியாதிருக்கும் ..."

1987 நவம்பரில் இருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் வட—கிழ் மாகாணங்களில் தொடுத்த இரத்தக் களரிகளை அங்கீகரிக்கும் விதத்தில் நவசமசமாஜ தலைவர்கள் அறிக்கைகளை வெளியிட்டனர். மூதலாளித்துவ மக்கள் கட்சியுடனும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் சேர்ந்து கூட்டறிக்கையை வெளியிட்டனர். இந்தக் கூட்டறிக்கை தமிழ் போராளிகளை உடனடியாக நிராயுதபாணியாக்கும் படி கோரியது: "வட — கிழ் பிரதேசங்களில் சமரசத்துக்கு (இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கு) எதிரான சகல சக்திகளையும் நிராயுதபாணியாக்குதல் நடைமுறைப்படுத்தல் உட்பட அப்பகுதிகளில் வழமை நிலைக்குகொணரும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது இதற்காகச் செய்ய வேண்டிய அவ



குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் மரணச் சடங்கில் நவசமசமாஜ தலைவர் வாசுதேவ நாணயக்கார

இந்திய—இலங்கை உடன்படிக்கையின் கீழ் திணிக்கப்பட்ட மோசடி மாகாண சபைகள் மூலம் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகள் இடைத்துவருவதாகக் கூறிக் கொண்டு, அதற்குப் பந்தம் பிடித்த ந. ச. ச. க. தலைவர்கள், இந்திய—இலங்கை அரசாங்கங்களின் அப்பட்டமான ஏஜண்டுகளான ஈ.பி.ஆர்.எல்.எப்— தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களுடன் அணிதிரண்டனர். தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான வர்க்க நிலைப்பாட்டினை ஒதுக்கித்தள்ளிவிட்டு, இவர்கள் பப்லோவாத சமசமாஜக் கட்சி, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட்கட்சியுடன்சேர்ந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு ஆதரவளித்தனர். இதன் மூலம் கிராமப்புற ஏழைகளின் முன்நிலையில் தொழிலாள வர்க்கத்தினை அபகீர்த்திக்குள்ளாக்கவும். பாசிச இயக்கமான ஜே.வி.பி.வெளிப்படவும் வாய்ப்பான நிலைமைகளை சிருஷ்டித்தனர்.

பிரேமதாச அரசாங்கத்துடனான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துரோகப் பேச்சுவார்த்தைமுறிவடைந்து 1990 ஜூனில் மீண்டும் சிவில் யுத்தம் வெடித்தது. தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை நடாத்தும் பொருட்டு பிரேமதாச அரசாங்கம் பாராளுமன்றத்தில் யுத்த வரவுசெலவுத்திட்ட குறைநிரப்பு மதிப்பீட்டினைச் சமர்ப்பித்தது. இதற்கு ஆதரவாக வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் வாக்களித்தது மட்டுமன்றி, நவசமசமாஜக் கட்சி, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் தோல்வியின் பேரிலான பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் சென்றது அந்த விதத்தில் நவசமசமாஜ தலைவர்களின் கரங்கள் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தில் தோய்ந்து போயுள்ளது. 'நாட்டை ஐக்கியப்படுத்தும்" பொருட்டு சிங்கள இனவாத முதலாளிகளிடையே

தலையிட்டு குறைப்பட்டுக் கொள்ளும் ந. ச. ச. க. தலைவர்கள், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் சார்பில் நின்று வருகின்றார்கள் என்ற பச்சைப் பொய்யினை ஏர்னஸ்ட் மண்டேல் பரப்பி வருகின்றார். ஏர்னஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலகம் எனப்படுவதற்கும் ந. ச. ச. க. தலைவர்களுக்கும் இடையே இரண்டு வருடங்களாக நடைபெற்று வருவதாகச் சொல்லப்படும் கலந்துரையாடல்களில் இப்பிற்போக்கு அம்சமும் ஒன்றாகும்.

## தொழிற் சங்கங்களினுள்

நவசமசமாஜக் கட்சியினா தொழிற்சங்கத் துறையில் ஆதரவினை வென்றுகொண்டுள்ளதாக. மண்டேலின் 'இன்டர் நஷனல் வியூ பொயின்ட்' சஞ்சிகைக்கு கட்டுரை தீட்டியதலைவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் அது நாற்றமெடுக்கும் கைக்கூலிகளின் மற்றோர் 'சாதனை' யாகும்:

பன்னாட்டுக் கம்பனியான யூனிலிவரின் இலங்கைப் பகுதியான லீவர் பிரதர்ஸ் கம்பனியின் முதலாளிகளுடன் வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கத்தின் பிரபல நவசமசமாஜ தலைவர்களான லினஸ் ஜயதிலகவும், சரணபால டி.சில்வாவும் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். 1988 ஆகஸ்ட் 16ம் திகதி கைச்சாத்தான — தொழிலாளர்களுக்கு தண்டனை வழங்கும் இந்த உடன்படிக்கையின் ஒரு சரத்துக் கூறுவதாவது:

"39: தொழிற்சங்க' நடவடிக்கை:

இந்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும் அல்லது புதுப்பிக்கப்படும் காலப்பகுதியில் எந்தவிதமான கைத்தொழில் தகராறு சம்பந்த [illegible] கைத்தொ [illegible] கைக்கு சம்பந்தமாகவோ அல்லது சம்பந்தமில்லாமலோ எந்தவிதமான வேலைநிறுத்தத்தில் அல்லது மெதுவாக வேலை செய்வதில் அல்லது வேலையை பகிஷ்கரிப்பதில் ஊர்வலம் செல்வதில் அல்லது அத்தகைய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாது என தொழிற்சங்கம் அல்லது அதன் அங்கத்தினர்கள் உடன்படுகின்றார்கள்"

இந்தக் கேடுகெட்ட துரோகத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சவால் செய்த வேளையில், நவசமசமாஜ தலைமையிலான வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கத்தின் லீவர் கிளை ஒரு துண்டுப் பிரசுரத்தினை வெளியிட்டது. அப்பிரசுரம் 1968 செப்டம்பர் 10ம் திகதி சமசமாஜக் கட்சியின் மாஜி தலைவரான கலாநிதி என்.எம். பெரேரா லீவர் முதலாளிகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் சரத்துக்கள் இச்சரத்துக்களுக்குச் சமானமானவை எனக் குறிப்பிட்டது உண்மையில் அப்படியே. ந. ச. ச. க. துரோகிகள் தொழிலாளர்களுக்கு திரும்பத் திரும்பக் கூறி வந்தது என்ன? நாம் சமசமாஜக் கட்சித் தலைவர்களில் இருந்து வேறுபட்ட தலைமையை கட்டி எழுப்பி வருவதாக கூறிக் கொண்டனர். இன்று அவர்கள் உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் அப்பட்டமான கையாளாகச் செயற்பட்டுவந்த 'சமூக ஜனநாயகவாதி' கலாநிதி என், எம்.பெரேராவுக்கு சமானமான தலைமையை வழங்கி வருவதாக சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்! சேற்றில் விழுந்த சமசமாஜ எலும்பைத் தூக்கி தொழிலாள வர்க்கத்தின் தலைமேல் வைப்பதாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன 13வது மகாநாட்டில் கூறியது சும்மா அல்ல.

தொழிற்சங்கக் கும்பலைக் பெரிதாக்கும் பொருட்டு நவசமசமாஜ தலைவர்கள் ஸ்டாலினிஸ்டுகளுடன் நடாத்திய நாய்ச் சண்டையில் மேற்சொன்ன உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு ந. ச. ச. க. தலைவரான லினஸ் ஜயதிலக பிரித்தானிய யூனிலிவர் பெருங்புள்ளிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் பொருட்டு பிரித்தானிய விஜயத்தை மேற்கொண்டார். இச்சந்திப்புத் தொடர்பாக உருவான உலகப் பிரசித்தி பெற்ற குற்றச்சாட்டுக்கு ந. ச. ச. க. தலைவர்கள் இன்னமும் பதிலளிக்கவில்லை. இதே வகையறுவைச் சேர்ந்த கூட்டுஉடன்படிக்கைகளை ந. ச. ச. க. தலைவர்கள் வேறும் பல பன்னாட்டுக் கம்பனிகளுடன் செய்து கொண்டுள்ளார்கள்.

ந. ச. ச. க. தலைவர்கள் தமது தொழிற்சங்கச் சீடர்களை முதலாளிகளின் உயர் பதவிகள், கைலஞ்சங்கள் பெறும் கோப்பரேட்வாதிகளாக செயற்படச் செய்து வந்தனர். இரத்மலானை 'இன்டர்நஷனல் காமன்ட்ஸ்' வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கத்தின் செயலாளரும், ந. ச. ச. க. அங்கத்தவருமான சிங்கபாகு' தொழிற்சங்க நடவடிக்கையின் பொருட்டு கடமையில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கையில் முதலாளிகளால் உதவி உற்பத்தி முகாமையாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவை சாதாரண வகையிலான பதவி உயர்வு அன்றி, தொழிலாளர்களை பலிகொடுப்பதன் சார்பில் வழங்கப்படும் கட்டணமாகும். 1990 டிசம்பரில் கனடா லங்கா அப்பரல் கம்பனி சங்க கிளையின் செயலாளர் முதலாளிகளின் கையாளாக அம்பலமாகி, தொழிலாளர்களின் எதிர்ப்புக்கு உள்ளாகியதோடு செயலாளர் பதவியில் இருந்தும் இராஜினாமாச் செய்ய நேரிட்டது. ஆனால் அவரை மீண்டும் அதே பதவியில் அமர்த்த ந. ச. ச. க. தலைவர்கள் பாடாய்பாடுபட்டார்கள். தொழிற்சங்கங்களின் சுயாதீனத்தினை இந்த விதத்தில் ஒழித்துக்கட்ட ந. ச. ச. க. தலைவர்கள் தொழிற்பட்டுவருகின்றார்கள். தொழிற்சங்க பதவிகளுக்கு நியமனம் பெறும் தமது அங்கத்தினரை ந. ச. ச. க. இந்த விதத்தில் முதலாளிகளின் கைக்கூலிகளாக செயற்படும்படியும், நிர்வாகத்துடன் இணைந்து கொள்ளும்படியும் தூண்டுகின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தலைமையின இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கத் தலைமையில் இருந்து அகற்றும் அவசியம் மத்திய வங்கி அதிபருக்கும் யூ.என்.பி அரசாங்கத்துக்கும் உருவான போது நவசமசமாஜ தலைவர்கள் அதில் நேரடியாகக் கலந்து கொண்டனர். நவசமசமாஜ கட்சி செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவின் பணிப்பின் பேரில் ந.ச.ச.க. தலைமைப் பீடத்தைச் சேர்ந்த கனில் ரத்னப்பிரியவும் சரணபால த சில்வாவும் (லீவர் கம்பனியுடன் கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர்களில் ஒருவர்) மத்தியவங்கி ஊழியர் சங்கம் அறியாத முறையில் மத்திய வங்கி ஆளுனர் நெவில் கருணாரத்னவினைச் சந்தித்து சதிக்கான ஏற்பாடுகளைச் செய்தனர். இது உண்மையில் படு பிற்போக்குக்கருங்காலி வேலையாகும். மத்திய வங்கி ஊழியர் சங்கச் செயலாளரும் புரட்சிக் கம்யூனிஸ்ட்

(6 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# மண்டேல், நவசமசமாஜக் கட்சியுடன் புதிய எதிர்ப்புரட்சிக் கூட்டு

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தின் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவருமான எச். எம். பீ. ஹேரத்துக்கு எதிராக நிர்வாகம் குற்றப் பத்திரிகை சமர்ப்பித்த வேளையிலேயே ந. ச. ச. க. தலைவர்கள் மத்திய வங்கி அதிபதியுடன் பேச்சு வார்த்தைக்குச் சென்றனர். ஹேரத்துக்கு எதிரான இந்த வேட்டைக்கு எதிராக எதிர்ப்புக் காட்டவும் ந. ச. ச. க. செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன மறுப்புத் தெரிவித்ததன் பின்னரே இச்சந்திப்பு இடம்பெற்றது. கடந்த வருடம் பு. க. க குழுவுக்கு எதிராக சங்கத் தேர்தலில் போட்டியிட்ட ந.ச.ச.க—சி.ல.க.க. குழுவுக்கு மத்திய வங்கி அதிபரும், யூ. என். பி. குண்டர்களும் வெளிவெளியாகவே ஆதரவளித்தனர். தொழிற்சங்க இயக்கத்தினுள் ந.ச.ச.க. தலைமையின் அகிம்சையான — நாற்றம் கண்ட அறிக்கையை இக்கட்டுரையின் எல்லைக்குள் விபரித்துவிட முடியாது.

யூ. என். பி. அரசாங்கம் தொடர்ந்து நடாத்திவரும் கிராமப்புற படுகொலைகளுக்கு நவசமசமாஜ மத்தியவாதிகள் சமசமாஜ — கம்யூனிச தலைமைகளுடன் அரசியல் ரீதியில் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும். 1988 டிசம்பர் தொடக்கம் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் ஜே. வி. பி.பாசிச பயங்கரங்களுக்கும் எதிராக சகல தொழிலாளர் அமைப்புக்களையும் கொண்டு தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கப்படவேண்டும் என பு. க. க. முன்வைத்த யோசனையை ந. ச. ச. க தலைமை முழுமனே எதிர்த்தது. இதற்கு மாறாக ந. ச. ச. க பொதுச் செயலாளர் செய்த சிபார்சு என்ன தெரியுமா? ஸ்ரீலங்கா மக்கள் கட்சியுடன் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்த மக்கள் முன்னணியில் பு. க. க. சேரவேண்டும் என்பதே. இந்தக் கடைகெட்ட சிபார்சினைக் கொண்ட கடிதம் 1989 ஜனவரி 5ம் திகதி பு. க, க. பொதுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மறுபுறத்தில் அவர்கள் தமது ''பாதுகாப்பினை'' உர்ஜிதம் செய்யும் பொருட்டு ஜயவர்தன அரசாங்கத்திடமிருந்து ஆயுதம் பெற்றுக் கொண்டனர். ஜே. வி. பி.யின் பாசிச இயக்கம் பலமடைந்து வருவதாக தோன்றிய வேளையில் இவர்கள் அதனை வெளிநிறுத்த இயக்கத்துக்கு' ஆதரவளித்தனர்.

தொழிலாள வர்க்கம் நடைமுறை ரீதியான பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடை செய்யும் சமசமாஜ, கம்யூனிச, இ. தொ. கா. தலைவர்களுடன் சேர்ந்து ந.ச.ச.க. தலைவர்களும் தொழிற்பட்டதாலேயே ஜே. வி. பி.யை ஒடுக்கும் பேரில் இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களை கொலை செய்யவும் ஆயிரக்கணக்கானோரை சிறைவைக்கவும், கொலைகாரக் கும்பல்கள் மூலம் பயங்கர ஆட்சியை தொடர்ந்து நடாத்தவும் பிரேமதாச அரசாங்கத்துக்கு வாய்ப்புக்கிட்டியது.

சிறப்பாக கிராமப்புறங்களில் இடம்பெற்ற இத்தகைய மாபெரும் கொலைகளுக்கு எதிராகப் பொதுமக்களிடையே எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வந்த நிலையிலேயே ந. ச. ச க. தலைவர்கள், முதலாளி வர்க்கத்துக்கும் அரசாங்கத்துக்கும், அரச படைகளுக்கும் எதிராகத் தொடுக்கப்படுவதை விதர்ப்பிக்க வைக்கவே 'காணாமற் போனவர்களின் பெற்றோர், பிள்ளைகள் இயக்கத்தை' அமைக்கச் செயற்பட்டனர். யூ. என். பி. அரசாங்கத்தின் இரத்தம் சிந்தும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அவசியத்தைக் கொண்டிருந்த பெற்றோர், இளைஞர்களை பிரேமதாச அரசாங்கத்திடமும் ஏகாதிபத்திய அமைப்புக்களிடமும் உதவி தேடத் திருப்புவதில் ந. ச. ச. க. தலைமைகள் இந்த அமைப்பினைப் பயன்படுத்தி வருகின்றனர். 'அம்னஸ்டி இன்டர் நஷனல்' போன்ற அமைப்புக்களைக் கொண்டு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம், பிரேமதாச அரசாங்கத்தினை எச்சரிப்பது ந.ச.ச.க. தலைவர்கள் இந்த அமைப்புக்களுக்கு வழங்கியுள்ள ஒரு 'வேலைத்திட்டமாகும்'. இன்று இந்த அமைப்பு கொலைகளில் ஈடுபட்டுள்ள பிரேமதாச அரசாங்கத்தின் ஆதரவினைப் பெற்றுள்ளது. ந. ச. ச. க.வினால் பிரசுரிக்கப்படும் 'ஹரய' பத்திரிகையின் 1990 நவம்பர் 16ம் திகதி இதழ் கூறியதாவது: 'அரசாங்கத்திடமிருந்து சலுகைகள் பெறுவதற்கு பெற்றோர், பிள்ளைகள் அமைப்பின்' சிபார்சினைப் பெற்றுக்கொள்ள வேண்டும், என்றது.

1990 ஜூனில் வடக்கு — கிழக்கில் உள்நாட்டு யுத்தம் மூண்டதும் ந. ச. ச. க. தலைவர்கள் செய்தது என்ன தெரியுமா? கிராமப்புறங்களில்பயங்கரங்களில் ஈடுபட்டுவிட்டு வடக்கு—கிழக்குக்கு சென்று, 'காணமற்போன' பொலிசாரைக் தேடுவதும் கூட தமது அமைப்பின் கடமையாகும் என அறிவித்தனர். படுகொலைகளுக்குப் பலியான குடும்பங்களின் உறவினர்களை மேலும் மேலும் தவறான வழியில் திரும்பும் பொருட்டு, சந்தர்ப்பத்துக்கிடமான 'கிறிஸ்தவ சகோதரத்துவ'த்தின் தென்னிலங்கை கிளையையும் இந்த அமைப்புடன் தொடர்புபடுத்திக் கொள்ள அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

யூ. என். பி. அரசாங்கத்தின் மீதான கிராமப்புற ஏழைகளின் கொதிப்பு அதிகரித்துள்ள ஒரு நிலையில் செல்வாக்கிழந்த முதலாளித்துவ ஸ்ரீ. ல. சு. கட்சியுடன் கிராமப்புற மக்களைப் பிணைத்துவிட ந.ச.ச.க. தலைவர்கள் பலவிதத்திலும் முயன்றனர். இதன் ஓர் அங்கமாக 'பெற்றோர் பிள்ளைகள் அமைப்பின்' மேடையில் பகுதிப் போக்கு வலதுசாரியான அனுர பண்டாரநாயக்காவையும் அமைத்துக் கொண்டனர்.

நவசமசமாஜக் கட்சியானது முதலாளித்துவ சந்தர்ப்பவாதத்தில் நாற்றம் கண்ட ஓர் கட்சியாகும். அது 1948ல் ஏகாதிபத்திய வாதிகளுடனான சதியின் மூலம் அணிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசினையும் முதலாளித்துவ சொத்துமுறையையும் ஏகாதிபத்திய மூலதனத்தின் பகற்கொள்ளையையும் காக்க நின்றுவரும் கட்சியாகும். சிறப்பாக கடந்த வருடங்களாக தொழிலாள வர்க்கத்தினுள் தேசியவாத சந்தர்ப்பவாதத் தலைவர்களின் வலது சாரிப் பாய்ச்சலுடன் ந.ச.ச.க. தலைவர்களின் சந்தர்ப்பவாத நாற்றமெடுப்பு உச்சக் கட்டத்தினை அடைந்தது.

இக்கட்சியின் தலைவரான வாசுதேவ நாணயக்கார ஏகாதிபத்திய நிதி மூலதனத்துக்கு முழுச் சலுகை வழங்கும் பிரேமதாச அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கும் விதத்தில் கூறியதாவது: ''லெனின் செய்தது போன்று பங்குதாரர்களுக்கு குறைந்த பட்சம் 5 ஆண்டு காலமாகுதல் அவர்களின் முதலீடுகளை வைத்துக்கொள்ளும் முறையிருப்பின் அது பாதுகாப்பான பந்தயமாகும்''. 1990 அக்டோபர் 21ம் திகதி 'சன்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி) ஏகாதிபத்திய நிதி மூலதனத்திற்கு வால் பிடிக்கும் பொருட்டு நாணயக்கார வெளிறுக்கும் சேறடித்துள்ளார்.



ஏர்னஸ்ட் மண்டேல்

இதன் அடிப்படையிலேயே இன்று சோவியத் ருஷ்யாவில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்யும் கொர்பச்சேவ் அதிகாரத்துவத்தின் வேலைத்திட்டத்துக்கு ந.ச.ச.க. தலைவர்கள் ஆதரவளிக்கின்றார்கள்.

1964ல் சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக்கொடுப்பினை எதிர்த்த புரட்சிகரத் தொழிலாளர்கள், இளைஞர்களின் ஒரு தலைமுறையையே நாசமாக்கித் (L S S P (R) தள்ளியவரும், புரட்சிகர சமசமாஜக் கட்சியை பப்லோவாதிகளுடன் நெருங்கி உறவாடிவிட்டு பின்னர் ஆத்திரேலியாவின் பேர்வழிகளான ஸ்வார்ட்ஸின் இயக்கத்தினை இணைந்து கொண்டவரான எட்மண்ட் சமரக்கொடி இன்று ஐக்கிய செயலகத்திற்கும் ந. ச ச. க. இடையேயான கூட்டுக்கு 'பிரித்' ஓத முன்வந்துள்ளார். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் இருந்து ஓட்டம் பிடித்த ஓடுகாலியான கிளிப் சுலோட்டருடனும் எட்மண்ட் சமரக்கொடி உறவு கொண்டிருந்தார்.

நவசமசமாஜக் கட்சியின் 13வது ஆண்டு நிறைவின் பொருட்டு 'ஹரய' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சமரக்கொடி தம்மை உள்ளடக்கிய குழு 1964ல கட்சியில் இருந்து வெளியேறாது உள்ளிருந்து போராடியிருந்தால் நல்ல பலன் கிடைத்திருக்கும் என திட்டவட்டமாகக் கூற முடியும். 1964ல் சமசமாஜக் கட்சி ஏகாதிபத்தியச் சார்பு ஸ்ரீ ல. சு. கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் சேர்ந்ததை எட்மண்ட் சமரக்கொடி 25 ஆண்டுகளின் பின்னர் இன்று அப்பட்டமாக அங்கீகரிக்கின்றார். அத்தனை வுக்கு அவரின் வலதுசாரி பயணம் சென்றுள்ளது இவரின் இந்த அறிக்கையை நவசமசமாஜ மத்தியவாதிகள் நாம் சமசமாஜக் கட்சியினுள் இருந்து கொண்டு நடாத்திய கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்களை பூசி மெழுகுவதற்கு இன்று ஐக்கிய செயலகத்துடன் மாட்டிக்கொள்ள எடுக்கும் நடவடிக்கைகளின் பிற்போக்குத் தனத்தை மூடி மறைக்கவும் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

மாபெரும் புரட்சியாளரான லியோன் ட்ரொட்ஸ்கியின் பெயரைச் சுரண்டிக் கொள்ள இடைக்கிடையே தலைநீட்டும் இந்த மத்தியவாதிகளுக்கும், மார்க்சிசத்தின் மரபுகளை முன்னெடுத்துச் செல்லும் ட்ரொட்ஸ்கிசத்துக்கும் இடையே எது விதமான உறவும் கிடையாது. தவறான விளக்கத்தின் பேரில் இக்கட்சியினுள் தொழிலாளர்கள் அல்லது இளைஞர்கள் சென்றிருப்பின் அவர்கள் உடனடியாக அதிலிருந்து வெளியேறுவதற்கான காலம் வந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தின் நல்லாசியைப் பெறும் அக்கறை கொண்ட பேராசிரியர் ஏர்னஸ்ட் மண்டேல் என்ற திரிபு வாத ஆசானுக்கும் தேசிய சந்தர்ப்பவாதத்தினுள் நாற்றம் எடுத்த நவசமசமாஜ தலைவர்களுக்கும் இடையேயான இப்புதிய கூட்டு, பிற்போக்கு மத்தியவாதத்தின் சீரழிவின் புதிய கட்டத்தினைக் குறிக்கின்றது. இது மூன்றும் உலக யுகதப் பாதையில் இறங்கியுள்ள ஏகாதிபத்தியத்தின் கையாலுநிலையுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் முன்னொரு போதுமில்லாத விதத்தில் வெடித்து வெளிப்பட்டதும் மையத்தின் ஆதாளபாதாள வெறுமை தெரிந்தது. இவை கூடவே உலக சோசலிசப் புரட்சிக்கான நிலைமைகளையும் சிருஷ்டித்தன. இந்நிலையில் அனைத்துலகக் குழுவின் தலைமையின் கீழ் நான்காம் அகிலம் உலகத் தொழிலாள வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களிடையே கண்டுவரும் பேராதரவினைத் தாக்கும் பொருட்டு மண்டேல் ந.ச.ச.க. அணிதிரண்டுள்ளது.

இது தொழிலாள வர்க்கத்துக்கு பெரும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏகாதிபத்தியத்தின் முக்கிய எதிர்ப்புரட்சி ஏஜன்சியான ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிராக உலகம் பூராவுமுள்ள தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். இந்நிலையில் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பின் பேரில் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகக் கடைகெட்ட காட்டிக்கொடுப்புக்கு மத்தியவாதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். இத்துரோகிகளை தொழிலாள வர்க்க இயக்கத்தில் இருந்து விரட்டியடிக்க சகல போராளிகளும் முன்வர வேண்டும்.

அப்பணி வெற்றிபெறவேண்டின், ஏகாதிபத்தியத்தின் தாக்கங்களை தொழிலாளர் இயக்கத்தில் பிரதிநிதித்துவம் செய்த சமூக ஜனநாயக — ஸ்டாலினிசத்துக்கு எதிராகவும், அவ்வாறே பப்லோவாதம் உள்ளடங்கலான ஏனைய வகையறாவைச் சேர்ந்த திரிபுவாதத்துக்கும் எதிராக லியோன் ட்ரொட்ஸ்கியும் நான்காம் அகிலமும் நடாத்திய போராட்டத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பதாகையின் கீழ் பாராடவேண்டும்.

---

## தொழிலாளர் பாதை

பின்வரும் தொழிலாளர் பாதை இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்.

எண் 38. மார்ச். '91. எண் 36. டிசம் '90

சோசலிசத் தொழிலாளர் கழகம் இந்தியா-

எண் 402. பெப். 2 '91. எண் 404. ஏப்ர. 12 '91

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்- இலங்கை-

படிப்பகம்

www.padippakam.com



## இ. தொ. கா. அங்கத்தவர்கள் பேசுகிறார்கள்:

# "தொண்டமான் அரசாங்கத்தில் இருப்பதால் பிரயோசனம் இல்லை, நஷ்டம்தான்"

தோட்டத் தொழிலாளர்களுக்கு விழா முற்பணம் வழங்குவதைச் சாட்டாகக்கொண்டு அம்முற்பணம் வழங்குவதற்கு முன்னரே சம்பளத்தில்மாதாந்தம் ரூபா 75/- வெட்டப்படுவதை எதிர்த்து இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மார்ச் 27ம் திகதி அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். இத்தொழிலாளர்களுள் கொட்டகலை சேடன் தோட்டத் தொழிலாளியான இராமஜயமும் ஒருவர். இவர் இ. தொ. கா. அங்கத்தவர். இருப்பினும் தொண்டமான்—செல்லச்சாமி தலைமை போட்ட கால்கட்டுக்களை எல்லாம்அறுத்துக் கொண்டு இந்த வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட பல்லாயிரக்கணக்கான இ. தொ. கா. அங்கத்தவர்களுள் இவரும் ஒருவர். இந்த அடையாள வேலைநிறுத்தத்தினை முறியடிக்க தொண்டமான்—செல்லச்சாமி மேற்கொண்ட கருங்காலி நடவடிக்கைகளையிட்டு அதிருப்தியடைந்துள்ள இராமஜயம் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் கூறியதாவது:

'நான் கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் இ. தொ. கா.வின் அங்கத்தவனாக இருந்துள்ளேன். இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் இருந்து விலகி, இ. தொ. கா.வில் சேர்ந்தேன். என்றாலும் இ. தொ. கா.வின் கீழ் எமக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. தொண்டமான் யூ. என். பி. அரசாங்கத்தில் சேர்ந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. எந்தவொரு வரவு செலவுத் திட்டத்திலும் எமது சம்பளம் ஒரு சதமும் அதிகரிக்கவில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு கிடைத்த ரூபா. 200/- அல்லது ரூபா. 300/- சம்பள உயர்வு எமக்குக் கிடைக்கவில்லை. இப்போது வருமான ஊக்குவிப்பு போனசும் கிடையாது. இத்தகைய தலைவர்கள் அரசாங்கத்தினுள் இருக்கும்வரை எமக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை

''தேயிலை விலை உயரும்போது சம்பளத்தைக் கூட்டுவதாக சொல்கிறார்கள். ஆனால் இந்த மாதம் சம்பளத்தில் ரூபா 2/- கழிக்கப்பட்டுள்ளது. இந்த தேயிலை விலை உயர்வையோ அல்லது வீழ்ச்சியையோ எப்படி 'செக்' பண்ணுவது என்று எமக்கு தெரியவில்லை. இத்தலைவர்கள் எமது முன்னோக்கிய பயணத்துக்கு தடையாக இருக்கிறார்கள். இப்போது தொழிலாளர்கள் மேல் கடன் சுமை குவிந்துள்ளது. தலைவர்கள் அரசாங்கத்துள் இருந்தால் எமக்கு நன்றாகச் சேவை செய்யவேண்டும். இல்லையேல் வெளியேற வேண்டும்.''

### சம்மதம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டத்துக்கு தனது சம்மதத்தைத் தெரிவித்த இராமஜயம், தொண்டமான் — செல்லச்சாமி தலைமை யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறி, தோட்டத் தொழிலாளர்களைச் சுயாதீனமாக அணிதிரட்ட வேண்டும் என்ற பு. க. க. பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவை வழங்கினார். அத்தோடு ஏப்ரல் 21ம் திகதி பு. க. க. அட்டன் நகர சபை மண்டபத்தில் நடாத்தவுள்ள தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொள்ள முயற்சிப்பதாகவும் கூறினார்.

இ. தொ. கா. தலைமைகளை முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கோரும் பிரச்சாரம் தொடர்பாக கொட்டகலை கின்னமண் வெட்டித் தோட்டத் தொழிலாளியான எம். இராமையா கூறியதாவது: ''நான்வேலையில் சேர்ந்த நாளில் இருந்து இ. தொ. கா. அங்கத்தவன். எமது பெற்றோரும் இ. தொ. கா. யூனியனில் தான் அங்கத்தவராக இருந்தார்கள். அவர்கள் இப்போது 'பென்சன்' எடுத்துவிட்டார்கள். பரம்பரையாக அங்கம் வகித்தும் எமது வாழ்க்கை நிலைமையில் எதுவித மாற்றமும் இல்லை. யூனியன் தலைவர் தங்கள் வாழ்க்கையை உயர்த்துவதில் தான் கவனம் செலுத்துகிறார்கள். தொழிலாளர்களைப் பற்றி சிந்திப்பது கிடையாது. நாங்கள் இன்னும் வெள்ளைக்காரன் ஆட்சி நிலைமையில் இருந்து விடுபடவில்லை இன்றும் வெள்ளைக்காரன் ஆட்சிக்கால லயன் அறைகளில் தான் ஜீவிக்கிறோம். எனக்கு கல்யாணமாகிவிட்டது. ஆனால் இன்னமும் பெற்றோரின் 90 சதுர அடி 'லயன்' அறையில் தான் ஜீவிக்கின்றேன். வேறு வீடு இல்லை. தொண்டமான் கொட்டகலையில் வீடு கொடுத்திருக்கிறார். அவை பழனியாண்டி, முத்துராமன்போன்ற முதலாளிகளுக்கே கிடைத்திருக்கிறது. தொண்டமான் எப்போதும் முதலாளிகள் பக்கம்தான். தொழிலாளிக்கு உள்ள உரிமையையும் இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து பறித்து வருகின்றார். பிரதேச சபை தேர்தலிலும தொண்டமான் முதலாளிகளையே வேட்பாளர்களாக நிறுத்துகிறார். தொழிலாளிகளுக்கு எந்த சந்தர்ப்பமும் கிடையாது. தோட்டங்களில் தொண்டமானால் கொடுக்கப்பட்ட நிலங்களும் முதலாளிகளுக்கே கிடைத்துள்ளது. இத்தலைவர்கள் தொழிலாளர்களை அடிமைகளாகவைத்திருக்க முயற்சிக்கிறார்கள்; தொழிலாளர்கள் விழித்துக் கொண்டால் தமக்கு ஆபத்து வரும் என நினைத்து அவர்களை எப்போதும் பள்ளத்தில் தள்ளுகின்றார்கள்.'' என இந்த 26 வயதான இளம் தொழிலாளி குறிப்பிட்டார்.

### புதிய ஆட்சி தேவை

முதலாளித்துவ அரசாங்கத்துடன் தொண்டமான்—செல்லச்சாமி கொண்டுள்ள உறவின் தாக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் இராமையா மேலும் கூறியதாவது: ''தொண்டமான் இந்த அரசாங்கத்தில் இருப்பதால் தொழிலாளர்களுக்கு எதுவித பிரயோசனமும்இல்லை நஷ்டம்தான். நாங்கள் 40 ஆண்டுகள் யூ. என். பி. ஸ்ரீ. ல. சு. க. முதலாளிகளின் ஆட்சியின் கீழ் வாழ்ந்துள்ளோம். எமது வாழ்க்கையில் எதுவித முன்னேற்றமும் இல்லை எங்களுக்கு புதிய ஆட்சி ஒன்று தேவை. தொண்டமான் — செல்லச்சாமியை யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கோரும் உங்களது பிரச்சாரத்தையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். தொழிலாளர் ஆட்சி வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் நீங்கள் கூட்டும் ஏப்ரல் 21 மகாநாட்டிலும் நான் கலந்து கொள்வேன்.''



எஸ். தொண்டமான் ஜே. ஆர். ஜயவர்தன

அட்டன் பெரியடன்பார் தோட்டத்தைச் சேர்ந்த பி. இராமையா என்ற தொழிலாளி, தோட்டத்தில் மீண்டும் வேலை பெற்றுத்தருவதாக கூறி இ. தொ. கா. தலைமை 12 வருடங்களாக ஏமாற்றிய சோகக் கதையை கூறுகையில் கூறியதாவது: ''எங்கள் தோட்டத்தில் காட்டுப்பகுதியில் மாணிக்கக்கல் தோண்டியதாக குற்றச்சாட்டி, பொலிசாரின் வேண்டுகோளின் பேரில் 27—2—1979ல் இருந்து நான் வேலை நீக்கம் செய்யப்பட்டேன். இன்றுவரை எனக்கு வேலை கிடைக்கவில்லை. ஒரு குற்றத்துக்கு இரண்டு இடத்தில் தண்டனை அனுபவிக்க வேண்டி உள்ளது. கோட்டிலும் எனக்கு ரூபா. 50/-தண்டம் விதித்தார்கள். தோட்டத்திலிருந்தும் வேலைநீக்கம் செய்யப்பட்டேன். நான் இ. தொ. கா. யூனியனில் தான் அங்கம் வகிக்கின்றேன். இ. தொ. கா. தலைமைக்கு பல கடிதங்கள் அனுப்பினேன். எதுவித பயனும் இல்லை. பணச்செலவுதான் கொழும்பிலிருந்து அட்டன் பிரதேச தலைமைக்கு 'நடவடிக்கை எடுங்கள்' என்று கடிதம் அனுப்புவார்கள். அவ்வளவுதான் பணக்கஷ்டத்தால் இப்போது கடிதம் எழுதுவதையும் நிறுத்திவிட்டேன்.

'தொண்டமான் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிப்பதால் எங்களுக்கு எதுவித பிரயோசனமும் இல்லை. அவர் லான்சர் காரில் பவனி வருகின்றார். நாங்கள் பட்டினி கிடக்கிறோம். தொண்டமான் செல்லச்சாமியை அரசாங்கத்திலிருந்து வெளியேறக் கோரும் உங்கள் பிரச்சாரம் காலடிப்பாக அவசியம். வெளியில் இருந்தால் தான் போராட்டம் ஏதாவது நடாத்துவார்கள். அரசாங்கத்திற்குள் இருந்தால் அதற்கு தலையாட்டுவார்கள்; நீங்கள் நடாத்தும் ஏப்ரல் 21 தொழிலாளர் மகாநாட்டில் நான் கலந்து கொள்வேன்''

### எட்டியாந்தோட்டை

எட்டியாந்தோட்டை கனேபலல தோட்டத்தைச் சேர்ந்த லங்கா தோட்டத் தொழிலாளர் சங்க அங்கத்தவரான டி. வடிவேல் 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் கூறியதாவது: ல. தோ. தொ. சங்கத்தில் தலைவரான டேவிட் இராசையா தோட்டத் துரைமாருக்கு சாதகமாக நடந்து கொள்கிறார். அவர் மாகாண சபை எம். பி.யாக தெரிவான பின்னர் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் எதுவித அக்கறையும் கிடையாது. எனது எல். ரீ. கேஸ் (லேபர் ரிபியூனல்) சம்பந்தமாக பல தடவை யூனியன் ஆபிசுக்கு அலைந்திருப்பேன். ஆனால் எதுவித தீர்வும் கிடையாது. தோட்டத் துரைமார்களுடன் அவர்கள் நெருங்கிய உறவு வைத்திருப்பதால் தொழிலாளர் பிரச்சினைகளைத் தள்ளிப் போட்டு விடுகிறார்கள். இத்தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடனான கூட்டிலிருந்து வெளியேறும்படி நீங்கள் தொடுக்கும் பிரச்சாரத்துக்கு நான் ஆதரவளிக்கின்றேன்.''



இரத்மலானை யூனிவேர்சல் டிசைன் அன்ட் இன்டர்நஷனல் பஷன் பக்டரியைச் சேர்ந்த 1500 தொழிலாளர்கள் 1991 ஏப்ரல் 01ம் திகதியில் இருந்து வேலையிழந்துள்ளார்கள். ஏப்ரல் 1ம் திகதி காலை வழக்கம் போல் வேலைக்கு வந்த இவர்களை 'பக்டரியை கொண்டு நடாத்த முடியாததால் மூடிவிட முடிவு செய்ததாக' கூறும் முதலாளியின் அறிவிப்பு வரவேற்றது கடந்த மார்ச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இவர்கள் உள்ளமர்வு வேலைநிறுத்தம் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு — 10. 1ஆவது மாவிளானத்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்தவக்குபுறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

# தொழிலாளர் பாதை

விலை [illegible]

● மாதமிரு இதழ் — இதழ் 402 ● 1991 பெப்ரவரி 01 வெள்ளிக்கிழமை


**பகிரங்கக் கூட்டமும் மறியலும்**

- ஈராக்கினை காப்பாற்று!
- ஏகாதிபத்திய படைகளை மத்திய கிழக்கிலிருந்து வெளியேற்று!
- ஏகாதிபத்திய சார்பு யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று!

பெப்ரவரி 14ம் திகதி மாலை 4.00 மணிக்கு டீமெல் பார்க், கொம்பனித்தெரு.

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

# ஏகாதிபத்திய கொலைகாரர்கள்

## ஈராக்கில் இரத்தம் உறிஞ்சுகிறார்கள்!

### ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழு!

அமெரிக்க ஜோர்ஜ் புஷ் அரசாங்கத்தின் தலைமையிலான ஏகாதிபத்திய இரத்தப் பசாசுகள் ஈராக்கையும், மத்திய கிழக்கையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் யுத்தத்தினை ஆரம்பித்து ஒருமாதம் கழிவதற்குள் அதன் பயங்கர விளைவுகள் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கம் உட்பட மக்களுக்கு பிரத்தியட்சமாகியுள்ளது.

'குவைத்தை விடுதலை செய்யவும்', 'ஜனநாயகத்தை காக்கவும்' இந்த யுத்தத்தினை ஆரம்பித்துள்ளதாகக் கூறிக்கொண்டு ஈராக் யுத்த இயந்திரத்தினை சிதறடித்து சதாம் ஹுசேனை ஆட்சியை கவிழ்த்து ஹுசேன் படுகொலை செய்வது பற்றி புஷ் அரசாங்கம் வெளிவெளியாகப் பேசியும், செயற்பட்டும் வருகின்றது.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஏகாதிபத்தியவாதிகள் பொழிந்து தள்ளிய நாசகார குண்டுகளின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கையும் ஈராக் மீதான குண்டுவீச்சுக்கள் தாண்டியுள்ள நிலையில், ஏகாதிபத்திய நேச முன்னணி தரை ார்க்க யுத்தம் பற்றிய பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசேனை படுகொலை செய்ய அனுப்பப்பட்ட நேச நாடுகளின்' யுத்த விமானங்கள் 'வாய்ப்பற்ற கால நிலை, காரணமாக திரும்ப நேரிட்டதாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முக்கிய ஊதுகுழலான 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை குறிப்பிட்டது. அமெரிக்க ஊள்வாழிகள் மத்திய ஈராக்கில் சதாம் ஹுசேன் வசித்து வரும் இலக்கினை ஊதி வைத்துக் கொடுத்ததாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இலக்கு ஈராக்கின் இறைமை அரசினை நாசமாக்குவது மட்டும் அன்று. மத்திய கிழக்கு முழுவதையும் தமது காலனியாக்கி கைக்குள் போட்டுக் கொள்வதே. இன்று இது நன்கு தெளிவாகியுள்ளது. யுத்தம் முடிவடையினும் இந்த வளைகுடாப் பிராந்தியத்தில் இருந்து தாம் வெளியேறப் போவதில்லை என்பதை அமெரிக்க ஏகாதிபத்தியப் பேச்சாளர்கள் தெளிவு படுத்தியுள்ளனர்.

### இலக்குகள் பிழைத்தன

கடந்த சில வாரங்களாக அமெரிக்க யுத்த வெறியர்கள் ஈராக்கின் இராணுவ இலக்குகள் மீது தொடுத்த தாக்குதல்கள் சரிப்பட்டு வரவில்லை. ஆனால் ஜனவரி 28ம் திகதி அளவில் மட்டும் 20000 விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. 45 இலட்சம் மக்கள் வாழும் பக்தாத் நகரமும், ஜனநெருக்கடி நிறைந்த ஏனைய நகரங்களிலும் தொன்கணக்கான குண்டுகள் பொழியப்பட்டுள்ளன. இதனால் ஈராக்கின் கைத்தொழில், வர்த்தக நிலையங்கள் உட்பட கோடானு கோடி டாலர் பெறுமதியான சொத்துக்கள் நாசமானதோடு மக்கட் கொலைகளும் இடம்பெற்றுள்ளன. இக்காட்டுமிராண்டிக் குண்டு வீச்சுக்களால் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் கொலையுண்டும் காயமடைந்தும் உள்ளதாக ஈராக் அரசாங்க அறிக்கைகள் குறிப்பிட்டன. குழந்தை பால்மா உற்பத்தி பக்டரிகள் குண்டு வீச்சுக்களின் இலக்காகியுள்ளதாக ஈராக் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

மக்கட் குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற குண்டுவீச்சினால் 35 அடி ஆழம் ஏற்பட்டுள்ளதை ஈராக் அதிகாரிகள் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு சுட்டிக்காட்டினர். இந்த காட்டுமிராண்டி யுத்தத்தினை நடாத்தி வரும் ஏகாதிபத்தியவாதிகள், ஈராக் எண்ணெய் கிணறுகளை வெடிக்கச் செய்து எண்ணெய்யை பாரசிக வளைகுடாவில் பெருக்கெடுக்கச் செய்துள்ளது எனவும் இந்தப் 'பயங்கரவாத' நடவடிக்கையால் கற்குடா மாசபட்ச செய்துள்ளது என்றும் பொய்ப் பிரச்சாரத்திலீடுபட்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் இக்குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என ஐக்கிய நாடுகள் சபையில் ஈராக் தூதுவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். உண்மையில் இந்த எண்ணெய்ப் பெருக்கு, அமெரிக்க விமானங்கள் ஜனவரி 22ல் ஈராக் எண்ணெய் தாங்கிகள் மேல் நடாத்திய குண்டுவீச்சினைத் தொடர்ந்தே ஏற்பட்டுள்ளது என ஈராக் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் வெள்ளை மாளிகையில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சதாம் ஹுசேனை தோற்கடிக்க வேண்டியதற்கு காரணம் இவையே என்றுள்ளார்.


வெள்ளைமாளிகையும், பென்டகனும், ஏகாதிபத்திய வெகுஜன தொடர்புச் சாதனங்களும் சதாம் ஹுசேனை 'யுத்த கிரிமினல்காக' காட்டும் முயற்சியில் இறங்கியுள்ளன. உண்மையில் நிச கிரிமினல்கள் வெள்ளைமாளிகையும், பென்டகனும், பிரித்தானிய, பிரான்சிய, ஜேர்மன், யப்பான் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் கோடீஸ்வரர்களுமே. இந்நூற்றாண்டில் மட்டும் இரண்டு


(16ம் பக்கம் பார்க்க)

### பு. க. க. த்தின் ஏகாதிபத்திய யுத்த எதிர்ப்புக் கூட்டமும் மறியலும்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜனவரி 26ம் திகதி கொழும்பு மாநகர சபை சந்திக்கு அண்மையில் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பினைக் கண்டிக்கும் மறியல் இயக்கத்தினை வெற்றிகரமாக நடாத்தியது. ஈராக்கைக் காப்பாற்று! மத்திய கிழக்கில் இருந்து ஏகாதிபத்திய படை

(16ம் பக்கம் பார்க்க)





**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

www.padippakam.com



# வடக்கில் இனப்படுகொலை யுத்தம் உக்கிரம்

ஈழமக்களுக்கு எதிரான ஏகாதிபத்திய யுத்தத்துடன் இலங்கை — இந்தியப் பிற்போக்கு அரசாங்கங்கள் வட — கிழ் மாகாண தமிழ் தேசியவிடுதலை இயக்கத்தினை இரத்தத்தில் மூழ்கடிக்கும் சதியை உக்கிரமாக்கி உள்ளன.

ஜனவரி கடைசி வாரத்தில் சிங்கள முதலாளித்துவ இனவாத ஆயுதப்படைகள் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் நடாத்திய காட்டுமிராண்டி விமானக் குண்டு வீச்சுக்களால் 16 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு முன்னதாக வடமராட்சிப் பகுதியில் சிறப்பாக வல்வெட்டித்துறையில் விமானப்படை விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சுக்களில் அநேகர் கொல்லப்பட்டதோடு பல நூற்றுக்கணக்கான வீடுகளும், கட்டிடங்களும் தரை மட்டமாக்கப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. கிறிஸ்தவ தேவாலயங்களும் கோவில்களும் குண்டு வீச்சுக்களுக்கு இலக்காகி வருகின்றனவே என பத்திரிகையாளர் கேட்டபோது 'பயங்கரவாதிகள்' உள்ள இடங்கள் குண்டு வீச்சுக்குள்ளாகியுள்ளன என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இரஞ்சன் விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார். யூ. என். பி. அரசாங்கத்தின் காட்டுமிராண்டித் தாக்குதல்களில் இருந்து தப்பும் பொருட்டு பொதுமக்கள் கோவில்களிலும், தேவாலயங்களிலும் கூடுவதே வழக்கமாக இருந்து வந்தது.

கடந்த சில தினங்களாக ஆயுதப்படையினர் மட்டக்களப்பு பகுதியில் மேற்கொண்ட தாக்குதல்களால் 200க்கும் அதிகமான தமிழ் தேசிய இனத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 'காணாமல்போகும்' ஆட்களைக் கண்டுபிடிக்க உதவும்படி தமக்கு தினமும் சுமார் 25 கடிதங்கள் வருவதாக அவசரகாலச்சட்ட விவாதத்தில் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் பிரின்ஸ் காசிநாதர் குறிப்பிட்டார்.

## விடுதலை இயக்கத்துக்கு எதிரான சதி

இதற்கிடையே இந்தியாவில் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தினை நசுக்கும் சதி ஒன்றும் உருப்பெற்று வருகிறது. இதில் சந்திரசேகர் அரசாங்கம், தமிழ் நாடு அரசாங்கம், காங்கிரஸ்—அ. தி. மு. க. தலைமைகள் என்பன ஈடுபட்டுள்ளன. இவை பிரேமதாச அரசாங்கத்தினை நெருக்கடியில் இருந்து கைதூக்கிவிட மீண்டும் முயன்று வருகின்றன. தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் குட்டி முதலாளித்துவக் கட்சிகளின் 347 அங்கத்தவர்களை கைது செய்துள்ளதாக முதலமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

## பொய் குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகள் இயக்கம் அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் தொடர்பு கொண்டுள்ளது என எதிர்க்கட்சிகள் எழுப்பிய குற்றச்சாட்டு பொய்யானது என கருணாநிதி சொல்ல நேரிட்டுள்ளது. தமிழ் விடுதலைப் போராட்டத்தினை நசுக்கும் புதிய தலையீட்டின் ஒரு பாகமாக இந்திய சந்திரசேகர் அரசாங்கத்தின் வெளிநாட்டமைச்சர் ஜனவரி 26ல் இலங்கை விஜயம் செய்யவுள்ளார். 1987ல் திணித்த 'இந்திய — இலங்கை உடன்படிக்கையை' நடைமுறைப்படுத்தும் விடயம் பேச்சுவார்த்தைகளில் இடம்பெறும் என இந்திய தரப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரும் இதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். நெருக்கடியில் மாட்டிக் கொண்டுள்ள பிரேமதாச அரசாங்கத்துடன் 'பொருளாதார உறவுகளை' உறுதி செய்து கொள்ள இந்தியா முயலும் எனவும் சந்திரசேகர் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்திய முதலாளி வர்க்கத்தின் இத்தலையீடும், பிரேமதாச அரசாங்கத்தின் குண்டு வீச்சின் உச்சக் கட்டமும விடுதலைப் புலிகள் தலைமையின் அரசியல் வங்குரோத்தினையும், பிற்போக்கினையும் மீண்டும் அம்பலப்படுத்தி உள்ளது. இம்முறை மீண்டும் 'யுத்த நிறுத்தத்தின்' மூலம் விடுதலைப் புலிகள் தலைமை பிரேமதாச அரசாங்கத்துடனும், இந்திய முதலாளிகளுடனும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என எண்ணினர். பிரேமதாச அரசாங்கத்துடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள இந்திய முதலாளி வர்க்கத்தின் தலையீடு அவசியம் எனவும் அவர்கள் கூறி வந்தனர்.

ஆக்கிரமிப்புப்படைகள் ஒன்றரை வருடகாலம் வட — கிழ் மாகாணங்களில் நடாத்திய இரத்தக்களரியின் பின்னரும் விடுதலைப் புலிகள் தலைமை இந்நிலைப்பாட்டை தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

அரசாங்கம் ஜனவரி 14ல் யுத்த நிறுத்தத்தினை கைவிடுவதாக அறிவித்தது. இருப்பினும் விடுதலைப் புலிகள் தலைமை தமது யுத்த நிறுத்தத்தினை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதாக அறிவித்தது. யூ. என். பி. அரசாங்கத்திடம் இருந்து ஏதேனும் சாதகமான பதில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே இவ்வித் செய்தனர்: இது கைகூடாததைத் தொடர்ந்து ஜனவரி 25ல இந்த ஒரு பக்கச் சார்பு யுத்த நிறுத்தத்தினை முடிவுக்குக் கொணர்ந்தனர். அத்தோடு சிங்கள கிராமவாசிகளைக் கொண்ட மகாஓயாவில் தாக்குதல் நடாத்தவும் விடுதலைப் புலிகள் தலைமை அதன காரியாளர்களை தூண்டியது. அரசியல் ரீதியில் பெரிதும் கையாலாகாத்தனமான நிலைமையில் உள்ள விடுதலைப் புலிகள் தலைமையின் இந்நடவடிக்கைகள் பிரேமதாச அரசாங்கத்துக்கும் சிங்கள முதலாளித்துவ இனவாதிகளுக்கும் ஆயுதங்கள் வழங்குவதாக உள்ளது:

முதலாளித்துவ தேசியவாதத் தலைவர்கள் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை வெற்றிக்கு இட்டுச் செல்ல இந்திய — இலங்கை தொழிலாளர், ஏழைகளின் ஒத்துழைப்புக்கு அழைப்பு விடுக்கத் தயார் இல்லை. அத்தோடு எத்தகைய ஐக்கியத்தினையும் எதிர்க்கின்றனர்.

மறுபுறத்தில் ஈ. பீ. டீபி, ரெலோ, புளொட், முதலாய குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தம்மை பிரேமதாச அரசாங்கத்துக்கு விற்றுத் தள்ளி வட—கிழக்கில் இரத்தக்களரியை உக்கிரமாக்குவதில் பங்கு கொண்டு வருகின்றனர். இதற்கிடையே இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்குவதையிட்டு பெருமைப்படும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள், அரசாங்கத்துடன் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தினை நசுக்கத் தமக்கும் வாய்ப்பளிக்குமாறு அரசாங்கத்தை வேண்டிக்கொண்டுள்ளனர். ஜனவரி 19ம் திகதி வெளியான 'அத்த' பத்திரிகையின் ஸ்டாலினிச தலையங்கம் பின்வருமாறு கூறுகின்றது;

''புலிகள் கும்பலின் யுத்த நிறுத்தத்தினை ஒரு மோசடியாகக் கொண்டு புலிகள் படையை ஒழித்துக் கட்ட இராணுவதிடசங்கற்பம்பூண்டமைக்கு காரணம் இதனை கவனத்தில்கொண்டமையேஎனக் கொள்ள முடியும்.

''ஐக்கிய இலங்கையைத் எதிர்பார்க்கும் அனைவருக்கும் விரைவில் அரசியல் தீர்வினை முன்வைக்கும்—சிறப்பாக வட — கிழக்கு மக்களினதும் முழு நாட்டு மக்களதும் ஆதரவு இராணுவத்துக்கு கிடைக்கவும் உதவுவதாகும்.''

''மக்கள்'' என ஸ்டாலினிஸ்டுகள் இங்கு குறிப்பிடுவது தம்மையும் சமசமாஜ, நவசமசமாஜ தலைவர்களையும் என்பதில் சந்தேகம் இல்லை.

வடக்கு — கிழக்கில் யுத்தத்தினை உக்கிரமாக்குவது என்பது பிரேமதாச அரசாங்கம் இன்று இலங்கையிலும் தமிழ் ஈழத்திலும் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக உக்கிரமாக்கியுள்ள தாக்குதலின் புதிய சட்டமாகும். வடக்கு—கிழக்கு மாகாணங்களில் இருந்து இலங்கை இராணுவத்தை உடன் அகற்றுமாறும் தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்யும்படியும் கோரும் பிரச்சாரத்தினை தீவிரப்படுத்துவதன் மூலம் யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றி, இலங்கை — தமிழ்ஈழம் சோசலிச குடியரசினை — அதாவது தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை நிறுலப் போராடுதல் தீர்க்கமாகியுள்ளது இந்நிலைமையுள் தமிழ் — சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியத்தினை உறுதி செய்வது தீர்க்கமானது. வட—கிழ்மாகாணங்களில் தமிழ் விடுதலைப் போராளிகளை தொழிலாளர், ஏழை குடன்ஐக்கியப்படுத்தி, தொழிலாளர் — விவசாயிகள் சோவியத்துக்களை கட்டிஎழுப்ப வேண்டும். விடுதலை யுத்தத்தினை இந்த இலக்கில் திருப்ப வேண்டும். இப்போராட்டத்தினை முன்னெடுக்கும் பொருட்டு புரட்சித் தலைமையை உறுதி செய்ய வேண்டும். இதற்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையுமாறுதொழிலாளர், விவசாயிகள், விடுதலைப் போராளிகளை நாம் வேண்டுகின்றோம்;

# ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு எதிரான ஸ்டாலினிச குண்டர் தாக்குதலுக்கு கண்டனம்

கடந்த டிசம்பர் 3ம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை தொழிற்சங்க சம்மேளன மகாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களுக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக பிரசுரங்களை விற்பனை செய்துகொண்டிருந்த அதன் அங்கத்தினர்கள் ஸ்டாலினிசக் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். உபாலி குலரத்ன என்ற குண்டனின் தலைமையில் இத்தாக்குதல் இடம் பெற்றது. இத்தாக்குதலில் பு. க. க. மத்திய குழு உறுப்பினரும் இலங்கை சோசலிஸ்டுகள் தேசியச் செயலாளருமான தோழர் ... [illegible] ... ஜேகன்ட்ஸ் முதலாளிகளால் வேலைநீக்கம் செய்யப்பட்ட இலங்கை பொறியியல் ஊழியர் சங்க கிளைச் செயலாளர் ஆர். ஏ. கருணாரத்ன ஆகியோர் காயமடைந்தனர்.

டிசம்பர் 9ம் திகதி பு. க. க. அங்கத்தினர்களை பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கும் சதியில் இலங்கை ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஈடுபட்டனர். கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழு உறுப்பினரான ஜே. ஆ. விக்ரமட்டின் அழைப்பின் பேரில் பு. க. க. உறுப்பினர்களை மண்டப வளவில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் கருவாக்காது பொலிசார் ஈடுபட்டனர்.

இந்த ஸ்டாலினிச குண்டர் தாக்குதலுக்கு எதிராக தொழிலாள வர்க்க இயக்கத்தில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கண்டனக்கடிதங்களில் ஒன்றை இங்கு பிரசுரிக்கின்றோம். இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவை சங்கத்தினைச் சேர்ந்த பேர்டி நாணாயக்கார பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''தொழிலாள வர்க்க நடவடிக்கைகளில் தலையிட தொழிலாளர்களுக்கு ... படை ... கூட மீறும் இந்த அவமானம் நிறைந்த தாக்குதலின் பின்னணியில் உள்ள அரசியல் வங்குரோத்து நன்கு தெளிவானது தொழிலாள வர்க்கத்தின்மேல் தட்டில் உள்ள இவர்களிடம் தமது அரசியல் நிர்வாணக் கோலம் அம்பலமாகும்மா என்ற பீதி இருந்து வருகின்றது! குட்டி முதலாளித்துவ 'இடதுசாரி' கோஷங்களின் பின்னால் மறைந்து கொண்டுள்ள இவர்களின் அரசியல் மிகவும் கையாலாகாத்தனமானது!''

## கண்டனம்


இந்த குண்டர் தாக்குதலை ... தொழிலாள வர்க்க அமைப்புக்களுள் நிறைவேற்றும் படியும், அக்கண்டன செய்திகளை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிச தலைமைப்பீடத்துக்கு அனுப்பி வைக்கும்படியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. அதன் பிரதியை தொழிலாளர் பாதையில் பிரசுரிக்கும் பொருட்டு எமக்கு அனுப்பி வைக்கவும். இத்தாக்குதலை கண்டித்து சீ. எம். யூ. கிளோன் தியேட்டர் கிளைச் சங்கம், இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆய்வு நிறுவன அறிவியல் உத்தியோகத்தர் சங்கம் ஆகியன கண்டனக் அறிக்கை ...

படிப்பகம்

www.padippakam.com



# காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி: ம




அக்டோபர் புரட்சியில் லெனினுடன் இணைத்தலைவரும், நான்காம் அகிலத்தின் ஸ்தாபகருமான லியான் டிராட்ஸ்கியின் மிகச் சிறந்த தத்துவார்த்த படைப்பான "காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி சோவியத் யூனியன் என்பது என்ன? அது எங்கு செல்கிறது?எனும் நூல் 1936ல் எழுதப்பட்டது.இந்நூல் இப்பொழுது திருத்தம் செய்யப்பட்ட பதிப்பாக வெளிவந்துள்ளது. இதற்கு வொர்க்கர்ஸ் லீக்கின் தேசிய செயலாளர் டேவிட் நார்த் எழுதிய புதிய அறிமுகவுரையை கீழே தருகிறோம்.

அரசியல் இலக்கியங்களின் வரலாற்று சாதனைகளில் லியான் டிராட்ஸ்கியின் காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி போன்ற சில படைப்புக்களே காலத்தின் பரீட்சைக்கு தாக்குப் பிடித்தன. அதன் முதல் வெளியீட்டுக்குப் பின்னர் 50 வருடங்கள் சென்ற பின்னரும் சோவியத் யூனியன் பற்றிய அதன் ஆய்வு கடந்து செல்ல முடியாததாகவே உள்ளது. கடந்த சில பத்தாண்டுகளில் பொதுமக்களுக்கு முதலாளித்துவ "சோவியத் இயல்" வழங்கிய எண்ணற்ற ஆயிரக்கணக்கான நூல்களை வரிசைக் கிரமமாக திரும்ப படிப்பதை விட, காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சியை ஒரு தடவை படித்தாலே சோவியத் சமுகத்தின் அமைப்பு, இயக்குசக்தி பற்றிய மேலதிகமான அறிவை பெறமுடியும்.

காசுக்காக எழுதும் எண்ணற்ற அறிவு ஜீவிகள் மற்றும் பரிசுகள வெல்லும் நிருபர்களின் பொதுவான சம்பிரதாய விழாகளுக்கு இணங்கும் சலிப்பூட்டும் எழுத்துக்களுடன் டிராட்ஸ்கியின் மார்க்சிச ஆய்வின் சிறந்த படைப்பின் விஞ்ஞான பெறு மதிப்பை ஒப்பிட்டு பார்ப்பதற்கான புறநிலையான ஆதாரங்களை கடந்த ஐந்து வருடங்களின் நிகழ்ச்சிகள் வழங்குகிறது.

கோர்பச்சேவ் ஆட்சிக்கு வந்த பின்னரும் கூட சோவியத் அரசாங்கம் மத்திய திட்டமிடும் கொள்கையை நிராகரிக்கும், உற்பத்தி சாதனங்களின் மீதான தனிஉடமைக்கு இருக்கும் அனைத்து கட்டுப்பாடுகளையும் இல்லாது செய்யும், நாகரிகத்தின் மிகச் சிறந்த சாதனை சந்தைதான் என்ற பிரகடனம் செய்யும், உலக முதலாளித்துவத்தின் பொருளாதார, அரசியல் அமைப்பினுள் சோவியத் யூனியனை முழுமையாக ஒன்று சேர்க்க முனையும் என்று அவர்களுள் யார் முன் கூட்டியே கூறினார்கள்?

"ஆனல் 1936ல் இதைப்பற்றி நார்வேயில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட அரசியல் வாதியாக இருந்து எழுதும் போதே (அங்கிருந்து அவர் மிக சீக்கிரமாகவே சமூக ஜனநாயக அரசாங்கத்தின் கட்டளைகளின் பேரில் நாடு கடத்தப்பட இருந்தார்) லியான் டிராட்ஸ்கி எச்சரிக்கை செய்தார். ஸ்டாலினிச ஆட்சியின் கொள்கைகள் சோவியத் யூனியனில் சோசலிசத்தின் வெற்றியை உத்தரவாதம் செய்வதிலிருந்து விலகி வெகுதூரத்தில் நிற்கிறது,அதுஉண்மையில் முதலாளித்துவத்தை மீட்டமைப்பதற்கான தளத்தையே தயார் செய்கின்றது என்ருர். 1917 அக்டோபர் புரட்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட சொத்து வடிவங்கள் தூக்கி வீசப்படுவது எப்படியான வளர்ச்சிக்குப் போக்குகளின் மூலம் சாதிக்கப்படும் என்பது பற்றி டிராட்ஸ்கி காரணங்காட்டி முறைப்படுத்திக் கூறியது வியப்பூட்டும் அளவுக்கு பெறுமதி வாய்ந்ததாக உள்ளது. 1985-ல் பெரஸ்துரொய்கா தொடங்கப்பட்டபின் ஏற்பட்ட நிகழ்ச்சிகளில் இருந் இப்போது முரண்பாட்டுக்கு இடம் இல்லாமல் துணிவாக கூற முடியும்.

காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி ஒரு மேதாவியின் வேலை என்பது மட்டுமல்ல, இதன் ஆசிரியர் கையாண்ட ஆய்வு முறையே சோவியத் யூனியன் பற்றி எழுதிய அனைத்து நூல்களிலிருந்தும் இந்நூலை வேறுபடுத்திக் காட்டுகிறது. பொருள் முதல் வாத (சடவாத) இயக்கங்களை எடுத்துரைப்பவர்களில் மிகச்சிறந்தவராக டிராட்ஸ்கி விளங்கினர். அதுவே மனித சிந்தனையின் வளர்ச்சிக்கு மார்க்சிசத்தின் அழிக்க முடியாத பங்களிப்பாக விளங்குகிறது. காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சியின் நோக்கம உலக வரலாற்றில் முதலாவது சோசலிசப் புரட்சியின் மூலமாக உருவான அரசின் பரிணமத்தில உள்ளடங்கி உள்ள உள்முரண்பாடுகளை வெளிப்படுத்துவதே. அதே சமயம் முதலாளித்துவ படிப்பாளிகள், நிருபர்களை பொருத்தவரையில் சோவியத் யூனியனை ஒரு "சோசலிச அரசு" என்று வரைவிலக்கணப்படுத்தி பொதுவாக கேள்விக்கிடமின்றி அனுமானிந்து அவர்களது வேலைகளுக்கு அடிப்படையாகக் சோவியத்தின் யதார்த்த நிலைமையை விபரிப்பதற்கு "சோசலிஸ்டு" என்ற பதத்தை எளிதாக பயன்படுத்துவதை டிராட்ஸ்கி நிராகரித்தார். அப்பதத்தை விமர்சனமின்றி பயன்படுத்துவது யதார்த்தத்தை வெளிச்சமாக காட்டுவதற்கு பதிலாக அதை மறைப்பதற்கே சேவை செய்கிறது என்று அவர் எச்சரித்தார், பின் தங்கிய ரஷ்யாவை ஒரு சோசலிச சமுதாயமாக மாற்றுவதற்கான தொடக்க அரசியல் அத்திவாரங்களையே அக்டோபர் புரட்சி போட்டுள்ளது என்று அவர் வலியுறுத்தினர், அப்படியான அத்திவாரங்களில் இருந்து இறுதியாக சோசலிசம் தோன்றுமா இல்லையா என்பதும், எந்த காலஇடைவெளியில் தோன்றும் என்பதும் தேசிய மற்றும் சர்வதேச காரணிகளுக்கு இடையிலான ஒரு சிக்கலான உள்ளூடுருவலிதான் தங்கியுள்ளது. எப்படியாயினும், மார்க்சிசத்தின் அகராதியில் மரபு வழியாக வரையறை செய்யப்பட்டவாறு சோசலிசம், ஸ்டாலினிச அரசாங்கம் புளுகுவதைப்போல சோவியத் யூனியனில் இருக்கவில்லை என்று டிராட்ஸ்கி கூறி வந்தார்.

ஆனல் சோவியத் யூனியன் சோசலிஸ்ட் இல்லை என்ருல் அப்போது அதனை முதலாளித்துவம் என்று வரையறுக்க முடியுமா? இந்த பதத்தையும் டிராட்ஸ்கி நிராகரித்தார். ஐயத்திற்கு இடமின்றி அக்டோபர் புரட்சியானது உற்பத்தி சாதனங்களின் மீதான தனி உடமையை ஒழித்து சொத்தை தொழிலாளர் அரசின் கைகளிலே கொடுத்தது. அதனல் சோவியத்யூனியனை வரையறை செய்யும்பொழுது முதலாளித்துவம், சோசலிசம் போன்ற முடிவான நிலையான சொற்பதங்களை பயன் படுத்துவதை டிராட்ஸ்கி வேண்டுமென்றே தவிர்த்தார். பதிலாக சோவியத் யூனியனின் இயக்கு சக்தி தோற்றங்களையும் அவை மேலும் வளர்ச்சி அடையக் கூடிய சாத்தியமான வடிவங்களையும் சுட்டிக்காட்டும் ஒரு கருத்துருவை உருவாக்க அவர் முயற்சித்தார். சோவியத் யூனியன் ஒரு "இடைமருவும்" சமுதாயம் என்றும் அதன் குணம்சமும், விதியும் இன்னும் வரலாற்றினல் தீர்மானிக்கப்படவில்லை என்றும் முடிவுக்கு வந்தார். தொழிலாளவர்க்கம் ஸ்டாலினிச ஆட்சியை தூக்கி வீசி, சோவியத் ஜனநாயகத்தின் அடிப்படையில் அரசு அதிகாரத்தை மறுபடி பெற்றுக் கொள்ளுமாயின் சோவியத் யூனியன் சோசலிசப் பாதையில் வளர்ச்சி அடையமுடியும் என்ருர். ஆனல் அதிகாரத்துவம் அதிகாரத்தை தக்கவைத்து அதன் சொந்த சலுகை நிறைந்த நலன்களுக்காக தொடர்ந்து மூச்சடைக்க வைக்குமாயின் தேசியமாமாக்கப்பட்ட உற்பத்தி சக்திகளின் மற்றும் மத்திய திட்டமிடலின் ஆக்கபூர்வமான சாத்தியங்கள் முதலாளித்துவ பக்கமாக அழிவுகரமாக வீழ்ச்சி அடைவதும், இறுதியில் சோவியத்யூனியன் அழிக்கப்படுவதும் கூட சாத்தியமானதுதான் என்ருர்.

சோவியத் யூனியனின் வளர்ச்சி பற்றி இரண்டு நேரெதிரான வேறுபாடான படத்தை டிராட்ஸ்கி காட்டி அனுமான "அடிப்படையிலான வரையறை". பெயரளவிலான தர்க்கத்தின் செயல் விதிகளினல் வழிநடத்தப் படும் சிந்தனையை கொண்டவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதை டிராட்ஸ்கி நன்கு அறிவார் "அவர்களுக்கு ஆம் என்ருல் ஆம், இல்லை என்ருல் இல்லை என்ற சொற்ப சூத்திரங்களே விருப்பமானது என்ருர் ஆனல் சமூக யதார்த்தம் முரண்பாடுகளைக் கொண்டது, அதனை தர்க்க ரீதியிலான நியாயம் என்ற நிலையானகட்டமைப்பினுள் கிரகிக்க முடியாது

"சமூ த்தன்மை எப்பொழுதுமே ஒரு முடிவான குணத்தைக் கொண்டிருக்குமாயின் சமூகவியல் பிரச்சினைகள் நிச்சயமாக இலகுவானதாக இருக்கும். எவ்வாருயினும் தர்க்க பூர்த்தியின் தேவைக்காக யதார்த்தத்தை தூக்கி வீசுவதைவிட அபாயகரமானது எதுவும் இல்லை, இனறு உங்களுடைய திட்டங்களை மீறும் அப்படியான அம்சங்கள் நாளை முழுமையாக அதனைக் கவிழ்க்கவும் செய்யலாம். எமது ஆய்வில், முன் அறிந்திராத, ஒப்பீடு இல்லாத ஒரு சக்திவாய்ந்த சமூக உருவமைப்பிற்காக ஆய்வை பலாத்காரம் செய்வதை அனைத்துக்கும் மேலாக தவிர்க்கிருேம், விஞ்ஞானத்தைப்போல அரசியல் கடமையானது, ஒரு முடிவற்ற வளர்ச்சிப் போக்கிற்கு ஒரு முடிவான வரைவிலக்கணம் கொடுப்பது அல்ல ஆனல் அதன் அனைத்துக் கட்டங்களையும் கண்காணிப்பதும் அதன் முற்போக்குத் தன்மையை பிற்போக்குத் தன்மைகளிலிருந்து வேறுபடுத்துவதும், அவற்றின் பரஸ்பர உறவுகளை அமபலப்படுத்துவதும, வருபட்ட வளர்சசிகளின் சாத்தியத்தை முன்கூட்டியே பார்ப்பதும், இந்த முன்கூட்டிய பார்வையில் செயலுக்கான தளத்தை ஏற்படுத்துவதும் ஆகும."



செம்படை வீரர்கள் மத்தியில் லெனினும்

காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சியில் வழங்கப்பட்ட ஆய்வினல் பெருமளவில் ஊக்கமளிக்கப்பட்ட தத்துவார்த்த போராட்டத்தின் போது சடவாத இயங்கியல, வரலாற்று சமூக கண்டுபிடிப்புகளுக்கான ஒரு விஞ்ஞான முறை அல்ல என்று கூறிய ஜேம்ஸ் பெர்னம் அது தாக்குதலுக்கான சொல் பதங்களை உருவாக்குவதில் டிராட்ஸ்கியினல் கையாளப்பட்ட ஒரு இலக்கிய தந்திரமாகும் என்ருர். இந்த விமர்சனத்தின் ஆழமற்ற தன்மையை அம்பலப்படுத்துவதற்கு டிராட்ஸ்கியின் ஆய்வின் அமைப்பை கவனமசக பரிசீலித்தால் போதுமானது. மதிநுட்பம் வாய்ந்தவற்றை கண்டுபிடிக்கும் திறனுள்ளவர்களால் கையாளப்படும் புத்திசாலித்தனமான வாதத்தின் ஒரு வடிவம் இயங்கிய தர்க்கம் அல்ல, சரியா சொன்னல் அது இயற்கை மற்றும் அனைத்து சமூக பிர சனைகளுக்கு அடிப்படையா இருக்கும் முரண்பாடுகள் கொண்ட சிந்தனையி பொதுவான வெளிப்பாட கும். சோவியத் சமூகத்தில் இயக்கத்திலுள்ள பகைை யுள்ள அதேவேளை ஒன் லொன்று தங்கியுள்ள பொரு ளாதார, சமூக, அரசிய போக்குகளை டிராட்ஸ் அம்மணமாக காட்டுவதற்கு தீர்மானித்தார்,

அக்டோபர் புரட்சியே அனைத்து வரலாற்று முரண் பட்ட உண்மைகளின் மி உன்னதமானதின் உற்பத்தி யாகும், 1917ல் தொடங்கிய முதலாவது சோசலிசட் புரட்சி பொருளாதார ர் யாக வளர்ச்சிகண்ட மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்காவைச் சேர்ந்த நாடுகளுள் ஒன்றில் நடக்கவில்லை. ஆனல் அக்காலப் பகுதியில் பெரும் முதலாளித்துவ நாடுகளில் மிகப் பின்தங்கிய ரஷ்யாவல்தான், வியப்பூட்டும் 8 மாதங்களுக்குள் நடந்தேறியது. அதாவது பெபரவரியிலிருந்து அக்டோபருக்குள் ரோமனோவ் ராஜ வம்சத்தின் (decrepit) நிலப்பிரபுத்துவ ஸ்தாபனங்களை ரஷ்ய மக்கள் தகர்த்து எறிந்தனர். அதற்கு உலகம் அதுவரை கண்டிராத மிகவும் புரட்சிகரமான கட்சி தலைமை, தாங்கியது ஒரு புதிய அரசு அமைப்பை உருவாக்கியது, இதற்கு தொழிலாளர் சபைகள் (சோவியத்துகள்) தளமாக அமைந்தன.

மார்க்சிசத்தின் மிதவாத எதிராளிகள் கூறுவது போல் சார் அரசாங்கத்திற்கு ஒரு சாத்தியமான அரசியல் மாற்றீட்டை உருவாக்க முதலாளித்துவத்தின் இயலாமைக்கு போல் ஷேவிக்குகளின் சூசகமான சூழ்ச்சிகள் காரணம் அல்ல ஆனல் வரலாற்று ரீதியாக ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் பின்னடைந்த, வளர்ச்சியே ஆகும.இங்கிலாந்திலும் பிரான்சிலும் நடந்த "சிறப்பாக எடுத்துக் காட்டும்" ஜனநாயகப் புரட்சிகளி

www.padippakam.com



# ர்க்சிசத்தின் உன்னத படைப்பு

ில்ப்பிரபுத்துவத்திற்கு எதி ான போராட்டத்திலும், தேசிய ஐக்கியப்படுத்தலிலும் தலாளித்துவம் அதன் அர யல் மேலாதிக்கத்தை நிலை ாட்டியது; அந்த நிலைமை ளில் நவீன அர்த்தத்தில் றிஞல் பாட்டாளிவர்க்கம் ங்கே இருக்கவில்லை அதா து ஒரு தனிப்பட்ட சமூக ர்க்கமாக வளர்ச்சி அடை ம் ஆரம்ப நிலையில் தான் ருந்தது. ரஷ்யாவில் த்தொன்பதாம் நூற்றாண் ன் இறுதி பத்தாண்டுகளில் தாழிற்துறையின துரித ளர்ச்சியினால் உருவாக்கப் ட்ட பாட்டாளி வர்க்கத் ன் சமூக, அரசியல் வளர்ச்சி ர், ஏற்கனவே தேசிய முத ளித்துவத்தை கடந்து ருந்தன அப்போதுதான் னநாயகப் போராட்டம் டித்தது. 1905 புரட்சி 12 நடங்களுக்கு பின்னர்



ஸ்கியும்

டபெற்ற அக்டோபர் ட்சிக்கு ஒரு மகத்தான ந்திகை'' ஆக இருந்தது போது கிளர்ச்சிகளுடன் தளவில் வேலைநிறுத்தங் வெடித்தன. சென்ட் டர்ஸ்பேர்க்கில் மகத் சோவியத் உருவானது ன் தலைவர் லியான் ட்ஸ்கி), மேலும் அது ச்சாதிகாரத்திற்கு எதி போராட்டத்தில் ழிலாளவர்க்கத்தின் க்க பாத்திரத்தை உறுதி தது. சாரிச எதேச்சாதி த்தைவிட மிகவும் பயங் ான ஒரு எதிரியை லிச பாட்டாளி வர்க் ன் வடிவில் எதிர்கொண் ாதாக 1905 எழுச்சிகள் முதலாளித்துவத்தை ச் செய்தன. தொழிலாள கத்தை அரசியல் ரீதி ஆதிக்கம் செலுத்து அதற்குள்ள சொந்த ற்ற தன்மை பற்றி ாளித்துவம் அதிகமாக ந்திருந்தது. அந்த அள அது பழைய அரசாங் ற்கு எதிராக பரந்த சிகரமான போராட்ட ங்களை பயன்படுத்துவதில் ந்தளவு விருப்பமுடைய இருந்ததுக்கு காரணம் ன் நிச்சயமற்ற பிரதி வுகளே.

### ரஷ்யப் புரட்சி

17 சமபவங்கள் முத ித்துவத்தின் அரசியல் செயலற்ற தன்மையை சீக்கிர மாகவே அம்பலப்படுத்தியது சாரின் வீழ்ச்சியில் பெரும் பாலும் எந்தப்பங்கும் வகிக் காத முதலாளித்துவம் ஒரு இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கியது. அது நகர்ப் புற பாட்டாளிவர்க்கத்தின் கோரிக்கைகளை திருப்திப் படுத்துவது என்பது ஒருபுறம் இருக்க பலகோடி விவசாயி களின் கோரிக்கைகளை திருப் திப்படுத்துவதற்கு கூட தீவிரமான எந்த முன் முயற்சி யும் எடுக்க திறனின்றி இருந் தது. பெரும் ஏகாதி பத்திய சக்திகளிடம் பொரு ளாதார ரீதியாக தங்கியி ருந்த அழுத்தத்தினாலும் பிரதேசங்களை கைப்பற்றும் ரஷ்ய முதலாளித்துவத்தின் பேராசைகளை திருப்திப்படுத் தவும் உருதிபூண்ட - இடைக் கால அரசாங்கம் உலகப் போரில் ரஷ்யா தொடர்ந்து பங்கெடுப்பதை தீர்மா னித்தது. இது, யுத்தத்திற்கு முடிவை கொண்டு வரவும் நாட்டுப்புறத்தில் நிலப் பிரபுத்துவ பரம்பரை சொத்துரிமையை முழுமை யாக ஒழிக்கும்படியும் கோரும் மக்களுடன் மோதும் நிலையில் கொண்டு வந்து விட்டது. இந்தக் கோரிக் கைகள் இறுதியில் அக்டோ பரில் போலஷ்ஷவிக் கட்சியின் தலைமையின்கீழ் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றி மூலம் நிறைவேறின. இந்த உண்மையான வரலாற்று உற்பத்தி— தொழிலாளவர்க் கம அரசு அதிகாரத்தை கைப்பற்றுவதன் மூலமாக ஜனநாயகப் புரட்சியை முடி வுக்கு கொண்டு வரல் —முன் கண்டிராத அளவு வீச்சைக் கொண்ட பிரதி விளைவு களைக் கொண்டதாக அமைந் தது. பாட்டாளி வர்க்கத் தலைமையின்கீழ் ஜனநாயகப் புரட்சி தவிர்க்க முடியாதபடி சோசலிசத் தன்மையை எடுத் துக் கொள்கிறது; அதாவது நாட்டுப்புறத்தில் நிலப் பிரபுத்துவத்தின் மிச்ச மீதங் களை முழுமையாக ஒழிப்பது, முதலாளித்துவ சொத்து வடிவங்களுடனும், உற்பத்தி சாதனங்களை சமூக மயமாக்கு வதுடனும் ஆழமான உள் தொடர்பை கொண்டதாக உள்ளது.

ஆனல் 1917ன் பிரமாண்ட மான வரலாற்றுப் பாய்ச்ச லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டி இருந்தது. ரஷ்யப் பாட்டாளிவர்க்கம் ஆட்சியை கைப்பற்றுவதற்கு உதவி அளித்த நிலைமைகள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொழிலாளர் அரசில் சோச லிச கட்டுமாண வளர்ச்சிக்கு தடுமாறும் படியான தடை களை உருவாக்கியது. மிகவும் முன்னேறிய சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட ஒரு அரசாங்கத்திடம் மிக வும் குறைவான பொருளா தார வளங்களே இருந்தன. மேலும் ரஷ்ய சமூகத்தின் தீவிர பின்தங்கிய நிலைமை இது கடந்த கால சாரிடமி ருந்து போல்ஷேவிக் அரசாங் கத்திற்கு பரம்பரைச் சொத் தாக விடப்பட்டது. முதலா வது உலகப் போரினல் உருவாக்கப்பட்ட பொருளா தார சீரழிவினலும் அதன் பின்னர் 1918ல் வெடித்த உள்நாட்டு யுத்தத்தினலும் இந்த பின்தங்கிய நிலைமை மேலும் கூட்டப்பட்டது. ரஷ்யாவில் நிலவிய நிலைமை களின் கண்ணோட்டத்தில் மட்டும் கருதினல் போல்ஷே விக்குகள் ஆட்சியை கைப்பற்றியதானது, நாக ரிகமற்ற அசட்டுத் துணிச்ச லான சாகசமாக தோன்ற லாம், ஆனல் லெனின், டிராட்ஸ்கியின் கணிப்பீடு கள் முதன்மையாக தேசியத் தைவிட சர்வதேச காரணிக ளால்தான் அதிகமாக தங்கி யிருந்தன இது அவர் காலத் தில் வாழ்ந்த மிக சிறந்த ரோசாலக்சம்பேர்க்கினல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவருக்கு அவர்களுடைய கொள்கைகள் சம்பந்தமாக சொந்த விமரிசன அணுகு முறை இருந்த போதிலும் 1918ல் ரோசாலக்சம்பர்க் எழுதியதாவது: ''ரஷ் யாவில் புரட்சியின் இறுதி முடிவு முழுமையாக சர்வதேச சம்பவங்களில தான் தங்கியி ருக்கிறது. போல்ஷேவிக்குகள் அவர்களுடைய கொள்கையை முழுமையாக உலக பாட்டாளி வர்க்க புரட்சியில் அடிப்படை யாக கொண்டிருப்பது, அவர் களுடைய அரசியல் முன் பார்வைக்கும், கோட்பாட்டில் உறுதிக்கும், அவர்களுடைய கொள்கைகளின் துணிகர மான கண்ணோட்டத்திற்கும் ஒரு தெளிவான நிருபண மாகும்''.(ரஷ்யப்புரட்சி, மிச்சி கன் பல்கலைக் கழகம், பக்கம் 28).★

★லக்சம்பேர்க்கை போல் ஷேவிக்குகளுக்கு எதிராக நிறுத்துவதற்கு எண்ணற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அவருடைய விமரி சன கண்ணோட்டத்தை அவற் றின் பொருத்தமான அரசியல் வரலாற்று உள்ளடக்கத்தில் இருந்து சிறந்த புரட்சியா ளரை நினைவு கூறுகையில் அவருக்கு மரியாதை செலுத் தும் வகையில் போல்ஷேவி சத்தின் வரலாற்று முக்கியத் துவம் பற்றிய அவரது இறுதி மதிப்பீட்டை கூற அனுமதி யுங்கள்:

''போல்ஷேவிக்குகளின் கொள்கைகளில் முககிய மானதற்கும். முக்கியமற்ற திற்கும், உள்ளடக்கத்திற்கும் அசாதாரண தோற்றத்திற்கும் இடையே வேறுபடுத்தி பார்ப் பதுதான முறையானதாகும். தற்போதைய காலத்தில், உலக முழுவதும் தீர்க்கமான இறுதி போராட்டங்களை எதிர்கொள்ளும்போது சோச லிசத்தின் மிக முக்கியமான பிரச்சினைதான் நமது காலத் தின் சூடான பிரச்சினையாகும்.

இது தந்திரோபாயம் பற்றி இந்த அல்லது அந்த இரண் டாந்தர பிரச்சினை பற்றிய தல்ல. ஆனல் பாட்டாளி வர்க்கத்தின் செயலுக்கான திறன், நடவடிக்கைக்கான பலம், சோசலிசத்தின் சக்தி பற்றிய நம்பிக்கை போன் றவை. இதில் லெனினும் டிராட்ஸ்கியும் அவரது நண்பர் களும்தான் முதலானவர்கள், அவர்களே உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கு முன்னுதாரண மாக இருந்தவர்கள், இது வரையில் அவர்கள் மட்டும் தான்உரிமையுடன் குரல் எழுப்பலாம். ''நான் துணிந் தேன்!'' என்று

''இதுவே போல்ஷேவிக் கொள்கையில் முக்கியமான தும் நீடித்ததுமான ஒன்று கும். இந்தவகையில் அவர்கள் அரசியல் அதிகாரத்தை கைப் பற்றி சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் முன் நடை போட்டதன்மூலம் அழிக்க முடி யாத வரலாற்று சேவையை செய்திருக்கின்றனர். சோசலி சத்தை அடைவதுபற்றிய பிரச் சினையை நடைமுறையில் முன் வைத்தனர். முழு உலகிலும் உழைப்பிற்கும் மூலதனத்திற் கும் இடையிலான கணக்கை தீர்ப்பதில் சக்தி வாய்ந்த முறையில் முன்னேறியுள்ள னர். ரஷ்யாவில் இப்பிரச் சினையை முன் வைக்கதான் முடியும். ஆனல் ரஷ்யாவிற்கு தீர்க்க முடியாது. இந்த அர்த் தத்தில் எங்குமே எதிர்காலம் 'போல்ஷேவிசத்திற்கு'' உரித்தானது''(ரஷ்யப் புரட்சி பக்கம் 80).

ரஷ்யப் புரட்சியின் எழுச் சிக்கு சர்வதேச நிலைமைகள் அடிப்படையாக இருந்து, ஆட்சியை கைப்பற்ற, போல் ஷேவிக்குகளை நிர்ப்பந்தித்த தைப் போலவே, சோவியத் ரஷ்யாவில் சோசலிசக் கட்டு மாணத்திற்கான சாத்தியக் கூறும் சர்வதேச வர்க்கப் போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி உள்ளது. உலக முதலாளித்துவத்தின் ஐரோப்பிய மையங்களில் ஒன் றினுள் தொழிலாள வர்க்கத் தின் வெற்றியை போல்ஷே விக்குகளின் எதிர்பார்ப்புகள் ஜெர்மனியின் சம்பவங்களை மையமாக கொண்டிருந்தது— பின்தங்கிய ரஷ்யாவின் முன்னே சோசலிசத்திற்கு ஆதாரமான மிக வளர்ச்சி அடைந்த பொருளாதார, தொழில்நுட்ப வளங்களை அது வழங்கும், லெனின், டிராட்ஸ கியை பொருத்தவரையில் போல்ஷேவிக்குகள் ஆட்சியை கைப்பற்றியதானது உலக சோசலிசப் புரட்சியின் தொடக்கம் மட்டுமே. அதனுடைய வளர்ச்சியும் பூர்த்தியும் உலக பாட்டாளி வர்க்கத்தின் முயற்சிகளில் தான் தங்கியிருக்கிறது. போல்ஷேவிக்குள் தீர்க்கமான பங்கு வகித்து ஸ்தாபிக்கப் பட்ட கம்யூனிச அகிலம் முத லாளித்துவத்திற்கு எதிரான உலகப் போராட்டத்தில் மூலோபாய ரீதியான உயர்ந்த அதிகாரத்தை கொண்ட அமைப்பாக சேவை செய்தது.

போல்ஷேவிக் வெற்றியா னது, உண்மையில் பரந்தள வில் சர்வதேச தொழிலாள வர்க்க எழுச்சியின் தொடக்க மாகும். ஆனல் போல்ஷேவிக் கட்சியின் அரசியல் தலைமை களைக் போன்ற ஒரு தலைமை எந்த நாட்டிலும் இலலாதிருந் தது ரஷ்ய தொழிலாளர் இயக்கத்தில் நிலவிய ஒவ் வொரு சந்தர்ப்பவாத போக் கிற்கும் எதிராக வருடக் கணக்காக நடந்த சமரசமற்ற தத்துவார்த்த போராட்டத்தின் விளைவே லெனினது கட்சி ஆகும். 1917ல் ரஷ்யாவிலும் சர்வதேச ரீதியாகவும் நிலவிய சோசலிச போக்குகளுக்கு இடையிலான அரசியல் பிளவு களின் முக்கியத்துவங்களை லெனினது முன்னைய உழைப் புகள் இல்லாமல் மிகத் தெளி வாக வரையறுத்திருக்க முடி யாது. 1903ல போல்ஷேவிசத் திற்கும் மென்ஷேவிசத்திற்கும் இடையிலான பிளவு 1914ல் உலகப் போரின் வெடிப்பினல இரண்டாம் அகிலததினுள் ஏற்படுத்தப்பட்ட பிளவை பத்தாண்டுகளுக்கு மேலாகவே எதிர்பார்த்ததாக இருந்தது. மார்க்சிசத்தையும் அனைத்து குட்டி முதலாளித்துவ சந்தர்ப் பவாதத்தையும் லெனின் வேறுபடுத்திக் காட்டியது 1917ல் போல்ஷேவிக்குகள் சீர்திருத்தவாதிகளுக்கு (மென் ஷேவிக்) முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் கூட்டாளிகளுக்கு எதிரான அரசியல் போராட்டத்தில் வெற்றி அடைவதை சாத்திய மாக்கியது. ஜெர்மனியில்கூட அப்படியான தயாரிப்புகள் எதுவுமே புரட்சிகரமான போராட்டங்கள் வெடித் தெழுவதற்கு முன்பு ஏற்பட வல்லை. அங்கே சந்தர்ப்ப வாதிகளுடன் தீர்க்கமான ஸ்தாபன ரீதியான முறிவும் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக் கப்பட்டதும் 1918 நவம்பர் புரட்சி வெடித்து ஆறு வாரங்களுக்கு பின்னரே நிகழ்ந்தது. இரண்டு வாரங் களுககு பின்னர்தான் ஜனவரி 18, 1919ல் திரை மறைவில் சமூக ஜனநாயக கட்சி அர சாங்கத்தின் சம்மதத்துடன் லக்சம்பேர்க்கும், லீப்னெக்ட் டும் கொலை செய்யப்பட்டனர். இது ஜெர்மன் தொழிலாள வர்க்கத்துக்கு அதன் மிகச் சிறந்த தலைவர்களை இல்லா மல் செய்தது. 1919க்கும் 1925க்கும் இடையில் தொழி லாளவர்க்கம் தொடர்ச்சியாக பெரும் தோல்விகளை ஹங் கேரியில், இத்தாலியில், எஸ்தோனியாவில், பல்கேரி யாவில் எல்லாவற்றையும்விட மோசமாக ஜெர்மனியில் அனுபவித்தது. ஒவ்வொரு சம்பவத்திலும் தோல்வியின் காரணம் தொழிலாள வர்க்கத் தின் முன்னேறிய பிரிவினரின் மத்தியில் ஆதரவை பெற்றி ருந்த பழைய சமூக ஜனநாயக கட்சிகளின துரோகமும் புதிய கம்யூனிச ஸ்தாபனங்களின் அரசியல் பக்குவமின்மையும் ஆகும்.

### அரசின், கட்சியின் சீரழிவு

சோவியத் யூனியனின் நீண்டகால அரசியல் பொரு ளாதார தனிமையானது முன் கண்டிராத பயங்கர பிரதி விளைவுகளை கொண்டிருந்தது. முதலாவது தொழிலாளர் புரட்சியினல் உருவாக்கப் பட்ட அரசு வீழ்ச்சி அடையா விட்டாலும் அது சீரழியத் தொடங்கியது ரஷ்யாவில் பின்னடைந்த முதலாளித் துவத்தின் வளர்ச்சியானது சோவியத் அரசு உருவாவதை சாத்தியமாக்கிய அதே வேளை, உலக சோசலிசப் புரட்சியின் வெற்றிகரமான வளர்ச்சியில் ஏற்பட்ட எதிர்பார்த்திராத தாமதமே, அதன் சீரழிவிற்கு பிரதான காரணமாக இருந் தது. அந்தச் சீரழிவு எடுத்துக் கொண்ட வடிவம்தான் சோவி யத் அரசின் இயந்திரத்திலும் போல்ஷேவிக் கட்சியிலும் அதிகாரத்துவத்தின் பெருமள விலான வளர்ச்சியும் அதன் கைகளில் அசாதாரண முறை யில் அதிகாரங்கள் குவிக்கப் பட்டதும் ஆகும்.

சமூக வளர்ச்சிப் போக்கு களின் ஆய்வை, தனிப்பட்ட மற்றும் மனோவியல் ரீதியான எண்ணங்கள் சம்பந்தமான ஊகங்களினல் பிரதியீடு செய் யும வரலாற்று அகநிலை வாதத்தை இகழ்வுடன் டிராட்ஸகி நிராகரித்தார். ஸ்டாலினின் எதேச்சாதிகார ஆட்சியில் இட்டுச்சென்ற அதிகாரத்துவத்தின் வளர்ச் சிகு வேராக இருந்தது ஒரு பின்தங்கிய நாட்டில் உருவாக் கப்பட்ட தொழிலாளர் அரசு சிறப்பாக கொண்டிருந்த பொருளாயாத முரண்பாடு களாகும். அதன கண் ணோட்டத்தில் பார்க்கையில்

தொடர்ச்சி அடுத்த இதழில்

படிப்பகம்

www.padippakam.com

TN/MS (N) 686 தொழிலாளர் பாதை—மார்ச், 1991 Regd. No. RDIS/4694/89

# வளைகுடா போர் - ஏகாதிபத்தியங்களுக்குள் மோதல்

'குவைத்' மீதான ஈராக்கின் இராணுவத் தலையீட்டை தூண்டிவிட்டு அதனை சாக்காக பயன்படுத்தி, அமெரிக்க ஏகாதிபத்தியம் வளைகுடாவில் அதன் காலனி ஆதிக்க திட்டத்தை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளது என்பது அம்பலமாகி உள்ளது. குவைத்திலிருந்து முழுமையாக ஈராக்கிய இராணுவம் வாபஸ் வாங்கப்பட்ட பின்னர், அமெரிக்க இராணுவம் ஈராக்கின் 15,000 சதுரமைல்களை ஆக்கிரமித்துள்ளது. அமெரிக்கா ஆக்கிரமித்துள்ள இந்த பிரதேசம் குவைத்தை விட பெரிய பிரதேசமாகும், வளைகுடாவில அமெரிக்க ராணுவத்தின் தளபதியான சுவாட்ஸ்கொப் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் இதை ஒப்புக் கொண்டார். "குவைத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதை விட மிக அதிகமான தேவைகள் இந்த யுத்தத்திற்கு இருக்கிறது" என்றார் அவர்.

ஈராக்கின் உள்நாட்டு யுத்தத்தை ஒடுக்க சதாம் உசேன் ஹெலிகாப்டர்களை பயன்படுத்துகின்ற வரையில் மத்தியகிழக்கில் அமைதி இருக்காது என்று அமெரிக்க ஜனாதிபதி டுஷ் கூறியுள்ளார். ஈராக்கின் இராணுவ படையை முற்றாக அழித்து ஒழிப்பதை நியாயப்படுத்துவதற்காகவே இவ்வாறு கூறியுள்ளார்; ஈராக்கிய தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மீது சதாம்உசேன் தாக்குதல் தொடுப்பாராயின், ஈராக்கிய தேசிய முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியான சதாம் உசேனுடன் கணக்கு தீர்க்க வேண்டியது ஈராக்கிய தொழிலாளர்க்கும் தவிர ஏகாதிபத்தியம் அல்ல.

வளைகுடா யுத்தமானது எதிர்கால யுத்தங்களுக்கான ஒத்திகையே. இந்த யுத்தத்தில் ஈராக்கின் இராணுவ தோல்வி மத்திய கிழக்கிலும் சர்வதேச ரீதியாகவும் பெருமளவிலான அரசியல் கொந்தளிப்புகளுக்கே வழி வகுத்துள்ளது. ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு எதிராக அரபிய தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பு நீடிக்கும். மத்தியகிழக்கில் அமெரிக்காவின் சதித்திட்டங்கள் சுக்குநூறாகும்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் பொருளாதார ரீதியாக அமெரிக்கா வகித்த ஆதிக்க நிலையை அது தற்போது இழந்துள்ளது. இந்த இழப்பை பிரதியீடு செய்வதற்காகவும், உலக சந்தையில் அதன் முக்கிய சக்தி வாய்ந்த பகையாளிகளான ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் எதிராக அதன் இராணுவ பலத்தை பயன்படுத்தவும் தயாராகி உள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் வேண்டுமென்றே வளைகுடா யுத்தத்தை தூண்டிவிட்டு அதை சந்தர்ப்பமாக பயன்படுத்தி அதன் இராணுவ சக்தியின் வலிமையை கூட்டியுள்ளது. அத்துடன் வியட்நாம் யுத்தத்திற்கு பின்னர் தயாரிக்கப்பட்ட புதிய ஆயுதங்களையும், தொழில் நுட்பங்களையும் பரீட்சித்தும் பார்த்துள்ளது.

வளைகுடா நெருக்கடியானது, பல பத்தாண்டுகளாக பிரிட்டனின் காலனியாக இருந்த ஒரு ஒடுக்கப்படும் நாடான ஈராக்கிற்கு எதிராக அனைத்து ஒடுக்கப்படும் நாடுகளின் ஐக்கியத்தை உருவாக்கியது, இது பெரும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான மோதல்களை பூசி மெழுகுவதாக இருந்தது ஆனாலும் இந்த பிளவுகள மறுபடி தோற்றுவிக்கப்பட்டுள்ளன. குவைத்தை மறுபடி கட்டி எழுப்ப அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா நிறுவனங்கள் கான்ராக்டிற்கான பங்குகள் சம்பந்தமாக கடுமையான போட்டியில் இறங்கி உள்ளன. யுத்தத்திற்கு இராணுவத்தை அனுப்பவில்லை என்று ஜப்பான், ஜெர்மனி மீது குறை கூறப்பட்டு குவைத்தில் அவற்றிற்கு கட்டுமான பணியில் எந்த பங்கும் இல்லாமல் செய்யப்பட்டது. அமெரிக்க நிறுவனங்களுக்கு 70%மும், பிரிட்டனுக்கு 22%மும் இதர சிறிய கூட்டாளிகளுக்கு 7%மும் குவைத் கட்டுமான பணியில் ஒதுக்கப்பட்டுள்ளது ஜப்பானிய நிறுவனங்கள் பெருமளவில் ஒப்பந்த பணிகளில் ஈடுபட்டிருந்த பொழுதிலும் யுத்தத்திற்கு பின்னர் அவற்றுக்கு அங்கு எதுவுமே இல்லாமல் செய்யப்பட்டது.

தொடர்ந்து நடைபெறும் வர்த்தக யுத்தத்தில் ஒரு ஆயுதமாக அதன் இராணுவ சக்தியை உபயோகப்படுத்தவும் அமெரிக்க ஆளும் வர்க்கம் எண்ணியுள்ளது. கடந்த மாதம் நியூயார்க் நகரில் நடைபெற்ற பொருளாதார கிளப் கூட்டத்தில் உரையாற்றிய புஷ், "அமெரிக்காவின் இராணுவ வெற்றியானது' வர்த்தகத்திலும், வரியிலும் பொது உடன்பாட்டுக்கான அமைப்பில் (GATT) அமெரிக்காவிற்கு பெரும் மதிப்பை கொடுக்கும்" என்றார்.

ஈராக்கிய மக்களுக்கு எதிராக மனிதப்படு கொலை யுத்தத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்தியது, அதன் சொந்த பலத்திலிருந்து அல்ல. மாறாக சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் தலைமையில ஆதிக்கம் செலுத்தும் ஸ்டாலினிச, சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களின் காரணமாகவே ஆகும். வளைகுடா நெருக்கடியானது, தொழிலாள வர்க்கத்தின் தலைமை நெருக்கடியினால் உண்டு பண்ணப்படும் பெரும் அபாயங்களை கோடிட்டு காட்டுவதாக உள்ளது அமெரிக்காவில் ஏ,எப் எல்.சி.ஐ.ஓ தொழிற்சங்க அதிகாரத்துவம் இந்த யுத்தத்திற்கு நேரடி பொறுப்பாளியாகும். கடந்த பத்தாண்டில் தொழிலாளர் இயக்கத்தில் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் வரிசைக்கிரமமான காட்டிக் கொடுப்புகள் தான் இந்த யுத்தத்தை சாத்தியமாக்கியது.


வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்குதலுக்கு எதிராக, ஈராக்கிய அராபிய வர்க்க சகோதரர்களை பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்க தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்டு செயல்படும் அமெரிக்க டிராட்ஸ்கிச இயக்கமான வொர்க்கர்ஸ் லீக் போராடியது. தொழிலாள வர்க்கத்தின் முதுகில் சவாரி செய்து யுத்தத்தை தோற்றுவித்த அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் சதியை அம்பலப்படுத்த, வொர்க்கர்ஸ் லீக் யுத்தம சம்பந்தமாக பொது ஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று பிரச்சாரத்தை மேற்கொண்டது.

ஏகாதிபத்திய யுத்தத்திற்கும், வறுமைக்கும் வேலையின்மைக்கும் முடிவு கட்ட வேண்டுமாயின் முதலாளித்துவ லாப உற்பத்தி அமைப்பை ஒழித்து கட்ட வேண்டும். இதனை செய்வதற்கு தொழிலாள வர்க்கம்மத்தியில் புதிய புரட்சிகர தலைமையை கட்ட வேண்டும். இதற்கு உலக சோசலிசப் புரட்சி முன்னேக்கில் போராடும் சர்வதேச கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவை கட்டி எழுப்ப வேண்டும்,

## ஸ்டாலினிச குண்டர்களதும் முதலாளித்துவ போலீசினதும் கூட்டுத்தாக்குதலை தோற்கடி!

# தோழர் ராம் மீதான பொய் வழக்கை வாபஸ் வாங்கப் போராடு!

பி அண்டு சி ஆலைமூடல் அபாயத்துக்கு எதிராக சோசலிச வேலைத்திட்டத்தை முன்வைத்து தொடர்ந்து போராடிவரும் டிராட்ஸ்கிசத் தொழிலாளர் அணியின் சார்பில் 1989 சென்னைத் தொழிலாளர் சங்கத் தேர்தலில் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட தோழர் ராம மீது சி,பி.எம். ஸ்டாலினிச குண்டர்கள் நடத்திய கொலை வெறித்தாக்குதலின் பின்னர் போலீசார் தோழர் ராமை கைது செய்து செக்ஷன் 75ன் கீழ் வழக்குத் தொடர்ந்தனர் இந்த வழக்கை உடனடியாக வாபஸ் வாங்கும்படி சென்னைத் தொழிலாளர் சங்கமும் இதர தொழிற்சங்க அமைப்புகளும் முன் வரவேண்டுமென்று டிராட்ஸ்கிச தொழிலாளர் அணியும் சோசலிசத் தொழிலாளர் கழகமும் அறை கூவுகின்றது.



தோழர் எஸ். ராம் உரையாற்றுகிறார்

தோழர் ராம் மீது கொலை வெறித் தாக்குதலை நடத்திய ஸ்டாலினிச குண்டர்களை கைது செய்யாமல், தாக்கப்பட்டவரை கைது செய்து அவர் மேல் 'பொது இடத்தில குழப்பம் விளைவித்தார். என்று கூறி போலீசார் வழக்குத் தொடர்ந்திருப்பது ஸ்டாலினிஸ்டுகளுக்கும், அரசுக்கும் இடையிலான நெருக்கமான உறவை பிரதிபலிப்பதாக உள்ளது மேற்கு வங்காளத்திலும கேரளாவிலும் பல் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஆலைமூடல்கள், ஆட்குறைப்புகள் ஆகியவற்றினால் பாதிப்புக்குள்ளாக்கப்படுவதற்கு சி.பி.எம்,சி.பி.ஐ. அரசியல தலைமைகளும் அவற்றின் தொழிற்சங்க அமைப்புக்களான சி.ஐ.டி.யு.வும்.ஏ.ஐ.டி.யு.சி.யும் துணையாக இருந்தன. அது போலவே சென்னையில பின்னி இன்சினியரிங். எம்.எப்.எல்.,மெட்டல்பாக்ஸ் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் போன்ற பல ஆலைகளில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பதற்கும். ஆலைமூடல்களுக்கும் வழி வகுத்து கொடுத்தனர்.

இவ்வாறாக சி.பி.ஐ.,சி.பி.ஐ. (எம்) கட்சித் தலைமைகளும் அவற்றின் தொழிற்சங்க அமைப்புகளும் செயல்படுவதற்கு காரணம் அவர்களின் வேலைத்திட்டம் தீவாலாகி படிந்து கொண்டிருக்கும் லாப உற்பத்தி முதலாளித்துவ அமைப்பை தூக்கிவீசி தேவையை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடப்பட்ட சோசலிசப் பொருளாதாரத்தை உருவாக்குவது அல்ல. அதனால் முதலாளித்துவ அமைப்புக்கு ஏற்பட்டுள்ள வரலாற்று நெருக்கடியின் போது வர்க்கப் போராட்டத்தை முதன்மைப்படுத்துவதற்கு பதிலாக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பலியாக்க முதலாளித்துவ அணியினருடன் கைகோர்த்து தேசிய ஐக்கியம், மத சார்பின்மை போன்ற கோஷங்களை எழுப்பி வர்க்கப் போராட்டத்தை திசை திருப்புகின்றனர்.

மேலும் இன்றைய ஆழமான இந்திய முதலாளித்துவ, பொருளாதார நெருக்கடி நிலைமையில் செத்து மடியும் அமைப்புக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியில் தேசிய முன்னணியுடன் கூட்டரசாங்கம் அமைக்க தயாராக இருப்பதாக சி.பி.ஐ. தலைமை அறிவித்துள்ளது. அதே வேளை சி.பி.எம தலைமை, தேசிய முன்னணி ஸ்திரமான ஆட்சி அமைக்க இணைந்து செயல்படப் போவதாக அறிவித்துள்ளது. இந்த ஸ்டாலினிசத் தலைமைகளின் எதிர் புரட்சிகரமான வேலைத்திட்டத்துக்கு எதிராக மாற்று சோசலிச வேலைத்திட்டத்திற்காக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடி வருகிறது.

இதன் காரணமாகவே முதலாளித்துவ ஏஜண்டுகளான ஸ்டாலினிச அதிகாரத்துவம் குண்டர்களின் பலாத்காரம் மூலம உண்மையான மார்க்சிஸ்டுகளை —டிராட்ஸ்கிஸ்டுகளை மௌனமாக்க முயற்சிக்கின்றனர்.

அக்டோபர் புரட்சியின் பாரம்பரியத்தில் வேரூன்றியுள்ள டிராட்ஸ்கிச இயக்கத்தை கொலை மிரட்டல்களின் மூலம், குண்டர் தாக்குதல்களின் மூலம் மௌனமாக்க முடியாது. ஸ்டாலினிஸ்டுகளின் எதிர்ப்புரட்சிகர அரசியலையும், தொழிற்சங்க காட்டிக்கெடுப்பு வேலைகளையும் அம்பலப்படுத்து தொழிலாளர்கள், இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர நனவுள்ள மார்க்சியத்திற்கான போராட்டத்தை சோசலிசத் தொழிலாளர் கழகமும். டிராட்ஸ்கிச தொழிலாளர் அணியும் பன்மடங்கு தீவிரப் படுத்தும்.

ஆசிரியர், வெளியிடுபவர் : எல். சக்தி அச்சிட்டோர் ; பரணி அச்சகம், 77, வெங்கட்டாத்திரி தெரு, குயப்பேட்டை, சென்னை-600 012.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியா :

# சந்திரசேகர் அரசாங்கத்தின் நெருக்கடி மோசமடைகிறது!

இந்திய சந்திரசேகர் அரசாங்கம் வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறையை தீர்க்க 3000 கோடி ரூபாய்களை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனாகப் பெறுவதாக ஜனவரி 5ம் திகதி அறிவித்தது. 'மசகு எண்ணெய் விலை உயர்வு' அத்தியாவசிய இறக்குமதிகளை சமாளிக்கவே இக்கடன் பெறப்பட்டது.

இக்கடன்கள் இந்தியா முன்னொரு போதும் எதிர்கொள்ளாத கடும் நிபந்தனைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கம் துண்டுவிழாத வரவு செலவுத்திட்டத்தினை தயாரிக்க வேண்டும். இது முக்கிய நிபந்தனைகளில் ஒன்று. 'சொந்த நலனின்' பேரில் இந்நிபந்தனையை அமுல் செய்வதாக சந்திரசேகர் அரசாங்கம் அறிவித்துள்ளது கடந்த ஆண்டு டிசம்பரில் வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு 2752 கோடி ரூபாவாக வீழ்ச்சி கண்டது. இப்பணம் இரண்டு கிழமைகளுக்கான இறக்குமதிச் செலவைச் சமாளிக்கவும் பற்றாக்குறையானது. 45 வருட கால ஆட்சியின் பின்னர் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் நாட்டின் பொருளாதாரத்தினை எத்தகைய வங்குரோத்து நிலைக்குள் தள்ளியுள்ளது என்பதற்கு இது நல்லதோர் காட்சி.

மோசமடைந்துவரும் நெருக்கடியின் மத்தியில் இந்திய முதலாளித்துவ அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும் கட்டளைகளை அமுல் செய்வதன் மூலம் ஏகாதிபத்திய நிதி மூலதனம் இந்தியாவினுள் பெருக்கெடுப்பதற்கான நிலைமைகளைச் சிருஷ்டித்து வருகின்றது. வி. பி. சிங் அரசாங்கம் ஏகாதிபத்திய முதலீடுகளுக்கு பெரும் வாய்ப்புக்களை வழங்கும் விதத்தில் தயாரிசெய்த 'புதிய கைத்தொழில் கொள்கை', ராஜீவ் காந்தி காங்கிரசின் முண்டுகோலில் நின்று வரும் சந்திரசேகர் அரசாங்கத்தின் கொள்கையாகியுள்ளது. அரசுடமையாக்கப்பட்டிருந்த இந்திய தொலைத்தொடர்புச் சேவை இன்று தனியார்மயமாக்கப்பட்டுள்ளதோடு ஏனைய அரசாங்கத் துறைகளும் உடைக்கப்பட வேண்டும் என்பதே ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளையாகவுள்ளது.

## இரத்தக் களரி

நெருக்கடி உக்கிரமடைந்து, ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைகளை அமுல் செய்ய நேரிட்டதைத் தொடர்ந்து சந்திரசேகர் அரசாங்கமும், மற்றும் முதலாளித்துவக் குழுக்களும் இந்தியா பூராவும் இன, மத மோதுதல்களையும், இரத்தக் களரிகளையும் சிருஷ்டிப்பதில் ஈடுபட்டுள்ளன. இதன் பொருட்டு மீண்டும் 'அயோத்தி பிரச்சினை' முன்னணிக்கு வந்துள்ளது படுபிற்போக்கு மத இயக்கமான விஸ்வ ஹிந்து பரிஷத், பாரதீய ஜனதா கட்சியின் ஆதரவுடன் வட இந்திய நகரான அயோத்தியில் 400 வருடத்துக்கு முன்னர் இருந்ததாகச் சொல்லப்படும் இராம ஜென்ம பூமியின் உரித்து பற்றி ஆராயும் 'நிபுணர் குழு' ஒன்றை நிறுவியுள்ளது. கடந்த ஆண்டில் இந்த அயோத்தி பிரச்சினை மீது பிற்போக்குப் பிரச்சாரம் வெடித்த வேளையில் 'வரலாற்று சான்றுகள் ஆயும் கமிட்டியை' அமைக்கும் யோசனையை ராஜீவ் காந்தி முன்வைத்தார். இன்று மற்றும் பிற்போக்குக் கட்சிகளும் இந்த யோசனையைச் சூடுபிடிக்கும் விதத்தில் தாக்கிப்பிடித்து வருகின்றன.

சந்திரசேகர் தமிழ் நாட்டிற்கு மேற்கொண்ட விஜயத்தைத் தொடர்ந்து காங்கிரஸ் அ. இ. அ. தி. மு. க கட்சியினர் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் ஈழம் விடுதலைப் போராளிகளுக்கும் வட—கீழ் மாகாண தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கும் எதிரான பிரச்சாரத்தினை முடுக்கி விட்டுள்ளனர். இவ்விரு கட்சிகளும் தமிழ்நாடு அரசாங்கத்தை கலைக்கும்படி சந்திரசேகர் அரசாங்கத்தை நெருக்கி வருகின்றன. ஐக்கிய அசாம் விடுதலை முன்னணி, நக்சல்பாரி இயக்கம், மற்றும் இந்திய அமைப்புக்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவும், அவற்றுக்கு விடுதலைப் புலிகள் உதவி வருவதாகவும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு தளமாக இருப்பதாகவும் இப்பிற்போக்காளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். யூ. என். பி. அரசாங்கத்தினை நெருக்கடிக்குள் தள்ளி வரும் தமிழ் விடுதலைப் போராட்டம் இந்தியாவினுள் ஏற்படுத்தும் தாக்கங்களையிட்டு இப்பிற்போக்கு அரசியல் கும்பல்கள் அச்சமடைந்துள்ளன. ஆதலால் அப்போராட்டத்தினை நாசமாக்க வேண்டும் என்பதே இவர்களின் பிரச்சாரத்தின் அடிநாதமாக உள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினதும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைவர்களின் துரோகத்தின் மத்தியில் தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் தமது உரிமைகளுக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஒரு மாதமாக தொலைத் தொடர்பு தொழிலாளர்கள் திணைக்களம் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து உள்ளமர்வு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு தமிழ்நாடு தபால் ஊழியர்கள் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற ஊழியர்கள் 'கொந்தராத்து' முறையில் திரும்பவும் வேலைக்கு அமர்ந்தும் ஆட்சியாளர்களின் நடவடிக்கையை எதிர்த்துப் போராடி வருகின்றனர்.



வி. பி. சிங். வீழ்ச்சி கண்ட கூட்டரசாங்க பிரதமர்.

முதலாளித்துவக் கட்சிகளின் பின்னால் இழுபட்டு வீழ்ந்து வந்த இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள் காங்கிரஸ் கட்சியின் 'மதச்சார்பின்மையில்' நம்பிக்கை வைக்க முடியாத விதத்தில் அவர்கள் செயல்படுவதையிட்டு குற்றம்சாட்டியுள்ளனர். சமீபத்தில் சி. பி. எம். வெளியிட்ட அறிக்கையில், காங்கிரஸ் கட்சி வி. பி. சிங் அரசாங்கத்துக்கு எதிராக பாரதீய ஜனதா கட்சியுடன் சேர்ந்து வாக்களிக்காமல் இருந்து விட்டு, பின்னர் வேறாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொணர வேண்டியிருந்தது என முறைப்பட்டிருந்தது.

ஒரு சில தினங்களுக்கு முன்னர் நேபாள ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் கலந்து கொள்ளவென சி. பி. எம். தலைவரான ஹர் கிருஷ்ணன் நேபாளம் சென்றார். அவர் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற பிரிவினர் மீண்டும் ஒன்றுபட்டு நேபாள ஆளும் காங்கிரஸ் கட்சியுடன் முன்னணி அமைப்பது அவசியமென குறிப்பிட்டார். பங்களாதேஷில் எர்ஷாத்தின் இராணுவ அரசாங்கம் வீழ்ச்சி கண்டதன் பின்னர் உருவாகியுள்ள ஆளும் வர்க்கத்தின் நெருக்கடியையிட்டும் சி. பி. எம். தலைவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பங்களாதேசைப் பிறப்பிடமாகக் கொண்ட சி. பி. எம். தலைவர்களில் ஒருவரான இந்திரஜித் சக்கரவர்த்தி சமீபத்தில் பங்களாதேஷ் சென்று திரும்பினார் அவரின் இந்த உத்தியோகபூர்வ விஜயம் பற்றி எதுவுமே வெளியிடப்படவில்லை.

இந்தியாவின் இந்த அரசியல் நெருக்கடியும் ஸ்டாலினிஸ்டுகளின் துரோகமும் தொழிலாள வர்க்க புரட்சித் தலைமையினைக் கட்டி எழுப்புவதன் அவசியத்தினை சுட்டிக்காட்டுகின்றது. கோடானுகோடி கிராமிய ஏழைகளும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் தொழிலாள வர்க்கத்துடன் புரட்சிகரப் பிணைப்பை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் முதலாளித்துவத்தினை தூக்கி வீசி, ஏகாதிபத்திய பிடியை உடைத்து எறியும் ட்ரொட்ஸ்கிச புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்ப வேண்டும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் உறவு கொண்ட இந்திய சோசலிச லேபர் லீக்கையும் இலங்கை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் துணைக்கண்டத்தின் புரட்சித் தலைமையாக கட்டியெழுப்புவது இன்று அவசியமாகியுள்ளது.

# உரிமைகள் நாசமாக்கப்படுவதை எதிர்த்து தோட்டத்தொழிலாளரிடையே எதிர்ப்பு உக்கிரம்!

— சீ. நிஷான் —

முதலாளிகளும், இவ்வாதிகளும் யூ. என். பி அரசாங்க அமைச்சர்களும் தோட்டத் தொழிலாளர் ஏனைய தொழிலாளர்களைவிடக் கூடிய வருமானம் பெறுவதாக பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையிலுள்ள எஸ். தொண்டமான், எம். எஸ். செல்லசாமி என்போர் அரசாங்க அமைச்சர் பதவிகளில் கிடைத்த சலுகைகளுக்கும் இ. தொ. காவின் ஏனைய அதிகாரிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் வரப்பிரசாதம் சங்கத்திடமிருந்து பெறும் உயர்ந்த சம்பளம் என்பவற்றுக்கும் தோட்டத் தொழிலாளரை 18 ஆண்டுகள் தேய்பிறை வைத்ததுடன் எதிர் காலத்தில் மேலும் பல நன்மைகள் தோட்டத்தொழிலாளருக்கு கிடைக்குமென்றும் பிரசார பேரிகையை சடுகிழித்துள்ளனர். மக்கள் ஐக்கிய சமாஜ கம்யூனிஸ்ட் கட்சியினதும் ஏனைய தோட்டப்புற தொழிற்சங்கங்களிலும் முன்னணியிலுள்ள துரோக தலைமைகளும் ஏனைய தொழிற்சங்கங்களும் தோட்டத்தொழிலாளரது வாழ்க்கை தாம் பாதி போய் நப்பாசைகளை எழுப்பி இத்தலைமைகளுக்கு கூடப்புலே அரசாங்கத்துடன் இணைந்துசெயற்பட்டு பேரம்பேசும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன

இத்தலைமைகள் பலரும் தோட்ட தொழிலாளர் மத்தியில் வெடித்தெழும் போர்க்குணமிக்க விட்டு போராட்டத்தில் சேருவதைத் தடுப்பதற்காகவே ஒரு மூகமாக பங்குபற்றி செயற்படுகின்றன.

பரம்பரை பரம்பரையாக தோட்ட புறத்திலேயே வாழ்ந்து வேலைசெய்யும் இத்தொழிலாளருக்கு சேந்தர மாதச் சம்பளம் கிடையாது. மாதமொன்றுக்கு 26 நாட்கள் வேலை வழங்கப்படவேண்டுமென்று தீர்ப்பு இருப்பினும், 20 நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்படுகின்றது. தோட்ட தொழிலாளரது மாதசம்பளம் ரூ. 800 – 1000க்கும் இடைப்பட்டதேயாகும். நாட் சம்பளமாக 46 ரூபாய் தான் செலவாகிறது. கொடூரமாக ... பட்டதொழிலாளர் ... சம்பளத்தை பெறுகின்றனர். மேலும் பலரும் ஒரு குடும்பத்தில் ஒரு தொழிலாளிக்கே வேலை கிடைக்கிறது.

பதுளை பகுதியில் ஒரு தோட்டத்தில் வேலை செய்யும் செல்லராசா என்ற தொழிலாளிக்கு இருபிள்ளைகள். அவர் தோட்ட தொழிலாளரது சம்பளம் செலவுகள்பற்றி "தொழிலாளர் பாதைக்கு" பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இந்த சம்பளத்தில்நாம் ஜீவிக்க நாளுக்கு ரூ 100/- வரை செலவாகிறது. நான் மிகவும் சிரமப்படும் ஒரு தொழிலாளி நன்றாக சாப்பிடாவிட்டால் வேலைசெய்ய சக்தியில்லை. எனக்கு கிடைப்பது ரூ. 40/84 சதம் மட்டுமே. பெருநாளுக்கு நாம், கடையில் கடனுக்கு சாமான் வாங்கி காசு — சம்பளம் கிடைத்ததும் அதை தீர்ப்பது வழக்கம். எப்போதும் நான் கூலி வேலை செய்கிறேன், ஞாயிறு ஏனைய லீவு தினங்களில் பின்னேரம் கிராமப்புறம் சென்று கூலிவேலை செய்வேன்.

இப்படியும் சமாளிக்க முடியாமல் போகும் இன்னும் 6 மாதகாலம் கழிந்தபின் அப்படி நிலைமையில் சாமான்களை அடைவு வைக்கவேண்டி வரும். ஒரே ஒரு துணைவருமானமாக உள்ளது இரண்டு ஆடுகளை வளர்ப்பதுதான்."

"தொழிலாளர் பாதை" நிருபருக்கு பேட்டியளித்த ஏனைய தொழிலாளிகளும் தமது

(14ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# உரிமைகள் நாசமாக்கப்படுவதை எதிர்த்து தோட்டத்தொழிலாளரிடையே எதிர்ப்பு உக்கிரம்!

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வராசாவின் நிலைக்கு சற்றும் குறைந்ததல்ல. அப்பகுதியில் பொருட்களின் விலைகளை பகுதிகளிலும் பார்க்க விலை கூடியதாகும். தோட்டத்தொழிலாளர் இறைச்சி, மீன், தேங்காய் போன்ற பொருட்களை வருடத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைதான் கண்ணால காண முடிந்துள்ளது. அதாவது அவர்களது பண்டிகை நாட்களில் மட்டுமே. பிள்ளைகளும் மரக்கறியுடன் சோறு உண்பதற்கே பழக்கப்பட்டுள்ளனர். இறைச்சி மீன் உண்ணாத நிலைதான் எங்களுடைய தொழிலாளர் எமக்கு பின்வருமாறு கூறுகிறார்.

''எமது சம்பளத்தில் மீன் இறைச்சி உண்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாது. இது எமது பிள்ளைகளுக்கும் ஓர் வழிகாட்டலாயுமாகும். அவர்கள் மீன் இறைச்சி கேட்பதில்லை. மாமிசம் உண்ணப் பழகினால் எமக்கு அது பெரும் கஷ்டத்தை கொண்டுவரும்.''

இலங்கையில் போஷாக்கின்மை கூடிய இடங்களான நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி உள்ளன. இதன் புள்ளிவிபரங்களும் குறுகின்றன. இவை தோட்டப்புறங்களையும் — இப்பகுதியில் ஆகக்கூடிய போஷாக்கின்மை நூற்றுக்கு 40% ஆகும். போஷாக்கின்மையை நேரடியாக தோட்டப்புற குழந்தைகளே எதிர்கொள்கின்றனர். இக்குழந்தைகளுக்கு உணவாக மூன்றுநேர உணவும் சத்தற்ற உணவாகவே கிடைக்கிறது. அதுவும் பெரும்பாலும் மரக்கறி, சோறு உணவுதான். கடந்த காலத்தில் வெளிநாடுகளின் உதவியாக கிடைத்த சுகாதார உதவிகளும் நிவாரணமும் போஷாக்கு மாவும் தற்போது வழங்கப்படுவதில்லை. இப்பிள்ளைகள் பல வித நோய்களுக்காளாகியுள்ளனர். குட்டையாதல், பார்வைக்குறைவு, தோல்நோய் கண்வியாதிகள் போன்ற பிரச்சினைகள் காணப்படும் நோய்களாகும். அதேபோல் சுகாதார வசதியும் தோட்டப்பகுதிகளில் மிக குறைந்துள்ளது. அநேக குழந்தைகள் முதலாவது பிறந்தநிலையிலேயே தாண்டாமலே இறந்து போகின்றனர்.

வெளியூர்களில் தோட்டத்தில் வேலை செய்யும் குடும்பத்தின் பிள்ளைகளைப் பார்க்க பிள்ளைகளை பராமரிக்கும் ஒழுங்கின்றி தோட்டத்தில் இருந்து வருகின்றனர். பெண்களின் உழைப்பை அதிகமாக பெறுவதில் கவனம் கொள்ளும் இத்தகைய நிலைமைகள் அதிகாரிகள் திருத்திக் கொடுத்தவர். இப்பிள்ளைகள் காவலர்களாக வளர்க்கப்படுகின்றனர். அங்கு முன்பு இருந்த வசதி கூடவும், வேலை, நாளைய நிலைமையும் இப்போது கிடையாது.

இல காலக்களாக பின்னைப் பராமரிப்பு நிலையங்களோ அல்லது அனுபவமோ இல்லாத தாதியர்கள் இப்பிள்ளை மடுவங்களுக்கு பொறுப்பாக இருந்து வந்தனர். இன்று அதுவும் இல்லை. தோட்ட 'டிஸ்பென்சரி' யூ.என்.பி — உலக வங்கி தயாரிப்பின் நேரடி தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. அங்கு எந்த மருந்தும் கிடைப்பது இல்லை. இதனால் தொழிலாளர் வேறு இடங்களுக்கு மருந்துக்குச் செல்ல நேரிட்டுள்ளது. அவசர சிகிச்சைகளுக்காக தூர இடங்களுக்குச் செல்ல 'அம்புலன்ஸ்' வசதிகள் கிடையாது.

யூ.என்.பி. உலகவங்கி தயாரிப்பின் கீழ் தாக்குதலுக்கு கீழ்ப்பட்டுள்ள ஓர் பகுதியாக தோட்டடிஸ்பென்சரி உள்ளது. இந்த டிஸ்பென்சரி கையில் எந்தவொரு மருந்துமே அற்ற நிலை காணப்படுகின்றது. டிஸ்பென்சரியில் மருந்தில்லாது வேறு இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. அங்கு கிடைக்கும் சிறியளவு மருந்துகள் கூட பலவேறு கபட செயல்களால் கைக்கு கிட்டாததாக உள்ளன. அவசர சிகிச்சைக்கு கூட மிகத் தூர இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் பல்வேறு காரணங்களை சாட்டாக காட்டி டிஸ்பென்சரியை மூடிவிட நிர்வாகங்கள் தாமாகவே நடவடிக்கை எடுத்து வருகின்றனர். எடுத்துக்காட்டாக கடந்த நவம்பர் மாதம் அட்டம்பட்டிகலையிலுள்ள தோட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்டி தோட்ட நிர்வாகிகள் தோட்ட டிஸ்பென்சரியை மூடிவிட்டனர். தற்போது அத்தோட்டத்தில் தொழிலாளருக்கு 6 மைல் தூரம் நடந்து சென்று அட்டம்பட்டி தோட்டத்திற்குச் செல்லவேண்டியுள்ளது. தம் தோட்ட தொழிலாளர் ''தொழிலாளர் பாதை'' நிருபருக்கு தெரிவித்தனர். மலைப்பகுதியில் வைத்து தோட்டத்தில் டிஸ்பென்சரி கிடையாது. அவர்களுக்கு மருந்து வாங்க இருமைல் கடந்து ஹல்துமுல்ல தோட்டத்திற்கு செல்லவேண்டியுள்ளது. அவசர சிகிச்சைக்காக தொழிலாளர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வாகன வசதியும் கிடையாது.

இலங்கையில் லீவு நாட்கள் உரிமைபெறுவதில் தொழிலாளர் பகுதியினர் தோட்டத் தொழிலாள வர்க்கமே. அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 8 நாட்களே பட்டியல் லீவு வழங்கப்பட்டுள்ளது. ''கங்காணி — தமிழ் வருடப்பிறப்பு, மேதின லீவு நாட்கள் என்றும் இரண்டும் அவையாகும். அவசர நோய்க்காக லீவு எடுப்பின் அந்நாட்களில் சம்பளம் வழங்கப்பட மாட்டாது. இலங்கை முதலாளித்துவ வர்க்கத்தின் துஷ்பிரயோகத்தை வெளிக்காட்ட இந்த எடுத்துக்காட்டே போதுமானதாகும். தோட்டத் தொழிலாளருக்கு அங்கொன்றுக்கு வழங்கப்படும் ''வருகை போனஸ்'' என்றபுளுகு உண்டு. அதாவது மாதத்தில் 26 நாட்கள் வேலை செய்திருப்பின் அதற்காக ஒரு நாட்சம்பளத்துடன் கூடிய லீவு நாள் கிடைக்கும்.

தற்போதைய யூ.என்.பி. அரசாங்கமானது உலகவங்கி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் போது தோட்டத் தொழிலாளர் எண்ணிக்கையை 50%த்திற்கு குறைப்பதை இலக்காக கொண்டுள்ளது. முன்னைநாள் தோட்டத்துறை அமைச்சர் காமினி திசாநாயக ஒருமுறை தோட்டதொழிலாளரது மேலதிகமான எண்ணிக்கையை 50% தாக வெட்ட வேண்டுமென கூறியுள்ளார். அதே சமயம் 1989ல் தோட்டத்துறை அமைச்சராக பதவி ஏற்ற ரஞ்சன் விஜேரத்ன 150000 தோட்ட தொழிலாளரை பலாத்காரமாக இந்தியாவுக்கனுப்புவதாக எக்காளமிட்டுள்ளார். இவை யாவற்றுக்கும் அடிப்படையாயுள்ளது மிகக் கொடிய முறையில் உழைப்பைச் சுரண்டும் உலகவங்கி தயாரிப்பாக செயற்படுத்த முயலும் யூ.என்.பி. அரசாங்கத்தின் போக்கேயாம். தொழிலாளரை இலட்சக்கணக்கில் தோட்டப்புறத்திலிருந்து விரட்டியடித்து அழிக்கும் தயாரிப்பினை செயற்படுத்துவதற்காக எதிர்வரும் மாதங்களில் யூ.என்.பி. அரசாங்கம் பாய்ச்சலிற்பத்துவது திண்ணம் — இதுவரை 17 வயதை தாண்டிய இளைஞர் யுவதிகள் ஆயிரக்கணக்கில வேலையற்றுள்ளார். இந்தவேலையற்ற இளைஞர் யுவதிகளது எண்ணிக்கை யூ.என்.பி. அரசாங்கத்தின் கீழ், விசேடமாக பிரேமதாச அரசாங்கத்தின் கீழ் மிக உச்ச கட்டத்தில் உயர்ந்துள்ளது. பதுளை எலதலுதோட்டத்தில் 500 தொழிலாளர் வேலை செய்வதுடன் வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொகை 150க்கு மேற்பட்டுள்ளது. தலகம தோட்டபகுதியில் தோட்ட தொழிலாளி ஒருவர் எமக்கு தமது குடும்பத்தில் 17 வயதை தாண்டிய வேலையற்ற இளைஞர் 5 பேர் உள்ளார்கள் என கூறினார். இத்தகைய நிலைமைகளால் தோட்டபகுதியில் வேலை வாய்ப்புக்கான கோரிக்கை பிரதான கோரிக்கையாக விளங்குகின்றது.

தோட்டபகுதியில் படிப்பறிவற்றோர் தொகை நூற்றுக்கு 64% ஆகும். தோட்ட தொழிலாளரது பிள்ளைகள் 5ம் வகுப்பை தாண்டமுன் பள்ளியிலிருந்து விலகி கொள்வர். இதிலிருந்துத் தவிர்த்து கொள்ளும் மாணவர் சிறு அளவினரேயாம். அவர்களும் 8ம் வகுப்புடன் தமது படிப்பை முடித்துவிடுவர். க.பொ.த. சாதாரண பரீட்சை வரை படிப்பை தொடர்பவர்கள் புவமை பரிசில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு தொகையினரே.

தோட்டத் தொழிலாளர் மேலும் எதிர்கொள்ளும் பாரதூரமான பிரச்சினையாக விளங்குவது அவர்களது வீட்டு பிரச்சினை உள்ளது. அரசாங்கமும், இ.தொ.கா. தலைமைகளும் இதுபற்றி பெரும் பொய் பிரசாரம் நடத்துவதுடன் இன்றுவரை தோட்டத்தொழிலாளரில் 98% வரையிலானவர்கள் பிரித்தானிய காலனித்துவ சுரண்டலின் போது கட்டிக்கொடுத்த லயன் அறைகளிலேயே சீவிக்கின்றனர் கழிவறை வசதிகள் யாவும் அழிந்துள்ளன. கழிவறை நீர் வசதி அத்தியாவசிய தேவைகளுமில்லை. தோட்டப்புற லயன் அறைகளில் 7 கழிவு கூடங்களைதானும் காண்பது அரிது. கழிவறை வசதியின்றி ஆயிரக்கணக்கான தோட்ட தொழிலாளர் பெரும் கஷ்டங்களுக்கும் கேலிக்கும் பாத்திரமாயுள்ளனர். இதனால் இவர்கள் மத்தியில் வாந்திபேதி வயிற்றோட்டநோய் விரைந்து பரவுகிறது. அலைமலையில் நோராரத் என்ற சர்வதேச அமைப்பின் உதவியுடன் தொண்டமான் தலைமை தோட்ட புறத்தில் நடத்திய வீட்டு வசதிகள் தொழிலாளர் கண்களில் மண் தூவுபவையேயாம். ஒரு சில மைலகளுக்கப்பால் ஓரிரு வீடு கலை கட்டி தமது வருப்பத்துக்குள்ளானோருக்கு வழங்கி தொண்டமான் தலைமை நடத்தும் புளுகினால் தோட்ட தொழிலாளரது வீட்டு பிரச்சினை தீரப்போவதில்லை. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர் கட்டிவைத்த தோட்ட தொழிலாளரது வீடுகள் (10X10) பத்தடிக்கு பத்தடி நீளஅகலமான சிறு இடமே யாகும்.

தோட்ட தொழிலாளரின் தொழில், சம்பளம் வாழ்க்கை தரம் என்பன பெரிதும் தாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் யூ.என்.பி. உலகவங்கி தயாரிப்பின் கீழ் நடத்தப்படவுள்ளவை எத்தனை பயங்கரமானவை என்பதை காட்டி நிற்கின்றது.

ஏகாதிபத்திய இரத்த வெட்கையாளர் பிரதேச முதலாளிகளும் இலாபமீட்டும் தோட்டங்களை நடத்தி ஏனையவற்றை மூடிவிட்டு தோட்ட தொழிலாளரை உயிருடன் அழிக்கும் கேடுகெட்ட சுரண்டலுக்கு இடமளித்துவிட்டு நோக்குடன் உள்ளனர். தொழிலாளரது எதிர்ப்பினால் காலதாமதப்படுத்திய சில தாக்குதல்களையும் முன்னெடுத்து செல்வதே அவர்களது இலக்காகும். தோட்டப் பகுதியில் இராணுவ தளத்தை நிலைநிறுத்தல் உள்ளடங்கலான நடவடிக்கை தொழிலாளரை அழித்து அவர்களது எதிர்ப்பை முறியடிக்கும் நோக்குடன் செயல்படுபவையே. கடந்த நாட்களில் உலகவங்கியானது தோட்டப்புறத்தில் நடத்தியியல்புவதாக காரணங்காட்டி தொழிற்சங்கங்களது அரசியல் தலையீடு அதிகரிக்கிறதாக தெரிவித்துள்ளது.

தோட்ட தொழிலாளருக்கு தமது உரிமைகளை பேணும் பொருட்டு நகர்ப்புற தொழிலாளருடன் இணைந்து போராட்டத்தில் அணி திரள வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும்.

முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் கீழ் தோட்டத்துறையில் இந்த அழிவுகர நிலைக்கு எந்தவொரு தீர்வும் கிடையாது. தொழில் வாழ்க்கை தர சம்பளம் ஏனைய உரிமைகள் என்பன வற்றை நிலைநாட்டுவதென்பது தோட்டத்துறையை தொழிலாளர் ஆட்சியின் கீழ் தேசவுடமையாக்கும் சோசலிச வேலைத்திட்டத்தை செய்றபடுத்துவதினாலேயே மட்டுமே சாத்தியமாகும். யூ.என்.பி. அரசாங்கத்தை வீழ்த்தியடித்து தொழிலாளர் — விவசாய அரசாங்கத்தை ஆட்சியேற்றும் இப்போராட்டமும் அதற்காக தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படுவோரின் போராட்டத்திற்கு தலைமைத்துவம் வழங்கவல்ல புரட்சி கட்சியை கட்டி எழுப்புவதும் மிக முக்கிய தேவையாக இன்று விளங்குகிறது.

## இன்ரோஸ் தோட்டத்தொழிலாளி தாக்கப்பட்டதை எதிர்த்து 3,300 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

பதுளை ஹாலிஎலவை சேர்ந்த கிலரோஸ் தோட்டத் தொழிலாளியும் விவசாய தொழிலாளர் காங்கிரஸின் (ஏ.பீ.டவ்.சீ) தோட்டத் தலைவருமான கே. இராமையா தோட்ட டாக்டராலும் பாலகாரனாலும் தாக்கப்பட்டதை எதிர்த்து 3,300 தோட்டத் தொழிலாளர்கள் 29.11.90 திகதி வேலை நிறுத்தத்தில் குதித்தனர். 41 வயதான இராமையா 4 பிள்ளைகளின் தந்தை.

தோட்டத்தில் மரம் வெட்டும்போது 15.11.90 திகதி காலில் காயமுற்ற இராமையா அன்று முதல் தோட்ட மருத்துவமனையிலும் தோட்டத்தில உள்ள தனியார் டாக்டரிடமும் ரூபா 200/- செலவில் மருந்து கட்டி வந்தார்.

20ம் திகதி காலை 9.30 மணியளவில் சுகவீனமுற்றிருந்த இராமையாவின் லயனுக்கு வந்த தோட்ட டாக்டர் மலல்கொடையும், எக்கலுயக்கா எனும் போலீஸ்காரனும் இராமையா டாக்டரின் பணத்தை களவாடியதாக கூறி தாக்கினார்கள். இராமையாவின் வாயிலும், மூக்கிலும் இரத்தம் கக்கும் வரை லயனுள் வைத்து, துவக்கினால் தாக்கப்பட்டார். இச்சம்பவத்தை பல சக தொழிலாளர்கள் நேரில் பார்த்தனர். பின்பு இராமையா வெலிமடை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தனது ரூபா 16800/- திருடப்பட்டதாக டாக்டர் ஆளும் பொலிஸ் நிலையத்தில் குறிப்பிட்ட போதிலும் இராமையா தான் இதைதிருடினாரென திட்டவட்டமாக கூறமுடியாதெனவும் கூறினார் டாக்டரின் இப்பணம் அவர் பதுளை செல்லும்போது தனியார் வண்டியில் காணாமல் போனதாகத் தெரிகிறது. பின்பு இது சம்பந்தமாக கொழும்பு வோர்டில் சென்று வந்த இராமையா சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டார்.

(16-ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# "ஏகாதிபத்திய யுத்தத்தினை தோற்கடிக்க புரட்சிகரமான முறையில் தலையிடுவோம்"

**— பு. க. க. செயலாளர் விஜே டயஸ் —**

நியுட்ரோன் குண்டு உள்ளடங்கலான பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு ஈராக் அராபிய மக்களைக் கொன்று தள்ளும் ஏகாதிபத்திய யுத்தம் ஆரம்பமாவதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் நடைபெறும் இக்கூட்டம் இந்த ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராக உலக தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் இலக்கிலானது.

ஜனவரி 15ம் திகதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் பேசிய அதன் பொதுச் செயலாளர் தோழர் விஜேடயஸ் இவ்வனம் குறிப்பிட்டார் அன்று பகல் 12/30 / 1.00மணி கொழும்பு மாநகர சபைக்கு எதிரில் உள்ள லிப்டன் சதுக்கத்துக்கு அருகில் பு. க. க. வெற்றிகரமான முறையில் மறியல் இயக்கத்தினையும் நடாத்தியது. பொலிசார் சுலோகங்கள் கோசிப்பதை தடை செய்ய எடுத்த முயற்சி கைகூடவில்லை.

மறியல் செல்தோர் ஈராக்கில் கைவைக்காதே! ஏகாதிபத்தியப் படைகளை மத்திய கிழக்கில் இருந்து வெளியேற்று ஏகாதிபத்திய சார்பு யூ.என்.பி. அரசாங்கத்தை வெளியேற்று! தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை நோக்கி முன்னேறு! என்ற சுலோக அட்டைகளை தாங்கிக் கொண்டிருந்தனர். இம்மறியல் ஆயிரக்கணக்கான மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக விளங்கியது.

தோழர் விஜே தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: எமது பிரச்சார சுலோகங்கள் ஏகாதிபத்தியத்தினை புனித ஆடையால் மூடிமறைக்க முயலும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ துரோகத் தலைவர்களின் அஹிம்சாவாத வேலைத் திட்டத்துக்கு முற்றிலும் மாறுபட்டது." எனவும் அவர் குறிப்பிட்டார்.

முதலாம் உலக யுத்தத்தில் மார்க்சிஸ்டுகளின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்திய விஜே, லெனின் — ட்ரொட்ஸ்கியின் புரட்சிகர மரபுகளைத் தாங்கிக் கொண்டுள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, உலக சோசலிசப் புரட்சிக்காக தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே இந்த உலக யுத்தத்தினை நிறுத்த முடியும் எனக் கூறுகின்றது என்றார்.

'ஸ்டாலினிஸ்ட்களும், சமூக ஜனநாயகவாதிகளும் உலக சோசலிசப் புரட்சியை தவிர்க்க எடுத்த நடவடிக்கைகளால் ஏகாதிபத்தியம் யுத்தத்தில் இறங்கும் தைரியம் பெறுகிறது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ட்ராட்ஸ்கிசத்தில் இருந்து ஓட்டமெடுத்த துரோகிகள்—பப்லோவாதிகள் இவர்களுடன் சேர்ந்தனர். இவர்கள் ஏகாதிபத்தியம் காலனிகளைக் கைப்பற்றுவதை நிறுத்தி 'புதிய காலனித்துவ' கட்டத்துக்கு வந்துள்ளது எனவும் அதன் மூலம் சீர்திருத்தங்கள் கிடைக்கும் எனவும் எதிர்பார்த்தனர். இந்த எதிர்ப் புரட்சித் தலையீடு தொழிலாள வர்க்கம் உலக சோசலிசப் புரட்சிக்காக அணிதிரள்வதை தடை செய்யும் பொருட்டே இடம் பெற்றது."

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இத்துரோகிகளுக்கு எதிராக 1953, 1964, 1985ல் திரிபுவாதிகளில் இருந்து விடுபட்டு, உலக சோசலிசப் புரட்சிப் பாதையைக் காக்க முன்னணிக்கு வந்துள்ளதாக தோழர் விஜே குறிப்பிட்டார்.

'ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தின் சமிக்கையாக மத்திய கிழக்கை தெரிவு செய்துள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப் பொறுத்தமட்டில் இந்த யுத்தம் ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாக மேற்கொண்ட தயாரிப்பாகும். சிறப்பாக மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொலிஸ் காரனாக விளங்கிய ஷா மன்னன், ஈரானிய மக்கள் கிளர்ச்சியால் தூக்கி வீசப்பட்டதில் இருந்து மத்திய கிழக்கு ஆக்கிரமிப்புக்கான தயாரிப்புக்கள் இடம் பெற்று வந்தன. 1978ல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கார்ட்டர் நெறி முறையின் அடிப்படையில் மத்திய கிழக்கு எண்ணெயை தீர்க்கமாகக் கொண்டனர்.

## யுத்த தயாரிப்பு

"பிரித்தானிய வட கடலிலும் நோர்வே கரையிலும் எண்ணெய் தோண்டி எடுப்பதன் மூலம் மத்திய கிழக்கு எண்ணெய் இல்லாமல் உலகத்தினால் இயங்க முடியாது என அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கூறி வந்தனர். அமெரிக்க ஆட்சியாளர்கள் எகிப்துடன் காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை இந்தயுத்த திட்டங்களின் ஒரு பாகம். 10 ஆண்டுகளின் முன்னரே மத்திய கிழக்கினை இலக்காகக் கொண்டு அதிரடிப் படைகள் தயார் செய்யப்பட்டன. லிபியாவில் அமெரிக்க முகாம்களைப் பலப்படுத்த அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்." எனவும் தோழர் விஜே டயஸ் குறிப்பிட்டார்.

யுத்தத் தயாரிப்புக்களின் பின்னணியில் இருந்து வரும் முரண்பாடுகளை தெளிவுபடுத்துகையில் அவர் கூறியதாவது, "நாம் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையேயான முரண்பாடுகள் மோசமடைந்து கொண்டுள்ள கால கட்டத்தில் இருந்து வருகின்றோம். விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் உண்டான பிரமாண்டமான அபிவிருத்திகள் உலக உற்பத்தியையும் வர்த்தகத்தினையும் உலகளாவியதாகச் செய்துவிட்டன ஆனால் ஏகாதிபத்தியவாதிகளோ தேசிய அரசுகளையே சார்ந்துள்ளனர். ஜேர்மன், யப்பான், அமெரிக்கா, பிரித்தானியா என்ற ரீதியில் இவர்கள் கொள்ளையின் பேரில் உலகைக் கூறுபோடுவதே ஏகாதிபத்தியவாதிகளின் அவசியமாகியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இன்று எண்ணெயின் முழு உரிமையையும் தமது கைக்குள் போட்டுக் கொண்டு உலகம் பூராவும் தமது ஆதிக்கத்தினை [illegible]தரிக்கப் பார்க்கிறார்கள்" எனவும் குறிப்பிட்டார்.

இந்த யுத்தம் எந்த விதத்தில் இலங்கையைப் பாதிக்கின்றது என[illegible] விஜே டயஸ் தெளிவுபடுத்துகையில் கூறியதாவது: "[illegible] இலட்சம்பேரின் தொழில்[illegible] நாசமாக்கப்பட்டுள்ளது [illegible]ரைப் பணயம் வைத்து [illegible]மோரி இலட்சம் பேர் மத்திய கிழக்கில் உள்ளனர். இது[illegible] வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தில் 600 கோடி ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. முக்கிய தேயிலை [illegible]வளவு வாரரான ஈராக்குக்கு அதை ஏற்றுமதி செய்ய [illegible]ாதுள்ளது. எண்ணெய் [illegible]ர்வு பொருளாதார வீழ்[illegible]கு வழிவகுத்துள்ளது. [illegible]தக்கு எதிரான ஏகாதிபத்[illegible] யுத்தம் நீண்டு செல்லும் [illegible]கம். தற்சமயம் இது ஓர் [illegible]ம்பம் மட்டுமே ஏகாதிபத்[illegible]த்தினை தூக்கி வீசி உலக [illegible]சோசலிசப் புரட்சிக்காக [illegible]திரள்வது தீர்க்கமானது. [illegible]ங்கையில் சமசமாஜ — [illegible]னிச — நவசமசமாஜ த[illegible]வர்கள் இந்த அணிதிரள்[illegible]தடுக்கவேசெயற்படுகின்றன" எனவும் விஜே டயஸ் [illegible] சாட்டினார்.

"ஏகாதிபத்திய யுத்தத்தில் அழிவு மிகவும் பயங்கரமானது ஆனால் இந்த யுத்தத்தினை மரண ஓலத்தில் உழன்று கொண்டுள்ள ஏகாதிபத்தியமே ஏற்படுத்தி உள்ளது. ஆதலால் இது யுத்தங்களதும் புரட்சிகளதும் யுகமாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, யுத்தம் சிருஷ்டிக்கும் நிலைமைகளைப் பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசப் புரட்சியின் வெற்றிக்காகப் பயன்படுத்தும். கொர்பச்சேவின் பெரொஸ்த்ரொய்கா வேலைத்திட்டம் அக்டோபர் புரட்சியின் மிச்சசொச்சங்களை ஏகாதிபத்தியவாதிகளுக்கு காட்டிக் கொடுப்பதாக உள்ளது: க்ளாஸ்நொஸ்டின் தன்மை லிதுவேனியாவில் 12 பேர் கொலை செய்யப்பட்டதன் மூலம் மீண்டும் அம்பலமாகியுள்ளது' எனவும் பு. க. க. பொதுச் செயலாளர் சுட்டிக் காட்டினார்.

ஏகாதிபத்தியத்தினை உலகளாவிய ரீதியில் துடைத்துக் கட்டச் செய்யும் இப்போராட்டத்தில் நாம் சதாம் ஹுசேனுக்கு எதுவித அரசியல் சலுகையும் வழங்கப்போவதில்லை எனக் குறிப்பிட்ட விஜே டயஸ், அவரின் செயற்பாடு ஏனைய ஏகாதிபத்தியவாதிகளின் நடவடிக்கையில் இருந்து வேறுபட்டதில்லை எனக் குறிப்பிட்டார். ஈராக்கினை குவைத்தில் இருந்து வெளியேறு! என நாம் கூற மாட்டோம். ஆனால் அரபு நாடுகளில் ஏகாதிபத்திய பிடியை உடைத்து எறியவும் அராபிய தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியம் பூண்ட சோசலிசப் புரட்சிக்காகப் போராடுவோம். நாம் ஏகாதிபத்திபவாதிகளை யுத்தத்தில் தோற்கடிக்கும் பொருட்டு சதாம் ஹுசேனில் இருந்து சுயாதீனமாக நின்று வருகின்றோம்" எனவும் விஜே குறிப்பிட்டார்.

---

## கோணகமுவ கும்பகவிட்ட தோட்டம்:

# வேலைநீக்கத்தை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டத்துக்கு அழைப்பு!

கனேபில்ல ஜனவசமவுக்கு சொந்தமான கோணகமுவ கும்பகவிட்ட தோட்டப்பிரிவு 1990 டிசம்பர் 23ம் திகதியில் இருந்து மூடப்பட்டுள்ளது. இதனால் 18—20 ஆண்டுகள்சேவை செய்த தொழிலாளர்களது தொழில்களுக்கு வேட்டு வைக்கப்பட்டுள்ளது.

கும்பகவிட்ட டிவிசன் முகாமைத்துவ நிலையிலும் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டதாக கூறும் விளம்பரம் நிர்வாகிகளால் ஒட்டப்பட்டது. 23ம் திகதி வேலைக்கு வந்த தொழிலாளருக்கு அவ்விளம்பரத்தை காட்டி திருப்பி அனுப்பியுள்ளனர்.

இவ்வாறு திருப்பியனுப்பப்பட்ட தொழிலாளர் இ. தொ. கா. யூ. என். பி. ல. ச. ச. கட்சி தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்கள். எனினும் தொழிற்சங்க தலைவர்கள் தொழிலாளரது தொழில்பேற்றும் போராட்டத்தை ஏற்பாடு செய்ய மறுத்துள்ளனர்.

யூ. என். பி. தொழிற்சங்க தலைமையை தேடிக் கண்டு பிடிக்க முடியாதுள்ளது. இ. தொ. கா. தலைமைகள் அரசாங்க அதிபருடன் கதைப்பதாக கூறி மென்னு நழுவியுள்ளனர் யூ. என். பி. அமைச்சரை சந்திக்க சில தொழிலாளர் குழு சென்ற சமயம் அவர் அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாக கடத்தியுள்ளார்? தொழிலாளரது பிரசாரத்தினால் சமசமாஜ கட்சி தலைமைகள் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு ஒழுங்கு செய்தனர். தொழிலாளர் பேச்சுவார்த்தையில் 3 கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கும்பகவிட்ட டிவிசனை மீண்டும் [illegible] ஒப்படைத்து [illegible]க தொழிலாளரது தொ[illegible]ல்களையும் மீண்டும் வழங்க[illegible]ல், இலாப. லீவு போனஸ் [illegible]ங்குதல், டிசெம்பர் 22—[illegible]ம் திகதி வரை முழுமாதமாக [illegible] கணிக்கப்பட வேண்டும். [illegible]வையே தொழிலாளரது [illegible]ரிக்கைகள்.

இந்தக்கோ[illegible]க்கைகள் குறித்து தேகாலை [illegible]வகை அதிகாரிகளுடன் [illegible]ச்சுவார்த்தை நடாத்துவ[illegible]க கூறி சமசமாஜக் கட்சி [illegible]லைமைகள் பேச்சுவார்த்தையி[illegible]ருந்து நழுவிச் சென்றுள்ளன. இன்னமும் எந்தவொரு தீர்வோ அல்லது போராட்டமோ இல்லை. இந்த தொழிற்சங்கங்கள் யூ. என். பி. அரசாங்கம் அமுல் செய்யும் உலக வங்கி திட்டங்களுள் ஒருபிரிவாகும். தோட்டங்களிலும் அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளரை வேலை நீக்க அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருகிறது.

தோட்டப்புறத்தில் தோட்டங்களை தனியார்மயப்படுத்தல் என்ற பெயரில், தொழிலாளர் வேலை நீக்கம் கொத்தனி முறையில் கீழ் எறிகூடியமட்ட வழிய சரண்டலுக்கு தொழிலாளரை நேர்ப்படுத்தல் என்பது உறுதியாகும். சில பகுதிகளை துண்டாடி கிராமத்தவர்களிடையே பகிர்ந்து கொடுப்பதும் இத்தயாரிப்புகளின் ஒருபாகமாகும். இதன் மூலம் கிராமப்புறத்தவரையும் தோட்ட தொழிலாளரையும் பிளவு

(16 ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# ஏகாதிபத்திய கொலைகாரர்கள்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

உலக யுத்தங்கள். மற்றும் பல யுத்தங்கள் எண்ணற்ற இராணுவச் சதிகள், இனாளி கொலைகார நடவடிக்கைகளால் உலகத்தினையே இவர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தனர். இன்று காலனிகளை கைப்பற்றும் அவசியத்தின் பேரில் ஈராக்குடன் மோதில் கொண்டுள்ளனர். அதனை நாசமாக்கி தமது நலன்களை அடையும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய கிழக்கில் எண்ணெய் வளங்களை கூறுபோடும் இலக்கிலேயே பிரித்தானியா, பிரான்சிய ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தில் நேரடியாக இறங்கியுள்ளனர்] ஜனவரி 24ல் யப்பான் ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்க அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் 900 கோடி டாலர்களை உதவியாக வழங்கியது. ஆனால் இது இராணுவ நடவடிக்கைகளுக்கு அல்ல எனக் குறிப்பிடப்பட்டது இந்த குடுபிடிப்புகளுக்குமத்தியில் உலக சந்தையை கூறு போடும் உலக யுத்தம் வெடிக்கவுள்ளது. மத்திய கிழக்கில் எண்ணெய் வளங்களைசுருட்டிக் கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் முயற்சி இப்பிராந்தியத்தில் ஜேர்மன் — யப்பான் பிசாசுகளுக்கு வேட்டு வைப்பதாக விளங்குகின்றது. அத்தோடு ஆசியா. ஐரோப்பா ஆபிரிக்காவுக்குள் ஊடுருவுவதற்கான குறுக்குவழிகளைத் தேடிக் கொள்வதுமாகும்.

## இராணுவ முக்கியத்துவம்

பாரசிக வளைகுடாவைக்கைப் பற்றுவதன் மூலம் அமெரிக்கப் படைகளுக்கு சகல திசைகளிலும் இராணுவத் தலையிடுகளுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது தென்கிழக்கில் பாங்கன் குடா நாடும் வடக்கில் சோவியத் நாடும் உள்ளது. கிழக்கில் இந்தியத் துணைக் கண்டமும் முழு ஆசியாவும் அமைந்துள்ளதோடு அமெரிக்காவின் முக்கிய எதிரியான யப்பானும் உள்ளது.

யுத்தத்தினுள் உக்கிரம் அடையும் பஞ்சங்களை தொழிலாள ஏழை மக்கள் மீது திணிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளதும் அதன் சகாக்களதும் நடவடிக்கைகள் ஏகாதிபத்திய மத்திய நிலயங்களிலும்] மற்றும் நாடுகளிலும் வர்க்கப் போராட்டங்களை உக்கிரம் அடையச் செய்துள்ளது] இந்தப் புரட்சிகர போராட்டங்களுள் தள்ளப்படும் மக்களை மோசடி "சமாதான யுத்த எதிர்ப்பு," ஊர்வலங்கள். மறியல்கள், கூட்டங்களுள் சிறைப்பிடித்து வைக்கும் நடவடிக்கைகளில் ஸ்டாலினிச குழுக்களும் குட்டி முதலாளித்துவ திரிபுவாத இயக்கங்களும் ஈடுபட்டுள்ளன. அவ்வாறே ஏகாதிபத்தியத்துக்கு முற்றிலும் அடிமைப்பட்ட சவூதி அரேபிய பாத்சட்சி ஆட்சியாளர்களையும் கேர்னல் கடாபி போன்ற இரட்டை வேலை தேசிய ஆட்சியாளர்களையும் நோக்காமல் மத்திய கிழக்கு தொழிலாளர் [illegible]

கொள்ளை யுத்தத்துக்கு எதிரான தமது எதிர்ப்பினைக் காட்டிக் கொண்டுள்ளனர்

## ஸ்டாலினிஸ்டுகள்

அமெரிக்க ஏகாதிபத்திய பகற்கொள்ளை யுத்தத்துக்கு முழு ஆதரவு வழங்கியுள்ள மாஸ்கோ கொர்பச்சேவ் ஸ்டாலினிச எதிர்ப்புரட்சியாளர்கள் இந்த யுத்தத்தினை வெகுமெடுக்க முழு முயற்சி செய்து வருகின்றனர். இந்த யுத்தம் பற்றி கலந்துரையாட ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டம் கூட்டப்படவேண்டும் என லிபியா, அல்ஜீரியா. மொரக்கோ, ஜோர்டானியா, சூடான் ஆகிய நாடுகளின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் சமர்ப்பித்த பிரேரணைக்கும் கொர்பச்சேவ் ஆட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. எல்லாவற்றுக்கும் முதல் குவைத்தில் இருந்து ஈராக் வெளியேற வேண்டும் என சோவியத் ஆட்சியாளர்கள் கோரியுள்ளனர், இந்த சோவியத் — சீன ஸ்டாலினிஸ்டுகளதும் மற்றும் சமூக ஜனநாயகவாதிகளதும் முண்டு கோலின் உதவியுடன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யுத்தத்துக்கு எதிராக ஈராக் ஒடுக்கப்படும் நாட்டின் பாதுகாப்புக்கு அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டியாக வேண்டும். ஈரானின் முதலாளித்துவ ஆட்சியாளர்களான சதாம் குசேனுக்கு எதுவித அரசியல் ஆதரவும் வழங்காமல், மத்திய கிழக்கில் ஏகாதிபத்தியச் படைகளைத் தோற்கடிக்கவும் ஏகாதிபத்திய நாடுகளில் முதலாளி வர்க்க ஆட்சிக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்துக்கும், ஏகாதிபத்திய கைக்கூலி தேசிய முதலாளி வர்க்கத்தை தூக்கி வீசவும் தனது வர்க்க யுத்தப் பாதையில் அனைத்துலக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் போராட்டங்களை இல்

இலங்கையிலும் இந்தியாவிலும் பிரேமதாச — சந்திரசேகர் கைக்கூலி அரசாங்கங்கள் அமெரிக்க யுத்த விமானங்களுக்கு எண்ணெய் வழங்கும் முடிவினை எடுத்ததன் மூலம் ஏகாதிபத்திய யுத்தத்துடன் தம்மை பிணைத்துக் கொண்டுள்ளன. இந்த வேளையில் யுத்த எதிர்ப்பு கூட்டங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மறியல்கள் மேல் பாய்ந்து விழுந்துள்ளன. இந்த ஏகாதிபத்தியயுத்தமானது பிரேமதாச அரசாங்கத்துக்கு வடக்கு — கிழக்கில் தமிழ் ஈழத்தினருக்கு எதிராக விமானக் குண்டு வீச்சுக்களை உக்கிரமாக்கவும் சிங்கள கிராமப்புறங்களில் பல்லாயிரக்கணக்கானோரை கொன்றுதள்ளவும் கிடைத்த வாய்ப்பாகியுள்ளது. பாராளுமன்றத்தில் ஈராக் 'ஆக்கிரமிப்பினை' கண்டனம் செய்ததன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளின் கைக்கூலியாக களத்தில் இறங்கியுள்ள முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் மக்கள் முன்னணியில் சேர்ந்துள்ள சமசமாஜ — கம்யூனிச- நவசமசமாஜ துரோகத் தலைவர்களின் நிலைப்பாடும் இதுவே, 'சமாதானப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்வு காண பிரேமதாச தலையிட வேண்டும்' என்பதே இவர்களின் நிலைப்பாடாக உள்ளது.

இலங்கைத் தொழிலாளர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகோதர ஈராக்கியத் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய உயர்ந்த ஆதரவு ஏகாதிபத்திய கைக்கூலி பிரேமதாச அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து வெளியேற்றி தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர போராடுவதே. ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்கில் உலக பாட்டாளி வர்க்கத்தின் ஈராக் அணியின் இரத்தத்தினை உறிஞ்சுகிறார்கள் எந்தவொரு உலகப்பாட்டாளியும் வாய்மூடி மௌனியாக இருக்க முடியாது. இலங்கைத் தொழிலாள வர்க்கம் ஏகாதிபத்திய படைகளை மத்திய கிழக்கில் இருந்து வெளியேற்று! ஈராக்கைப் பேணு! ஈராக்குக்கு எதிரான ஏகாதிபத்திய தடைகளை அகற்று! ஏகாதிபத்தியச் யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சியில் இருத்து! என்ற கோரிக்கைகளுக்காக வர்க்க இயக்கங்களுள் போராடவேண்டும். ஏகாதிபத்திய யுத்தத்துடனான சகல கொடுக்கல் வாங்கல்களையும் பகிஷ்கரிக்க வேண்டும் யுத்தப் பளுவை தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணிக்க பிரேமதாச அரசாங்கம் எடுக்கும் தயாரிப்புக்களுக்கும் வட — கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை பலிகொடுக்கும் யுத்தத்துக்கும், கிராமப்புற படுகொலைக்கும் எதிராக பொது வேலை நிறுத்தம் வரையிலான வர்க்க நடவடிக்கையில் குதிக்க வேண்டும்.

தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை இப்போராட்டத்துக்கு அணிதிரட்டும் புரட்சித் தலைமையை உறுதி செய்யும் பொருட்டுபுரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திலும், அதன் இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகள் இயக்கத்திலும் இணையுமாறு நாம் வேண்டுகின்றோம்.



ஈராக்குக்கு எதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டித்து பு.க.க கொழும்பு நகரமண்டபத்தில் நடாத்திய பொதுக்கூட்டத்தில் அதன் செயலாளர் தோழர். விஜே டயஸ் பேசுகிறார்.

## பு. க. க ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

களை வெளியேற்று! ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! என்றும் பதாகைகளுடன் பு. க. க. அங்கத்தினர்கள் சுலோகங்களை கோஷித்தனர். ஆயிரக்கணக்கான தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக விளங்கிய இம்மறியல் போராட்டத்தின் பின்னர் மாலை 5 60 மணிக்கு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் பு. க.க. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு கண்டனம் தெரிவிக்கும் கூட்டத்தினையும் நடாத்தியது. இதற்கு முன்னர் ஜனவரி 15ம் திகதியும் பு. க. க மறியலும், கூட்டமும் நடாத்தியது குறிப்பிடத்தக்கது ஜனவரி 21ம் திகதி இடம் பெற்ற மறியல் போராட்டத்தையும் புதிய நகர மண்டப கூட்டத்துக்கு வருகை தந்தவர்களில் ஒருபகுதியினரையும் முன்பக்கப் படங்கள் காட்டுகின்றன.

## கோணகமுவ கும்பகவிட்ட தோட்டம்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

படுநந்து வெட்டுக்குத்தலை ஏற்படுத்துவந்த யூ. என். பி. அரசாங்க ,தினதும ஏகாதிபத்திய வங்கியாளரதும் திட்டம் இச்சதிக்கு எதிராக தொழிலாளரும் ஏழை விவசாயிகளும் ஒருங்குபட்ட போராட்டம் வளர்ச்சியடைவதை தடுப்பதே அரசாங்கத்தின் இலக்கு.

அரசாங்கத்துள் குந்தியுள்ள இ தொ. கா. தலைமைகள் இத்தாக்குதல்களின் தயாரிப்பாளராவர். சமசமாஜ — கம்யூனிச—நவசமசமாஜ தலைமைகள் இப்பிற்போக்கு தாக்குதல்களுக்கெதிராகஎந்தவொரு போராட்டத்தையும் தயார் செய்வதில் இருந்து நழுவி வருகின்றனர். இவர்கள் ஏகாதிபத்திய வங்கியாளரது கடைகெட்ட ஏஜந்துகளாக மாறியுள்ளனர். தோட்ட தொழிலாளரது இயக்கமான இ தொ. கா, உலகவங்கி — யூ. என். பி. தாக்குதல்களின் பங்காளிகளாக மாறித் தொழிலாளரை திசைதிருப்புவதை உடனடியாக நிறுத்தவேண்டும். இ. தொ. கா. உடனடியாக அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும். கம்பளையில் ஜயவசம கும்பகவிட்ட உட்பட்ட சகல தோட்ட தொழிலாளரது தொழில், சம்பளம், குடியுரிமை ஏனைய உரிமைகளை பேணும் பொருட்டு பொது வேலை நிறுத்தமொன்றை ஏற்பாடு செய்ய போராடுமாறு தொழிலாளர் நெருக்க வேண்டும்.

எனினும் இத்துரோக தலைமைகளை பற்றி எந்தவொரு நப்பாசையும் வைக்கவேண்டாமென நாம தொழிலாளரை கோருகிறோம். கம்பளை ஜயவசம தொழிலாளர் தமது தொழிற்சங்க கிளைகளின் பலத்தை ஒருங்கிணைந்து நடவடிக்கை குழுக்களை நிறுவி போராட்டநடவடிக்கைஎடுக்க வேண்டுமென நாங் கூறுகிறோம். அப்போராட்டத்தினுள் தோட்டத்துறை முழுவதும் பொது வேலை நிறுத்தத்துக்காக தொழிலாளர் பிரசாரம் செய்யவேண்டும் தோட்ட பகுதியை தொழிலாள ஆட்சியின் கீழ் தேசியமயமாக்காது இந்த உரிமைகளை பேண முடியாது. முழுத் தொழிலாளவர்க்கமும் எதிர்நோக்கியுள்ள பிரச்சனை இதுவே முக்கிய முதலாளித்துவ நிறுவனங்களையும் வங்கிகளையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு யூ. என். பி அரசாங்கத்தை விரட்டி தொழிலாள— விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதுமுக்கிய பிரச்சினையாகியுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களுக்காக போராடும் புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து முழு தோட்டதுறையினதும் தொழிலாளர் இயக்கங்களுக்கு புரட்சிகர தலைமையை நிலைநாட்ட முன்வருமாறும் நாம் தோட்ட தொழிலாளரை வேண்டுகிறோம்.

## கின்ரோஸ் தோட்டத் தொழிலாளி,..

(14ம் பக்கத் தொடர்ச்சி)

30ம் திகதி பதுளை பொலிசார் இது சம்பந்தமாக விசாரணை நடத்தினர். டாக்டரும் இன்னொரு அதிகாரியும் ஏபி. டவ். சீ. சங்கத்துக்கு சென்று வேலை நிறுத்தத்தை கைவிடும்படியும் ரூபா 10,000/- தருவதாகவும் கூறிய பொழுது இருவரும் விரட்டப்பட்டனர். பதுளை தொழில் திணைக்களம் விசாரணை நடாத்துவதாகவாக்குறுதி அளித்ததை தொடர்ந்து தொழிலாளர்கள் 4ம் திகதி வேலைக்கு திரும்பினர்.

தற்பொழுது டாக்டரை இடமாற்றும்படி கோரியுள்ள நிலையில் மருத்துவமனை மூடப்பட்டுள்ளது.

இவ் வேலை நிறுத்தத்தில் சகல தொழிற்சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் பங்கு பற்றினர்.

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிச விரோத புதிய ஜனநாயகமும் டிராட்ஸ்கிசமும்



-அகிலன்

டிராட்ஸ்கியவாதம் என்றால் என்ன? என்று ஒருவர் கேட்ட கேள்விக்கு விடை எழுதப் புகுந்த குட்டி முதலாளித்துவ மாவோவாதிகளின் 'புதிய ஜனநாயகம்' (இதழ்எண் 5/17-18, ஜூலை-ஆகஸ்டு) ஸ்டாலினிசத் திருத்தல்வாதத்தைக் காப்பதற்காகவும்' அதனை நியாயப்படுத்துவதற்காகவும் உண்மைகளைத் திரித்துப்புரட்டியுள்ளது. ஸ்டாலினிசம் ருஷ்யா, சீனம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டுகளாகவும், முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவத்தினது, ஏகாதிபத்தியத்தினது சகபாடிகளாகவும் மாறியதன் மூலம் டிராட்ஸ்கியினது போராட்டம் வரலாற்று ரீதியாக ஊர்ஜிதம் செய்யப்பட்டு உள்ளது. இதனைக்கண்டு கிலிகொண்டுள்ள ஸ்டாலினிச மாவோயிச ஏடான புதிய ஜனநாயகம் 'விரிவான விளக்கம் தருவது சாத்தியமில்லை' என்ற சாக்கில் வரலாற்றைத் திரித்தும், பொய்களைப் புனைந்தும் ஸ்டாலின் கக்கியதைத் தான் உண்டு கக்கியுள்ளது. ஸ்டாலினும் புகாரினும் மன்றாடிய 'தனி ஒருநாட்டில் சோசலிசம்' திவாலாகிவரலாற்றின்குப்பை தொட்டியில் தூக்கி வீசப்பட்ட பின்னரும் வக்காலத்து வாங்க வரிந்து கட்டிக்கொண்டு வரும் 'புதிய ஜனநாயகம்' டிராட்ஸ்கிஸ்டுகளின் மேல் சேற்றை அள்ளி வீசுகிறது. வரலாற்றின் நிகழ்வுகளையும் அதன் உட்தொடர்புகளையும், விஞ்ஞானக் கண்கொண்டு ஆராயாமலும் இயங்கியல் ரீதியாகப்பார்க்காமலும் நுனிப்புல் மேய்ந்து வாந்தி எடுக்கும் புதிய ஜனநாயகத்தின் பொய்மைப்படுத்தலையும், எதிர்ப்புரட்சிகர ஸ்டாலினிச பாரம்பரியத்தையும் அம்பலப்படுத்துவோம். முதலில் 'தனி ஒரு நாட்டில் சோசலிசம் சாத்தியமில்லை' என்ற தலைப்பில் பு.ஜ. குறிப்பிடுவதாவது :

''ஏகாதிபத்தியக்கட்டமைப்பு என்றசங்கிலியின்பலவீனமான கண்ணியில் புரட்சி வெடிக்கும் தனி ஒரு நாட்டிலேயும் சோசலிசப் புரட்சி வெல்வதும் சோலிசக் கட்டுமானமும்'' சாத்தியம் என்று லெனின் நம்பியதாகக்கூறுவது கடைந்தெடுத்த முழுபொய்யாகும்.

## '' தனி ஒரு நாட்டில் சோசலிசம் '' மார்க்சிசத்திற்கு எதிரானது

'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்பது ஒருபிற்போக்கு தேசியவாதக்கொள்கையாகும் இது மார்க்சியத்திற்கு எதிரானது; விஞ்ஞானத்திற்குப் புறம்பானதாகும்,

''அனைத்து உலக சந்தையைப் பயன்படுத்திச் செயல்படுவதன் மூலம் முதலாளித்துவ வர்க்கம் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியையும் நுகர்வையும் அனைத்துலகத்தன்மை பெறச் செய்திருக்கிறது. பிற்போக்காளர்கள் கடுங்கோபங் கொள்ளும்படி அது தொழில்களது காலுக்கு அடியிலிருந்து அவற்றின் தேசிய அடிநிலத்தை அகற்றியுள்ளது'', என்று 1848-ல் வெளியிடப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் மார்க்ஸ், எங்கெல்ஸ் அனைத்துலகத்தன்மை பெற்று விட்டதாக அறிவிக்கும் முதலாளித்துவ பொருளாதார உற்பத்தி முறையை, தனி ஒரு நாட்டிற்குள் மட்டும் ஒழித்து விட்டு சோசலிசத்தைக் கட்டமுடியும் என்று ஒருபோதும் அவர்கள் எண்ணவில்லை எனவேதான் 'உலகத் தொழிலாளர்களை ஒன்று சேருங்கள்' என்ற உலகப் பாட்டாளி வர்க்கத்தின், விடுதலைக்காக முதல் அகிலம்' (International Working Mens Association) எனும் சர்வதேச அமைப்பை நிறுவினார்கள். இந்த வழியில் தான் லெனின் டிராட்ஸ்கி, ரோசாலக்சம்பர்க், கார்ல்லீப்னெஹ்ட் போன்றோருடன் சேர்ந்து சர்வதேசக் கட்சியான மூன்றும் அகிலத்தை நிறுவினார். 'தனி ஒரு நாட்டில் சோசலிசம் எனும் கொள்கை பாட்டாளி வர்க்கசர்வதேசியத்திற்கு எதிரான கொள்கையாகும்.

ஒரு நாட்டில் அல்லது சில நாடுகளிலாவது தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும், அப்பொழுதுதான் அந்த தொழில்நுட்ப வளங்கள் அனைத்தும் சாவியும் தொழிலாளவர்க்கத்திற்கு தடையின்றிக் கிடைக்கும் 'தேவைக்கேற்ற உற்பத்தியை' நிறைவு செய்ய முடியும் மேலும் இதுவரையிலான முதலாளித்துவ உற்பத்தி முறையின கண்டுபிடிப்புகளும், பலாபலன்களும் சமுதாயத்தின் தேவைக்காகவும் நலனுக்காகவும் முழுமையாகப் பயன்படுத்த முடியும். இதன் மூலமே வறுமை, பசி, பஞ்சம், பட்டினி, வேலையின்மை, முதலியவற்றை நிரந்தரமாய் இல்லாமற் செய்ய முடியும். ஒவ்வொரு



1988, ஜூன் 4-ஆம் திகதி டியானென்மென் சதுக்கத்தில் கூடியிருந்ததொழிலாளர்களும் மாணவர்களும்

## தனி ஒரு நாட்டில் சோசலிசம் லெனினது கொள்கையா ?

உண்மையில் தனி ஒரு நாட்டில் சோசலிசம் எனும் கொள்கை 1878 ஜெர்மன் ஜனநாயக கட்சியின் வலதுசாரிப் பேச்சாளர் ஹெர்வோல்மர் என்பவரால் தனித்தசோசலிச அரசு' (ISOLATED SOCIALIST STATE) என்று குறிப்பிடப்பட்டதிலிருந்து வந்ததாகும்.

இது பிற்பாடு ஸ்டாலின், புகாரின்போன்றோரால் கடைப்பிடிக்கப்பட்டது. இதனை லெனின் ஒரு போதும் தன் எண்ணத்தில் கொள்ளவில்லை.

1917ல் ஏகாதிபத்தியக் கட்டமைப்பின் பலவீனமான கண்ணியில் ருஷ்யத் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றியிருந்ததால் ருஷ்யா ஒரு மிகவும் பின்தங்கிய பொருளாதாரத்தையும் உற்பத்திச் சக்திகளையும் கொண்டநாடாக இருந்தாலும் அதில் சோசலிசத்தை நிர்மாணிக்க வேண்டுமானால், வளர்ச்சி அடைந்த ஒரு நாட்டிலிருந்து வரும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் ஆனதன் உளப்பூர்வமான, செயல் முறையிலான உயர் கலாச்சாரத்தை அடைய முடியும். இதுவே சோசலிசத்தின் வளர்ச்சி நிலை இங்கு சோசலிசப் புரட்சியையும் சோசலிசத்தையும் ஒன்றுகப் போட்டுக் குழப்பும் வேலையை செய்கிறது 'புதிய ஜனநாயகம் அதனால்தான் லெனின் கூறியவைதை புதிய ஜனநாயகம்திரித்து எழுதுகிறது இனி லெனினே கூறுவதைக் கேட்போம்.

''இத்துறையில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் கண்டிருக்கும் சாதனைகளில் மதிப்பு வாய்ந்தவை யாவற்றையும் சோவியத் ருஷ்யா எப்பாடுபட்டேனும் தெரிந்தெடுத்துக் கையாளடாக வேண்டும். சோவியத் ஆட்சியதிகாரத்தையும் சோவியத நிர்வாகஒழுங்கமைப்பையும் முதலாளித்துவத்தின் மிக நவீன சாதனைகளுடன் சேர்த்து இணைத்துக் கொள்வதில் நாம் காணும் வெற்றியையே பொறுத்திருக்கிறது; சோசலிசத்தைக் கட்டியமைப்பதற்கான சாத்தியப்பாடு''.

லெனின் (தேர்வு நூல் 8 பக்கம் 83).

''நாம் முதலாளித்துவத்தில் இருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்லும் கட்டத்தைக் கூட இன்னும் பூர்த்தி செய்யவில்லை, சர்வதேசப்பாட்டாளிகள் உதவி இல்லாமல் அதைப் பூர்த்தி செய்து விடலாம் என்ற நம்பிக்கையை நாம என்றுமே நம்பியதில்லை. இது சம்பந்தமான பிரமைகள் ஏதும் நமக்கு கிடையாது.

லெனின் 1918, ஜனவரி 12 13, 14 தேர்வு நூல் தொகுதி 7.

''தனி ஒரு நாட்டில் சோசலிசத்தின் இறுதி வெற்றி சாத்யத்மல்ல என்பதுமெய்யே...''

லெனின், தேர்வு நூல் தொகுதி 7 (பக்கம் 175 ).

''ஐரோப்பாவில் சோசலிசத்தின் வெற்றியை நம்பி இருக்கிறோம் என்ற மகத்தான கோஷத்தை வெறும் வாய்ச் சொல்லாக மாற்றி விடக் கூடாது சோசலிசத்தின் பூரண வெற்றியை நோக்கிச் செல்லும் நீண்ட கடினமான பாதை நம் மனதில் இருக்குமானால் இது உண்மையான கோஷம்...... ..''

லெனின் 1918, பிப்ரவரி 25 தேர்வு நூல் 7 பக்கம் 195

வரலாற்றின் நெளிவு சுழிவுகள் காரணமாக புரட்சியைத் தொடங்கும் நாடு எவ்வளவு அதிகமாய்ப் பின் தங்கி நிற்குமோ, பழைய முதலாளித்துவ உறவுகளிலிருந்து சோசலிஸ்டு உறவுகளுக்கு மாறிச் செல்வது அதற்கு அவ்வளவு கஷ்டமாகவே இருக்கும்'' லெனின் தொகுதி நூல் 7 பக்கம் 217.

''உலக வரலாற்றின் கண்ணோட்டத்துடன் பார்க்கும் பொழுது நமது புரட்சி இயக்கங்களை அல்ல விடில் அதன் இறுதி வெற்றியினுல் எவ்வித நம்பிக்கையையும நிச்சயமாக இராது. போல்ஷேவிக் கட்சி இந்தப் பணியினை தனியாக மேற்கொண்டபோது புரட்சி எல்லா நாடுகளிலும் முதிர்ச்சியடைந்து வருகிறது—

நாம் எத்தகைய இடர்ப்பாடுகளை அனுபவிக்க நேரினும் சரி எதிர்காலத்தில் என்னதோல்விகள் வந்தபோதிலும்சரி இறுதியில், துவக்கத்தில் அல்ல, உலக சோசலிசப் புரட்சி வரும் ஏனெனில் அது அனுகிக் கொண்டிருக்கிறது, அது முதிர்ச்சியடையும், ஏனெனில் அது முதிர்ச்சியுற்று வருகிறது முழுமையாக முதிர்ச்சியுறும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் தான் நாம் இப்பணியினை மேற்கொண்டோம். இந்த இடர்கள் எல்லாவற்றிலிருந்தும் நமக்கு விமோசனம் தருவது ஐரோப்பியப் புரட்சியே என்று திரும்பவும் கூறுகின்றேன்''.

லெனின் தேர்வு நூல் தொகுதி 7, பக்கம் 224

போல்ஷேவிக்குகள் குறிப்பாக வளர்ச்சியடைந்த அன்றைய நாடான ஜெர்மனியில் தொழிலாள வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் என ஆவலோடு இருந்ததுடன், அந்தப் புரட்சி ருஷ்யத் தொழிலாள வர்க்கம் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக இருக்கும் எனவும் நம்பினர்.

லெனின் இதனைப் பல இடங்களில் குறிப்பிடுகிருர்.

'' சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடைமுறிவதால் ஜெர்மன் இயக்கம் உடனே வளர்ச்சியடையும் என்று நாம் நம்புவோமானால் நம்மை நாமே தியாகம் செய்து கொள்ள வேண்டும், ஏனெனில ஜெர்மன் புரட்சி நமது புரட்சியைக்காட்டிலும மேலதிகசக்தி வாய்ந்ததாகும்''.

லெனின் தொகுதி 7 பக்கம் 147

''புதிய சமுதாய அமைப்பு வெற்றி பெற, இறுதியாய்ப் பார்க்குமிடத்து. உழைப்பின் உற்பத்தித் திறன்தான் மிக முக்கியமானது, தலைமையானது, உழைப்பின் உற்பத்தித் திறனில் அடிமை முறை அறியாத உயர்நிலையை முதலாளித்துவம் உண்டாக்கிற்று. உழைப்பின் உற்பத்தி திறனில் மேலும் மிக உயர்ந்த ஒரு புதிய நிலையைஉண்டாக்குவதன் மூலம் சோசலிசமானது முதலாளித்துவத்தை அடியோடு தோற்கடிக்கவும் முடியும், தோற்கடிக்கவும் போகிறது. இது மிகவும் கடினமான பணி, இதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனால்இது துவககப்பட்டு விட்டது.........

லெனின் தொகுதி 9. பக்தம் 323

'' இரண்டு, மூன்று வாரங்களில் (இது சாத்தியம்) லீப்னெஹ்ட் வெற்றி பெறுவாரானால் நம்மை எல்லாக் கஷ்டங்களிலும் இருந்து அவர் விடுவிப்பார் என்பது உறுதி''.

தொகுதி 7 பக்கம் 187

எனவே போல்ஷேவிக்குகள் 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' எனும் தத்துவத்தின் பால் ஒருபோதும் நம்பிக்கை வைக்கவில்லை என்பதை அறியலாம் 1924ல் ஸ்டாலினும் புகாரினுமே இதனைத் திணித்தனர். லியான் டிராட்ஸ்கியும் அவரது தலைமையிலான இடது எதிர்ப்பினர் மட்டுமே இப் பிற்போக்கு அடிபணிதலுக்கெதிராக இறுதிவரை போராடினர் இந்த வரலாற்றை மூடி மறைக்க லெனினே 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' கொள்கையைக் கடைப்பிடித்தார் என்று கண்மூடித்தனமான ஸ்டாலினிச பக்தியினுல் உளறும் பு.ஜ. லெனினை ஸ்டாலினிசத்தின் முன்னோடியாகச் சித்தரிப்பது கேடுகெட்டவேலையாகும்.

இன்னும் சொல்லப்போனல் ஸ்டாலின்தனது 'லெனினிசத்தின் பிரச்சினைகள்' என்ற நூலில் 1919ல் முதல்பதிப்பில் 'ருஷ்யா போன்ற விவசாய நாட்டில், அநேக வளர்ச்சி அடைந்த நாட்டுத்தொழிலாள வர்க்கத்தின் முயற்சிகள் இல்லாமல் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியாது' என்று கூறியுள்ளார். பின் வந்த பதிப்புக்களில் அந்த வரிகள் நீக்கப்பட்டிருக்கின்றன.

உலக முதலாளித்துவ வர்க்க அழுத்தத்திற்கு அடிபணிந்த ஸ்டாலின் அதிகாரத்துவத்தின் முதல் பிரதிநிதியானன், வளர்ச்சி அடைந்து வந்து கொண்டிருந்த அதிகாரத்துவமானது 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற கொடியின் கீழ் சலுகைகள் நிறைந்த

(18ம் பக்கம்பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# மார்க்சிச விரோத புதிய ஜனநாயகமும் டிராட்ஸ்கிசமும்

அதிகாரத்துவஜாதியின் நலன்களை பாதுகாப்பது சிறந்தது எனகண்டது.

### தனி ஒரு நாட்டில் சோசலிசம் கொண்டு வந்ததன் காரணங்கள்:

கட்சிகளுக்குள்ளும் அரசுக்குள்ளும் வளர்ந்த அதிகாரத்துவத்தின் வளர்ச்சியும் புறநிலை ரீதியாக 1923-ல் ஏற்பட்ட ஜெர்மன் புரட்சியின் தோல்வியும், போல்ஷேவிக் கட்சியில் லெனினதுமறைவும் கட்சிக்குள்ளே பெரும் நெருக்கடியையும் பாதிப்பையும் கொண்டு வந்தது. ருஷ்யதொழிலாளர்கள் உலகின் ஏனைய பகுதி தொழிலாள வர்க்கம் வெற்றி பெறுவர் என்பதில் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர்.

### அதிகாரத்துவத்தின் வளர்ச்சி

1922ன் ஆரம்ப காலப்பகுதியிலேயே லெனின் கட்சிக்குள்ளும் அரச எந்திரத்தினுள்ளும் அதிகாரத்துவ வளர்ச்சியைக் கண்டு பிடித்தார் இது பின்தங்கிய ருஷ்யப் பொருளாதாரத்தில் இருந்து அரும்பியது. 1917ல் இருந்த ஜார் காலத்திய பின்தங்கிய நிலைமையானது மூன்று வருடங்களாகத் தொடர்ந்த உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட நாசகரமான விளைவுகளினால் அது மேலும் மேலும் மோசமடைந்தது. புதிய தொழிலாள வர்கக அரசைக் கவிழ்ப்பதற்கான ஏகாதிபத்தியங்களின் முயற்சிகளாலும் நெருக்கடி மேலும் கூடியது,

இந்த புதிய தொழிலாள வர்க்க அரசில் உற்பத்தி சாதனங்களை உரிமையாகக் கொள்வதில் சமத்துவமுடைமையாக இருப்பினும் விநியோகம் முதலாளித்துவ பாணியில் இருந்தது. எனவே அங்கு பற்றாக்குறையானவளங்களை சமமற்ற முறையில் விநியோகம் செய்யும் ஒரு அதிகாரத்துவத்தின் (ஜடரீதியான நலனைக் கொண்ட) இருப்பு சாத்தியமாகியது. இது தனது ஜடரீதியான நலன்களைப்பேணுவிதமாக தனக்கு மட்டும் அதிக பங்கு வருமாறு பார்த்துக் கொண்டது. தனிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர் அரசின் மீதான ஏகாதிபத்திய அழுத்தமே,அதனுடைய இருப்புக்கான காரணம் ஆகும். ஆனால் அந்த அதிகாரத்துவம் தனது அரசியல் ஆதரவிற்கான தவத்தை போல்ஷேவிக் கட்சியின் மத்திய குழுவினுள்ளும் தேடியது; குறிப்பாக ஏகாதிபத்தியத்தில் அழுத்தத்தின் காரணமாக ஸ்டாலின் போன்றோர் அதிகாரத்துவத்தின் பிரதிநிதியாக மாறினர். ஸ்டாலினுக்கிருந்த தத்துவார்த்த பலவீனமே இதற்கு அடித்தளமாகவும் அமைந்தது.

### புதிய பொருளாதாரக் கொள்கை

புதிய ஜனநாயகம் கயிறு திரிப்பதுபோல 'தனி ஒருநாட்டில் சோசலிசம்' கட்டப்பட முடியும் என்பதற்காக 'புதிய பொருளாதாரக்' கொள்கை கொண்டு வரப்படவில்லை. உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து சோவியத்யூனியனின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது அதனை மேலும் சீரழியவிடாது தடுப்பதற்காகவே 'புதிய பொருளாதாரக் கொள்கை' அமல்படுத்தப்பட்டது குறிப்பாக விவசாய உற்பத்தியைப் பழைய நிலைக்குக் கொண்டு வரவும். நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்குமிடையேமுறிந்து போன உறவுகளை திரும்ப சீரமைப்பதற்கும், முதலாளித்துவ சந்தை உறவுகளை ஒரு பகுதியாக புனருத்தாரணம் செய்ய அனுமதிப்பதென்றும் போல்ஷேவிக்குகள் தீர்மானித்தனர். இது ஒரு பின்வாங்கல் கொள்கைதான். ஆனால் இதன் அரசியல்குறிக்கோள் ஏகாதிபத்திய மையங்களில் புரட்சியின் வெற்றிக்கான அறிகுறிகள் தோன்றும் வரைக்கும் அல்லது ஆசியாவில் ஒரு வெடிப்பு ஏற்பட்டு சோவியத் தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஆதரவை பலப்படுத்தும் வரைக்கும் சோவியத் யூனியனுக்கு ஒரு ''மூச்செடுக்கும் நேரத்தை'' வழங்குவதாகும்.



வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சோவியத் சுரங்கத் தொழிலாளர்கள்

ஜெர்மன் புரட்சியின் தோல்வியானது, சோவியத் ரஷ்யாவின் மீது தனித்து ஒதுங்கியிருக்கும் தன்மையைஏற்படுத்தியது. அதனுடன் கூட உள்நாட்டுப்போரில் நாசகரமான அழிவுகள் ஏற்பட்டன. அமெரிக்கா உட்பட பிரதானஏகாதிபத்திய நாடுகள்(14 நாடுகள்) தலையிட்டதை எதிர்த்துஇறுதியில் போல்ஷேவிக்குகள் வெற்றி பெற்றாலும் கூட பொருளாதார நிலை மிகப் பயங்கரமாக வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது. 'போர்க் கம்யூனிசம்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்த பிறகு 'புதிய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. சர்வதேச தொழிலாள வர்க்கப் புரட்சி வளர்ச்சியடையும் பொழுது, சோசலிச நிர்மாண பணியில் நேரடியாகமுன்னேற முடியும் என்று கருதப்பட்டதால், 'புதிய பொருளாதாரக் கொள்கை' கட்சியின் நிரந்தர கொள்கையாகக் கருதப்படவில்லை. லெனின் இதனை 'மூச்செடுக்கும் நேரம்' என்று கூறுகிறார். எனவே 'தனி ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்ட முடியும்' என்பதற்காக இந்தக் கொள்கையை, லெனின் கடைப்பிடித்தார் என்று 'புதிய ஜனநாயகம்' Empryocist ஆக இருந்து கொண்டு மற்றவர்களையும் அதில் வீழ்த்தும் வேலையைச் செய்கிறது.

''...சோவியத் ருஷ்யாவில் விவசாயிகள் கம்யூன்களை உருவாக்குவதற்காக புதிய நிலப்பிரபுக்களான குலாக்குகளின் நிலங்களைக் கைப்பற்றும் நடவடிக்கை எடுத்தபோது டிராட்ஸ்கியவாதிகள் குலாக்குகளுடன் சேர்ந்து கொண்டுசதிநாசவேலைகளில் ஈடுபட்டு அதீத சோசலிசம் கலைத்துக் கொண்டனர்'' என்று பச்சைப் புளுகை அவிழ்த்து விடும் பு.ஜ. குலாக்குகள் வளர்வதற்கு அடித்தளம் அமைத்தது யார் என்றும் (ஸ்டாலினா) எந்தக் கொள்கை? என்றும், விளக்குமா? வெளி நாட்டு வர்த்தகத்தின் மீது இருந்த அரசின் ஏகபோகத்தை எடுக்க முயற்சித்தது யார் என்று கூறுமா? (ஸ்டாலின்) லெனினின் இதற்கு எதிரான கடைசிக் கால போராட்டத்தை மறுக்க முடியுமா? ' எழுதினால் இடம் மிகும்' என்று எடிட்டிங் வேலையை (எதிர்ப்புரட்சி வேலை) வரலாற்று உண்மைகளில் மூடிவைக்கும் பு.ஜ.வின் சித்து வேலைகளை ஆராய்வோம்.

அக்டோபர் புரட்சியின் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட அரசு இரட்டைக்குணம்சம் உடையதாக இருந்தது. (1) 1917 புரட்சியின் பலனாக ஏற்படுத்தப்பட்ட சொத்து உறவுமுறைகளை அது பாதுகாத்ததால் அந்த அளவிற்கு அது சோசலிசத்தன்மை வாய்ந்ததாக இருந்தது.(2) பகிர்வு அல்லது விநியோகத்தில் வேற்றுமையைப் பாதுகாத்ததால் அது அந்த அளவு முதலாளித்துவத் தன்மையதாகவும இருந்தது.

ஸ்டாலினும் புகாரினும் புதிய பொருளாதாரக் கொள்கையால் ஏற்படுத்தப்பட்டு சீரழிந்து வரும் அபாயங்களை அலட்சியம் செய்து, விவசாயிகளுக்கு மேலும் அதிகசலுகைகளுக்காக வாதாடினார்கள். அதேசமயம் டிராட்ஸ்கி, சோவியத்யூனியனில் சோசலிச வளர்ச்சி, விரைவான வளர்ச்சிப்போக்கிலான தொழில்மயமாக்கலில்தான் தங்கி உள்ளது என்று வலியுறுத்தினார், சோவியத்யூனியனில் இருக்கும் அனைத்து வளங்களையும் திரட்டி மத்தியப்படுத்தப்பட்ட திட்டத்தின் வழிகாட்டலின்கீழ் கனரக தொழில்துறையை வளர்ச்சி அடையசெய்யவேண்டும் என்றார்.

1923ல் உருவாக்கப்பட்ட டிராட்ஸ்கி தலைமையிலான இடது எதிர்ப்பினர் (Left opposition) கனரக தொழில் துறையை வளர்ச்சியுறச் செய்வதற்கான ஒரு பரந்த வேலைத்திட்டத்தை முன்வைத்தனர், அதில் ஏனைய விஷயங்களுக்கு மத்தியில், உலகப் பொருளாதாரத்தில் சோவியத் யூனியனின் நிலையைப் பலப்படுதவதற்கான தீர்மானம் உள்ளடங்கியிருந்தது. உலகப் பொருளாதாரம் பற்றிய எவ்விதஅறிவும் அவசியமில்லை எனும் கருத்தையும், சர்வதேச தரங்களில் சோவியத் தொழிற்துறையின் உற்பத்திப்பொருட்களின் தரத்தையும், விலையையும் புறக்கணிக்கலாம் என்ற கருத்துக்களையும் டிராட்ஸ்கி நிராகரித்தார். வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகம் என்ற அமைப்பிற்குள் சோவியத் யூனியனின் பொருளாதாரத்தின் உலக முதலாளித்துவ சந்தையுடனான இணைப்பைப் பலப்படுத்தும்படிடிராட்ஸ்கிஉற்சாகப்படுத்தினர். ஆனால்ஸ்டாலின் புகாரின் வகையறாக்களோ வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான அரசின் ஏகபோகத்தை நீக்கியதுடன், உள்நாட்டு வளங்களை மட்டும் வைத்துக் கொண்டு சோசலிசத்தைக் கட்டி விடலாம் எனும் பிரமைக்குள் அமுழ்ந்தினர்' தொழில் நுட்பத்தையும். சடரீதியான மூலவளங்களையும் பெற்றுக்கொள்வதன் அவசியம் ஆகியவை பற்றி டிராட்ஸ்கிக்கு உள்ள விளக்கம் அவரது சர்வதேச முன்னோக்கின் அம்சத்தின் பாற்பட்டதாகும். இதில் ஒன்றை மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டும், டிராட்ஸ்கி ஏகாதிபத்திய வாதிகளுடனான சோவியத் வர்த்தகத்தின் நீட்டிப்பை ஒரு புரட்சிகர சர்வதேசியத்திற்கு பதிலீடாக ஒருபோதும் முன்வைக்கவில்லை, ''ஏகாதிபத்தியத்தின் ராணுவ டாங்குகளைவிட அவற்றின் தரமான உற்பத்திப் பொருட்கள்தான் சோவியத் அரசுக்கு பேராபத்தானவை'' என்றார்.

டிராட்ஸ்கியைப்பொறுத்தவரை சோவியத் யூனியனில் சோசலிச வளர்ச்சி பற்றிய அனைத்து பிரச்சனைகளும் இறுதி ஆய்வில் பார்க்குமிடத்து உலக சோசலிசப் புரட்சியின் முன்னேற்றத்திலும் அதன் தலைவிதியிலுமே தங்கி இருக்கிறது என்றார், சர்வதேச தொழிலாள வர்க்கபடைகள், சோவியத் யூனியன் மீதான ஏகாதிபத்தியத்தின் முற்றுகையை உடைக்கும் வரைக்கும், சோவியத் தொழிலாள வர்க்கம் முதலாவது தொழிலாளர் அரசின் தேசிய கோட்டைக்குள் ''தக்கவைக்க'' எவ்வளவு அதிகம் தொலை நோக்கிப் பார்க்கும உள்நாட்டுக்கொள்கையினாலும் கூட தனியே சொந்தமாக சிறந்த நிலைமைகளை ஒருபோதும் உருவாக்க முடியாது என்றார்,

### ஸ்டாலினின் அதீத சோசலிச வேடம்:

ஸ்டாலின், புகாரினைப் பொருத்தவரையில் அவர்கள் ''குலாக்குகள்'' என்ற செல்வந்த விவசாயத் தட்டு(layer) அமைவதற்கும் வளர்வதற்கும் ஆதாரமும் உற்சாகமும் கொடுத்தனர்: டிராட்ஸ்கியின் இடது எதிர்ப்பு முன்வைத்த வேலைத் திட்டத்தை நிராகரித்து அவர்களுக்கு எதிராக அவர்கள மிகமிக வலது சாரி சமுதாய சக்திகளைஒன்று திரட்டினர். இடது எதிர்ப்பு தொழிலாள வர்க்கத்தை அடிப்படையாகக்கொண்டது எனினும் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேவளர்க்கவேண்டிய புரட்சிகர கூட்டுறவைப் பேணுவ

படிப்பகம்

www.padippakam.com



தைக் கருத்தில் கொண்டிருந்தது.

உள்நாட்டுக் கொள்கையில் மட்டுமின்றி சர்வதேசக் கொள்கையிலும் ஸ்டாலின் அப்போதைய மூன்றும் அகிலத்தின் தலைவராக இருந்த சினோவியேவுக்கு எழுதிய கடிதத்தில் — 'ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியதிகாரத்திற்கு போராட வேண்டாட. முதலில் மற்றவர்கள் வரட்டும் பின்னால் நாம் பார்த்துக் கொள்வோம்.' என்றார். நிலைமை வேறு விதமாக இருந்தது, (1923) இறுதியில் ஜெர்மன் தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது.

தனி ஒரு நாட்டிற்குள் சோசலிசம்' எனும் கொள்கை கொண்டு வரப்பட்டு பாட்டாளி வர்க்க சர்வதேசியம் காட்டிக் கொடுக்கப்பட்டது கம்யூனிஸ்ட் அகிலத்தில்ஸ்டாலின் ஜினோவியேவ் ஆகியோர் கடைப் பிடித்த சந்தர்ப்பவாதக் கொள்கையினால்தான் (1923) ஜெர்மனி, (1926) இங்கிலாந்து. (1927) சீனா ஆகியநாடுகளில் தொழிலாள வர்க்கம் பெரிய தோல்விகளையும் அழிவையும் சந்தித்தது. இதனால் சர்வதேச ரீதியில் சோவியத் யூனியன் தனிமைப் பட்டது.


ஸ்டாலின், புகாரினது சந்தர்ப்பவாதக் கொள்கைகளினால் உள்நாட்டில் 'குலாக்குகளும் வலுவடைந்தனர், அவர்கள் எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சியையும் தோற்றுவித்தனர் அப்பொழுது ஸ்டாலின் ஏற்கனவே கடைப் பிடித்த வலதுசாரி சந்தர்ப்பவாதக் கொள்கையிலிருந்து மறுகோடிக்கு தாவினான். அதாவது வலது சந்தர்ப்பவாதக் கொள்கை இடதுசாரி சாகசவாதமாக மாற்றப்பட்டது அதாவது ஏற்கனவே விவசாயத்தை கூட்டுப்பண்ணையாக படிப்படியாக மாற்றவேண்டும் என்ற இடது எதிர்ப்பின் கொள்கைகளை — இந்த சமயத்தில்ஸ்டாலின் கண்மூடித்தனமாக ஒரே மூச்சில் செயல்படுத்தினான். அது இன்னும் மோசகரமான விளைவுகளை உண்டுபண்ணியது. அதாவது குலாக்குகள் பெருமளவு தானியத்தை எரித்தனர், கால்நடைகளை பொசுக்கினர். படிப்படியாக செயற்படுத்த வேண்டிய கூட்டுப்பண்ணையாக்கல் பலவந்தமாகத் திணிக்கப் பட்டது.

'புதிய ஜனநாயகத்தால், விமர்சனம், சுயவிமர்சனம் ஜனநாயக மத்தியத்துவம்' எனும் திரைகளால் இன்றும் மூடி மறைக்கப்படும்ஸ்டாலின் இடது எதிர்ப்பாளர்களை சிறை வைத்தான். கட்சியை விட்டு பலவந்தமாகப் வெளியேற்றினான்; நாடு கடத்தினான்; படுகொலை செய்தான்.

இந்த 'இடது' திருப்பமானது கம்யூனிச அகிலத்திலும் எந்திரவியல் ரீதியாகவெளிப்பட்டது. சீர்திருத்தவாதிகள், முதலாளித்துவ தேசியவாதிகள் ஆகியோருடன் கூட்டுறவு எனும் கொள்கையானது அதிதீவிர இடது சொற்ஜாலங்களாக மாற்றப்பட்டது இந்த சொற்ஜாலங்களின் பின்னால் பொறுமை யான ஆனால் விடாப்பிடியான போராட்டத்தின் மூலம் தொழிலாள வர்க்கத்தை சமூக ஜனநாயகத்தின் செல்வாக்கிலிருந்து பிரித்தெடுக்க முடியாது போனது.

ஜெர்மனியில் சமூகஜனநாயகக்கட்சி சமூக பாசிசம் என்று கூறி ஸ்டாலினினால்பிரச்சாரம் செய்யப்பட்டது. டிராட்ஸ்கியினாலும் இடது எதிர்ப்பினாலும் வற்புறுத்தப்பட்ட ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம் பலமாக நிராகரிக்கப்பட்டது. எனவே ஒரு துப்பாக்கிக் குண்டு கூட செலவழிக்காமல் ஹிட்லர் ஆட்சிக்குவர முடிந்தது. இதைத் தொடர்ந்து ஸ்டாலின் வலது சாரிப்பக்கம் ஊசலாடினான். 1936ல் பிரான்சு பொதுவேலை நிறுத்தம், 1937ல் ஸ்பெயின் உள்நாட்டுப்போர் ஆகியவற்றிலும். 1939ல் ஹிட்லர் ஸ்டாலின் எதிர்ப்புரட்சிகர ஒப்பந்தத்துடன் — மக்கள்முன்னணிக் கொள்கை—'பாசிசத்திற்குஎதிரான போராட்டம் என்று பிரகடனப்படுத்தப்பட்டு, பல நாடுகளில்(இந்தியா, அல்ஜீரியா உட்பட) தொழிலாள வர்க்கம் 'ஜனநாயக ஏகாதிபத்தியங்களுக்கு அடிபணிய வைக்கப்பட்டது.

'அதீத சோசலிச வேடம் தரித்த 'ஸ்டாலின் 1933ல் சோசலிசம் கட்டியமைக்கப்பட்டது என்று புளுகியபோது 'பாலுக்குக் கூட தட்டுப்பாடு இருப்பது ஏன்' என்று டிராட்ஸ்கி புள்ளிவிவரங்களைக் காட்டி அதனை பொய்யென அம்பலப்படுத்தினார். விவசாயிகள் பிற்போக்கானவர்கள்' என்று டிராட்ஸ்கிசம் கூறுவதாக பொத்தாம் பொதுவாக திரித்துப் பேசுகிறது பு ஜ. டிராட்ஸ்கிசம் மார்க்சிசத்திற்காகப் போராடுகிறது அது தொழிலாள வர்க்கத்தின தலைமையைத்தான் ஏற்கிறதே




கத்தரிக்கோல் நெருக்கடி

ஒழிய பொத்தாம் பொதுவில் விவசாயிகளின் தலைமையை அல்ல. ஏனெனில் விவசாயிகளிடையே பல அடுக்குகள் உண்டு. எனவே கிராமப்புற பாட்டாளிகளான 'விவசாய தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் தான் தொழிலாள வர்க்கத்தின் நேச சக்திகள் என்பதை டிராட்ஸ்கி பல முறை வலியுறுத்தினார். டிராட்ஸ்கிசம்தீர்க்கப்படாதஜனநாயகக் கடமைகளை எதிர்நோக்கியிருக்கும் விவசாயிகளுக்கு தொழிலாள வர்க்கத்தின் தலைமையைக்கொடுக்கிறது.

'டிராட்ஸ்கி விவசாயிகளுக்கு விரோதமானவர் என்று, ஸ்டாலின் தனது அரச அதிகாரத்துவத்தைப் பயன்படுத்தி செய்த பிரச்சாரத்தின் எச்சங்கள் தான் 'புதிய ஜனநாயகம்' கக்குவது. டிராட்ஸ்கி விவசாயிகள் தொடர்பாக என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பதைப் பார்ப்போம். 1923ல் 12வதுகாங்கிரசில் டிராட்ஸ்கி சமர்ப்பித்த அறிக்கையில் சோவியத்யூனியனை எதிர் நோக்கியிருந்த அடிப்படைப் பிரச்சினைகளை பின்வருமாறு விளக்கி இருந்தார். அவர் ஒரு வரைபடத்தின் மூலம் அதனை விளக்கினார். அதில் அவர் விவசாய, தொழில் துறை, உற்பத்தி பொருட்களின் விலைவாசிகளை ஒப்பிட்டு காட்டினார்.

வரைபடத்தில் மேல் நோக்கிச்செல்லும் கோடு அதிகரித்து செல்லும் தொழில்துறை உற்பத்தி பொருட்களின் விலையை காட்டியது. கீழிறங்கும் கோடு விவசாயப் பொருட்களின்விலை வீழ்ச்சியைக் காட்டியது. அதாவது தொழில்துறைப் பொருட்கள்உற்பத்தித்திறன் குறைவின் காரணமாக அதிக செலவினமானதாயும்,எனவே விலைகள்உயர்ந்தும் இருந்தன மாறாக விவசாயப் பண்டங்கள் மலிவாகவும் அதிக அளவிலும் கிடைத்தன. அவற்றின் விலைகள் சரிந்திருந்தன. எனவே விவசாயிகளால் குறைந்த வருவாயைக் கொண்டு தமக்கு வேண்டிய தொழில்துறைப் பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க முடியவில்லை. வரைபடத்தில் இவ்விருகோடுகளும் திறந்த கத்திரிக்கோலைப் போல் இருந்தன. டிராட்ஸ்கி தொழில் துறைப்பொருட்கள் விவசாயத் துறைப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளை ஒப்பிட்டு இந்த நெருக்கடி 'கத்தரிக்கோல் நெருக்கடி' என்று கூறினார். தொழில்துறைப் பண்டங்களின் விலைக்கும் விவசாயப் பண்டங்களின் விலைக்கும இடைவெளி இன்னும் கூடியப்போது சோவியத யூனியனின் ஸ்திரத்தன்மையும், அக்டோபர்புரட்சி நீடித்திருப்பதும் பிரச்சினையாகி விட்டது என்று கூறினார்.

ஏனெனில் அக்டோபர்புரட்சியானது தொழிலாளர், விவசாயிகள் இருவரிடையேஏற்பட்ட கூட்டை அடிப்படையாகக் கொண்டது. விவசாயிகளுக்கு மலிவான தொழில் உற்பத்திப் பொருட்களை அளிக்க முடியவில்லையானால், தொழிலாளர் விவசாயிகள் இவர்களிடையே பிளவு ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்று எச்சரித்தார்.

இதன் காரணமாக நாட்டுபுறத்திற்கும் நகர்ப் புறத்திற்கும் இடையில் பகுத்தறிவுபூர்வமான பொருளாதார உறவை உண்டு பண்ணுவதற்கான தொழில்துறை உற்பத்தி பொருட்களின் விலைகளைக் குறையச் செய்யும் வண்ணம் தொழில் துறையில் திட்டமிட்ட வளர்ச்சிக்கு அரசு கவனமெடுக்க வேண்டும் என்று டிராட்ஸ்கி முன் மொழிந்தும். அரசின் வருவாயை உயர்த்த வரிவிதிப்புக் கொள்கையை பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார். செல்வந்த விவசாயிகளின் மேல் வரிவிதிப்புக் கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும் என்று கூறினார். அதே வரி விதிப்புக்கொள்கை விவசாயி ஒவ்வொரு ஆண்டும் கடந்த ஆண்டைவிட அதிக வருமானம் ஈட்டுகின்ற அடிப்படையில்அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார். பொருளாதார வளர்ச்சிக்கு சோவியத் அரசாங்கம இரண்டு முக்கியமான நெம்புகோல்களைப் பெற்றுள்ளது என்று கூறினார். குறுகிய நெம்புகோல் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கை: பெரிய நெம்புகோல் நீண்டகால சர்வதேச சோசலிசப் புரட்சி என்றகொள்கை.

அதாவது வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளவர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கையில் எடுத்தவுடன் சோவியத் தொழில்துறை வளர்ச்சிக்கான அவசியமான வசதிகளை அளிக்கும் என்றார். 1923-ல் கொண்டு வரப்பட்ட இத் திட்டம தள்ளுபடி செய்யப்பட்டதுடன் டிராட்ஸ்கியும் ஏனைய தோழர்களும் நாடு கடத்தப்பட்டனர் ஆனால் டிராட்ஸ்கி எச்சரிக்கை செய்தவாறே 1928, 29-ல் தானிய நெருக்கடி தோன்றியது.

தொழில் துறைப் பொருட்கள் மலிந்து கிடைக்காததால் அதிருப்தியடைந்த விவசாயிகள் குறிப்பாக குலாக்குகள் - செல்வந்த விவசாயிகள் நகரங்களுக்குத் தானியங்களைக் கொடுக்காமல் பதுக்கத் தொடங்கினர். செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட தட்டுப்பாடுகள் விவசாயப்பண்டங்களின் விலையைக் கூட்டும் என்று கருதினர். ஆனால் 1923இலிருந்து செல்வந்த விவசாயிகளின் வளர்ச்சிக்கு துணையாக இருந்த ஸ்டாலினும் அரசு அதிகாரத்துவமும் முரட்டுத்தனத்துடனும் பீதியுடனும் தீர்க்கமாக ஆராயாமலும் திடீர் "இடதுசாரிப்பக்கம்" திரும்பினர். பலவந்தகூட்டுப் பண்ணைமயமாக்கல் நடந்தது அதுவும் மிருகத்தனமாக நடத்தப்பட்டது. எனவே பெரிய அழிவு ஏற்பட்டது.

லெனின 1919 ஏப்ரல் இது பற்றி எட்டாவதுகாங்கிரசில் ஏற்கனவே எச்சரித்திருந்ததைப் பார்ப்போம

"நாம் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொண்டபோது ஒட்டு மொத்தமாக விவசாயிகளின் நோக்கமும் ஒன்றாகவே இருந்தது—நிலப்பிரபுக்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதே அது ஆனால் பெருவீத சாகுபடி முறைக்கு எதிரான அவர்களது தப்பெண்ணம்இன்றும் கூட நீடிக்கிறது. பெரிய பண்ணை இருக்குமானால் அவன் ஒரு பண்ணை ஆளாகவே மறுபடியும் ஆகிவிட நேரும் என்று கருதுகிறான். அது தவறு என்று திண்ணம் ஆனால் பெருவீத சாகுபடி முறை பற்றிய விவசாயியின் கருத்து ஒருவிதப் பகைமை உணர்ச்சியுடனும், நிலப்பிரபுக்கள் எவ்வாறு மக்களை ஒடுக்கினார்கள் என்பதன் நினைவுகளோடும் பந்தமுடையது. அந்தஉணர்வு இன்னும் நீடிக்கிறது, அது மறைந்து விடவில்லை. இங்கு நிலைமையின் மெய்யியல்பு காரணமாகவே பலவந்த முறைகளால் எதையும் சாதிக்க முடியாதுஎன்ற உண்மையை நாம் குறிப்பாயும் அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும்............ ...

இங்கு பலவந்தம் முழு லட்சியத்துக்கும் நாசம் விளைக்கும்,

—லெனின்

தேர்வு நூல் தொகுதி 9
பக்கம் 267

ஸ்டாலினால் வளர்வதற்கு அனுமதிக்கப்பட்ட குலாக்குகள் தானியங்களையும், கால்நடைகளையும் எரித்தனர். குலாக்குகள் முழுமையாக அழிக்கப்பட்டனர் இதற்கும் சோவியத் பொருளாதாரத்தை பகுத்தறிவு பூர்வமாக வளர்ப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆனைச்சாக்காக வைத்து பயங்கர ஆட்சி மக்கள்மீது திணிக்கப்பட்டது தொழிலாளர்கள், விவசாயிகள் ஸ்டாலினது கொள்கையை விமர்சித்தவர்கள், கட்சி ஊழியர்கள் பயங்கரமான முறையில் ஒடுக்கப்பட்டனர்

### வரலாறு எதை நிருபித்தது—டிராட்ஸ்கிசத்தையா? ஸ்டானிலிசத்தையா?

"டிராட்ஸ்கிய வாதம் அடிப்படையில் பிழையான தென்று சித்தாந்த பூர்வமாகவும் நடைமுறையிலும் நிருபிக்கப்பட்டது. அதை ஏற்காத டிராட்ஸ்கிய வாதிகள் புரட்சிகர இயக்கங்களை சீர்குலைப்பது" என்று பூனைக் கண்ணை மூடிஉலகம இருள் என்று ஒப்பாரி போடும் புதிய ஜனநாயகத்துக்கு கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியன், சீனா ஆகியவற்றில் ஸ்டாலினிசக் கொள்கையான "தனி ஒரு நாட்டில் சோசலிசத்தின்திவாலாதன்மை வரலாற்று ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் நிருபிக்கப்பட்டிருப்பதுதெரியவில்லையாம், தங்களது ஸ்டாலினிச படுகொலை எனும் நடைமுறை மூலம் டிராட்ஸ்கியையும், டிராட்ஸ்கிஸ்டுகளையும் ஒழித்துக் கட்டியதன் மூலம நிருபிக்கப்பட்டதாக இறுமாப்பு விடுகின்றது புதிய ஜனநாயகம்.

கமப்யூட்டர், செய்தித்தொடர்பு சாதனங்களில் ஏற்பட்ட வளர்ச்சி, பூகோளமயப்படுத்தப்பட்ட உற்பத்தி அனைத்தும் இன்று உலகப் பொருளாதாரத்தை முன்னெப்போதுமில்லாத வகை ஒருங்கிணைந்துள்ளது. எனவே உலக ரீதியான உற்பத்தி

(20ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# மார்க்சிச விரோத புதிய ஜனநாயகமும்....3

முறைக்கும் தேசிய அரசுகளுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மை அடைந்து வரும் வேளையில்.....................இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஸ்டாலினிசத்தின் எதிர்ப் புரட்சிகர ஒப்பந்தத்தால் ஏகாதிபத்தியத்துடன் போடப்பட்ட போருக்குப் பிந்திய கால உடன்படிக்கைகளும், அது பேணிய சமநிலையும் தகர்ந்து விட்டன. எனவே 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற பிற்போக்கு தேசியவாதக்கொள்கையின் அடிப்படையில் கட்டப்பட்ட பல வீனமான கண்ணிகளில் வெடிப்பு ஏற்பட்டு, ஸ்டாலினிச அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிந்தன, அத்தோடு மட்டுமல்லாமல் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம் 'பெரஸ்துரொய்கா' வேலைத்திட்டத்துடன் வெளிப்படையாகவே ஏகாதிபத்திய மூலதனங்களுக்கு தரகு முதலாளிகளாக மாறுகின்ற நிலைமை துரிதமாக வளர்ச்சி அடைகிறது. ஏனைய முதலாளித்துவ நாடுகளில் அந் நாடுகளில் உள்ள ஸ்டாலினிஸ்டுகள், நெருக்கடியிலுள்ள முதலாளித்துவ அரசுகளை பேணுவதில் பங்காளிகளாகவும் செயல்படுவதிலிருந்தும் டிராட்ஸ்கியினுடைய மார்க்சிசத்திற்கான போராட்டமும, நான்காம் அகிலத்தின் போராட்டமும் நிரூபிக்கப்பட்டுள்ளன. ''வரலாற்றின் விதிகள் அதிகாரத்துவ இயந்திரத்தைவிட சக்திவாய்ந்தவை'' என்ற டிராட்ஸ்கியின் ஆய்வு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

## பிரஸ்ட்—லிடோவ்ஸ்க் ஒப்பந்தம்

ஜெர்மானிய ஏகாதிபத்தியத்துடன் ஒப்பந்தம் செய்ததற்குக் காரணம் 'தனி ஒரு நாட்டிற்குள் சோசலிசத்தைக் கட்டி விட முடியும் என்பதற்காக அல்ல.

ஏற்கனவே 14 நாடுகள் சூழ்ந்துநின்று தாக்கியபோரிலும் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளால் தூண்டிவிடப்பட்ட வெண்சேனைக்கு எதிராகப் போராடிய டிராட்ஸ்கியினால் அமைக்கப்பட்ட செஞ்சேனையானது மிகக் களைத்திருந்தபடியினாலும், உள்நாட்டுப் போரின் காரணமாக பலவீனமடைந்தருந்ததாலு‍ம். அந்த நிலையில் ஜெர்மனியுடன் போரை நடத்துதல் இருக்கிற சோவியத் அரசை அழிப்பதற்குத்தான் சாதகமாக இருக்கும் என்று கருதியே, ஜெர்மனியுடன் ஒப்பந்தம் போடப்பட்டது. ''புரட்சிப் போருக்குத்தயார் செய்வதற்காக நாம் பிரெஸ்ட் சமாதானத்தைஏற்றுக் கொள்வோம்; இதைவிடச் சிறந்த எதுவும் நமக்கு கிடைக்கப் போவதில்லை''

—லெனின்
தொகுதி நூல் 7
பக்கம் 259

ஒரு வளர்ச்சி அடைந்த நாட்டில் (அன்றைக்கு எதிர் பார்த்திருந்தது ஜெர்மனி) தொழிலாள வர்க்கம் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் வரை புதிய பொருளாதாரக் கொள்கையையும், பிரஸ்ட் சமாதான ஒப்பந்தத்தையும் கடைபிடிக்க வேண்டிய நிலை இருந்ததால்தான் அது செயல்படுத்தப்பட்டது, மாறாக தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டிஅமைக்கமுடியும்'என்று ஒருபோதும் அல்ல, 'பிரட்ஸ் லிடோவ்ஸ்க்' ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததன் நோக்கம் என்ன என்பதையும் இறுதியில் லெனின் டிராட்ஸ்கியின் ஆதரவு பெற்ற பின்னரே இக் கட்சியில் வெற்றி பெற்றது என்பதையும் 'புதிய ஜனநாயகம்' மறைத்துள்ளது. டிராட்ஸ்கி முதலில் ஆதரிக்க மறுத்ததன் காரணம் என்ன என்பதை ஆராய வேண்டும். அதை விடுத்து 'தனி ஒரு நாட்டில் சோசலிசம் வெற்றிபெறக் கூடாது என்பதற்காகத்தான் டிராட்ஸ்கிஸ்டுகள் அதை ஆதரிக்கவில்லை என்று' புதிய ஜனநாயகம் ஸ்டாலின் காலத்து வாந்தியையே திரும்பக் கக்கியுள்ளது. உண்மையில் பிரஸ்ட் சமாதானம் தொடர்பாக போல்ஷெவிக் கட்சியில் மூன்று நிலைப்பாடுகள் இருந்தன. (1) லெனின் ஆதரித்த—சமாதானம் செய்யவேண்டும், (2) டிராட்ஸ்கி ஆதரித்த — பேச்சு வார்த்தை நாட்களை இழுத்தடிப்பதன் மூலம் ஜெர்மன் ஏகாதிபத்தியததை நிர்மூலமாக்க ஜெர்மன் தொழிலாள வர்க்கத்தின் எழுச்சிவரை காத்திருத்தல் (3) புகாரின் ஆதரித்த— சமாதானம் வேண்டாம் போர்த்தொடுத்தல் ஆகியனவாகும்.

லெனினுடைய தீர்மானம் இரண்டு முறை தோல்வி அடைந்த போதிலும், மூன்றாவது முறை டிராட்ஸ்கி ஆதரித்து வாக்களித்ததும் வெற்றி பெற்றது ஆயினும் பிரஸ்ட் சமாதானத்தில்—நாட்களை இழுத்தடித்தல் என்ற தத்திரோபாயததை லெனினுடன் ஏற்கனவே பேசியபடி தான் டிராட்ஸ்கியும் செயல்பட்டார் ஆனால் 'நேரம் கழிந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்ட லெனின் இனித தாமதிக்கக் கூடாது என்று சமாதானத்திற்கு போகும்படி' கூறுகிறார்.

''இப்போது நான் தோழர் திரோத்ஸ்கியின் நிலையைக் குறித்துச் சிலவார்த்தைகள் கூறவேண்டும். அவரது நடவடிக்கையில் இரு அம்சங்கள் இருக்கின்றன;பிரஸ்ட் பேச்சு வார்த்தைகளின் தொடக்கத்தில் அவர் அந்தப் பேச்சு வார்த்தைகளை அற்புதமாகக் கிளர்ச்சிப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியபொழுதுநாம் எல்லோரும் தோழர் திரோத்ஸ்கியுடன் உடன்பாடானதாக இருந்தோம். என்னுடன் நடத்திய உரையாடலின் ஒரு பகுதியை எடுத்துக்காட்டியிருக்கிறார்; ஆனால் ஜெர்மானியர் இறுதி எச்சரிக்கை விடுக்கும் வரையில் தான் நாம் இழுத்தடிப்போம் என்றும் பிறகு விட்டுவிடுவோம் என்றும் எங்களிடையே உடன்பாடு இருந்தது என்பதை நான் இங்கே சேர்த்துக் கூறவேண்டும. ஜெர்மானியர் நம்மை ஏய்த்துவிட்டார்கள் அவர்கள் ஏழுநாட்களில் ஐந்து நாட்களை நம்மிடமிருந்து கவர்ந்து கொண்டார்கள். காரியங்களை தாமதப்படுத்த வேண்டும் என்ற வேண்டும் என்பதுதான்அந்த 'தந்திரோபாயம் ஜெர்மன் புரட்சிக்காக ரஷ்யப் புரட்சியைத்தியாகம் செய்யத்தயார் என்று கூறியது லெனின் தான்.

இதில் லெனினுக்கும் டிராட்ஸ்கிக்கும் சர்வ தேசிய மூலோபாயத்தில் எந்தவித வேறுபாடும் இல்லை, ஆனால் தந்திரோபாயம் பற்றிய கருத்து வேற்றுமை நிலவியது. ஆனால் வரலாற்றை மூடி மறைத்து திரித்துக்கூறும் புதிய ஜனநாயகம் பிரஸ்ட் சமாதானத்தில் ஸ்டாலின் என்ன நிலைப்பாட்டை எடுத்தார் என்பதுபற்றி ஆதாரத்துடன் கூறுமா?

1917ஆம் ஆண்டு மத்திய கமிட்டியினால் வெளியிடப்பட்டரகசிய குறிப்புகளைப் பார்ப்போம் அரசு பதிப்பகத்தார் 1929)

ஜனவரி 24, 1918 கூட்டத் தொடரில் தோழர் டிராட்ஸ்கி பின்வரும் கொவகையை வாக்கெடுப்புக்குபிரேரித்தார் ''நாம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவோம் ஆனால் நாம் சமாதானத்தை முடிவுக்குக் கொண்டுவர மாட்டோம்''

(அதே பக்கம் 207)

ஆதரவாக வாக்குகள் 9; எதிராக 7

டிராட்ஸ்கியின் இந்தக் கொள்கை தொடர்பாக ஸ்டாலின் நிலைப்பாட்டைப் பார்ப்போம்.

பிப்ரவரி 1 கூட்டத்தொடரில் ஸ்டாலின் ''இந்த சிக்கலானநிலைமையிலிருந்துவெளியேறும் மார்க்கம் டிராட்ஸ்கி முறையில் திரோத்ஸ்கியின் போர்த் தந்திரங்கள் சரியான வையாய் இருந்தன; ஆனால் போர்நிலை முடிந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்ட போதிலும் நாம் ஜெர்மனியருடன் சமாதான உடன்பாட்டில் கையொப்பமிடவில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகு அவர் போர்த்தந்திரங்கள் தவறானவையாகி விட்டன, சமாதானத்தை ஏற்கவேண்டும் என்று நான் நிச்சயமான யோசனையை முன்வைத்தேன் பிரஸ்ட் சமாதானத்தைவிடச் சிறந்த எதையும் நாம் பெற்றிருக்க முடியாது.''

—லெனின்
தொகுதி நூல் 7 பக்கம் 258

ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்யவும் ஜெர்மன் தொழிலாள வர்க்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கவும் பிரஸ்ட்—லிடோவ்ஸ்க் பேச்சுவார்த்தையை பயன்படுத்தவேண்டும் என்று டிராட்ஸ்கியினால் ஆலோசனை கூறப்பட்ட இந்தபோர்த்தந்திரத்தின் அடிப்படைக் கொள்கையை லெனின் எதிர்க்கவில்லை. அதாவது ஜெர்மன் புரட்சியை ஊக்குவிக்க சாத்தியமானதை எல்லாம் செய்யின் நிலைப்பாடான மைய நிலைக்கருத்தாகும்?'

(அதே தொகுதி பக்கம் 214)

இனி ஸ்டாலினது சொந்த நிலைப்பாடு என்னவாக இருந்தது என்பதை அந்த ரகசியக் குறிப்புகள் காட்டுவதைப் பார்ப்போம்.

பிப்ரவரி 23 கூட்டத்தொடர்

தோழர் ஸ்டாலின் ''நாம் கையொப்பமிடத் தேவையில்லை ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும்.''

தோழர் லெனின் '' நாம் கையொப்பமிடத் தேவையில்லை என்று ஸ்டாலின் கூறுவது தவறாகும். இந்த நிபந்தனைகள் கையெழுத்திடப்பட்டாக வேண்டும். நீங்கள் அவற்றில் கையொப்பமிடவில்லை எனில், மூன்று வாரங்களுக்குள் சோவியத் ஆட்சியாதிகாரத்தின் மரண தண்டனையில் கையெழுத்திட வேண்டிவரும்''.

(அதேகுறிப்புகள் பக்கம்249)

''ஸ்டாலினை நிராகரித்து, தோழர் உரிட்ஸகி கூறுகையில் நிபந்தனைகள் ஏற்கபட வேண்டும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும், ஆனால் பேச்சு வார்த்தைகள் தொடர்வது சாத்தியமல்ல' என்றார். (அதே ஆவணங்கள் பக்க249) பிப்ரவரி 18.ல் ஜெர்மனியர்கள் ஏற்கனவே டிவைன்ஸ்க்கை கைப்பற்றி இருந்தார்கள் அவர்களது தாக்குதலானது அசுரவேகத்துடன் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. இப்போது இழுப்பதும் விடுவதுமான கொள்கை காலாவதியாகிபோய்விட்டது.

ஆனால் பெப்ரவரி 23 ல் ஸ்டாலின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டாம் ... பேச்சை முன்னெடுச்செல்லுங்கள் என்ற நிலைப்பாட்டை முன் வைத்தான்.

பேச்சு வார்த்தையைப் பொருத்தமட்டில ஸ்டாலினுக்கு சொந்தமான நிலைப்பாடு எதுவும் இருக்கவில்லை. தனக்கென்று அமைதியாக இருப்பது, வலகிநிற்பது ஊசலாடுவது இவற்றையே ஸ்டாலினின் நிலைப்பாகக் காண முடிந்தது.

எனவே பிரஸ்ட்—லிடோவ்ஸ்க் ஒப்பந்தம் தொடர்பாக மூலோபாயததில் டிராட்ஸ்கிக்கும் லெனினுக்கும் எந்த விதகருத்து வேறுபாடும் இருக்கவில்லை; தந்திரோபாயத்தில் தான் கருத்து வேறுபாடு இருந்தது. ஆனால் ஸ்டாலினைப் பொறுத்தமட்டில் ஊசலாட்டம மட்டுமில்லாமல் மூலோபாயத்திலேயே லெனினுடன் வேறுபட்டதை அறியலாம். அது தான் சோசலிசத்தை உத்தரவாதம் செய்யும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் மூலோபாயத்திற்கு நேர் எதிரான 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' எனும் கொள்கையை ஸ்டாலின் தூக்கிப் பிடிப்பதற்கு வழிவகுத்தது.

நடந்தவற்றை மூடி மறைத்து தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை தோல்வியடையச் செய்வற்குத்தான் டிராட்ஸ்கி அப்படிச் செய்தார் எனவரலாற்று உண்மையை புரட்டுகிறது பு.ஜ.

(தொடரும்



லெனின், டிராட்ஸ்கி—அக்டோபர் புரட்சியின் இணைத்தலைவர்கள்


# தொழிலாளர் பாதை

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள,தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா,தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் "தொழிலாளர் பாதை" மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

**தொடர்புகளுக்கு**

**Thollalar Pathai**
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN

*Printed in West Germany*
*Published by Neue Arbeiterpresse,*
*Alfredstr. 71, D - 4300 Essen 1*